# வளை ஓசை

## நாதம்-08

## 2018




பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளை ஓசை

## நாதம் - 08

## 2018

*பிரதேச கலாசாரப் பேரவை,*

பிரதேச செயலகம்,

கண்டாவளை,

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலின் பெயர்**
வளையோசை "நாதம் – 08"

**நூல்வகை**
ஆண்டிதழ்

**முதற்பதிப்பு**
கார்த்திகை – 2018

**தொகுப்பு**
மலர்க்குழு,
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், கண்டாவளை.

**பதிப்புரிமை**
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

**வெளியீட்டெண்**
12

**தாள்வகை**
70 gsm Bank Paper

**பிரதிகள்**
300

**அட்டை வடிவமைப்பு**
த. கிருஷ்ணகுமார்

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.672B, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**
95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்-கண்டாவளை

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය-කණ්ඩාවලෙයි

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT,KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே .....


| | | | |
|---|---|---|---|
| 1. | இசைக்கலை | - | 01 |
| 2. | பத்தாண்டின் முன் சென்றேன் இன்று | - | 04 |
| 3. | கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவிற்கு.... | - | 05 |
| 4. | தொல்லியல் நோக்கில் பூநகரியின் | - | 06 |
| 5. | எழில் விஞ்சும் வளை ஓசையே | - | 10 |
| 6. | இரண்டு கிணறுகள் | - | 11 |
| 7. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | - | 15 |
| 8. | மரணிக்கக்கூடாது மனிதம் | - | 18 |
| 9. | குடும்பம் | - | 20 |
| 10. | அருகிவரும் சமயக்கல்வியும்.... | - | 23 |
| 11. | செதுக்கும் கலை | - | 25 |
| 12. | வலி தந்த வாழ்வு.... | - | 26 |
| 13. | பனையோடு இயைந்த வழக்கு | - | 27 |
| 14. | துஸ்பிரயோகம் | - | 31 |
| 15. | வாடியபூக்கள் | - | 32 |
| 16. | சின்னத்திரை பெரிய சிறை | - | 35 |
| 17. | சேலை வாங்க ஆசை | - | 38 |
| 18. | மீளாத வாழ்வு | - | 39 |
| 19. | இயற்கையைப் பேணுவோம் | - | 42 |
| 20. | குடி குடியைக் கெடுக்கும் | - | 45 |
| 21. | மரணித்த இதயங்கள் | - | 46 |
| 22. | இலக்கியங்கள் கூறும் பரிபூரண மனிதன் | - | 48 |
| 23. | என்றும் அழியா என் தமிழ் | - | 51 |
| 24. | உறவாகிய உறவுகள் | - | 53 |
| 25. | நாட்டுப்புற இலக்கியத்தில் எமது வைத்திய முறைகள் | - | 56 |
| 26. | உயிர் கொண்ட தொடர் நாடகம் | - | 62 |
| 27. | இலங்கையின் நீதிமன்ற பதவனியும்... | - | 64 |
| 28. | எம்முன்னோர் வாழ்வியலில் நல்லாட்சி... | - | 68 |
| 29. | குறள் காட்டும் நட்பு | - | 72 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழிக்கும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும்
எல்லை அறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

மீனாட்சி சுந்தரனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவைக் கீதம்

தாளம் : ஆதி
இராகம் : (தீரசங்கராபரணம் 29வது ஜன்னியம்) பெஹக்

**பல்லவி**

வளம் கொழிக்கும் கண்டாவளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

**அனுபல்லவி**

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

**சரணங்கள்**

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்

(வளம்)

**"சோ. ப"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. திரு. த. பிருந்தாகரன்
   கலாசாரப் பேரவையின் தலைவரும்,
   பிரதேச செயலாளரும்,
   கண்டாவளை.

2. திரு. ம. பிரதீப்
   உதவிபிரதேச செயலாளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

3. திரு. சி. குகதாசன்
   கணக்காளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

4. திரு. பூ. ராஜ்வினோத்
   உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

5. திருமதி. து. தனுஷா
   கலாசாரப் பேரவையின் செயலாளர்,
   கலாசார உத்தியோகத்தர்,
   கண்டாவளை.

6. இ. யசோதரன்
   அபிவிருத்தி உத்தியோகத்தர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது எனும் வாக்கிற்கமைய இவ் வையகத்தில் உயர் பிறப்பாகிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் மிகவும் சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் எமக்கென முன்னோர் வகுத்துள்ள பண்பாட்டு விழுமியங்களை எம் கண்ணோடு சேர்த்து எம் வாழ்விற்கு கண் எவ்வளவு அவசியமானதோ அதே போன்று நம் கலை கலாசார பண்பாடுகளும் முக்கியமானவையென்பதனை ஒவ்வொருவரும் தம் மனதிருத்தி எம் வாழ்வில் மட்டுமல்லாது எல்லோர் வாழ்விலும் கலாசார பண்பாடுகள் மிளிர நல்வித்திட்டு விருட்சமாக்க வேண்டும்.

அவ்வாறானதொரு செயற்பாட்டின் அங்கமாகவே கண்டாவளைப் பிரதேச செயலகத்தினரால் வருடா வருடம் வெளியிடப்பட்டு வரும் வளை ஓசை மலரானது கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் ஓர் நூல் வடிவமாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்வருட வளை ஓசை (நாதம் 08) ஆக அனைவரினதும் கரங்களிலும் மலர விருக்கின்றது. இம் மலர் சிறக்கவும், இவ்வெளியீட்டு விழா சிறப்புற அமையவும், இந்நிகழ்வை சிறப்பாக நடாத்தி வரும் பிரதேச செயலகத்தினருக்கும், நூலிற்கு சிறந்த ஆக்கங்களை வழங்கிய கலைப் படைப்பாளிகளுக்கும் எல்லாம் வல்ல புளியம் பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் திருவருள் வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

"சாமஸ்ரீ தேசமானிய"
**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்,**
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கண்டாவளைப் பிரதேச செயலக கலாசார பேரவையினரால் வருடா வருடம் வெளியிடப்படும். வளை ஓசை நாதம் எனும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஒரு இனம் அல்லது ஒரு சமூகம் விடுதலை பெறுவதற்கு தூர நோக்கு பார்வையை கருத்தில் கொண்டு நடாத்தப்படும் போராட்டத்தில் பயன்படுத்தப்படும். ஆயுதமாக எழுத்துக்கள் காணப்படுகின்றன. இத்தகைய எழுத்துருக்களால் ஆன ஆவணங்கள் தான் உண்மையையும், நீதியையும் நிலைநாட்டி, விடுதலைக்கான தேவையை உணர்த்தி சாட்சி சொல்லும் பெட்டகமாக வலம் வருகின்றது.

அந்த வகையில் கண்டாவளை பிரதேசம் காலத்தின் அறிகுறிகளை இனங்கண்டு, இப்பிரதேச மக்களின் பாரம்பரிய கலை, கலாசாரம், பண்பாடு, சமயம் ஆகிய இருப்புக்களின் தேவையை உறுதி செய்து எதிர்கால மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உருவாகின்ற 8 ஆவது மலர் சிறப்பம்சமாகும்.

எனவே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வாழ்த்தி இப்பணி தொடர்ந்து இடம்பெற ஆண்டவர் இயேசுவின் ஆசீர்வாதம் உங்கள் அனைவருக்கும் நிறைவாய்க் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

**வணபிதா, அன்ரனிவின்சன் சில்வெஸ்ரார்ஸ்**
பங்குத்தந்தை,
புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்,
தர்மபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையினால் கடந்த எட்டு(8) வருடங்களாக தொடராக வெளியிடப்பட்டு வரும் வளை ஓசை நாதம் 8 வது மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேரானந்தம் கொள்கிறேன்.

வருடந்தோறும் பிரதேச படைப்பாளிகளை ஊக்குவித்து அவர்களது தரமான படைப்புக்களை ஆவணப்படுத்தும் ஊடகமாக வளை ஓசை எனும் நூல் வெளியிடப்படுகிறது. காலத்தின் தேவை அறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சி பாராட்டுதலுக்குரியது. இனம்சார் பண்பாடுகளையும், வரலாற்றினையும் அறிந்திருப்பது எமது தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்க உதவுவதுடன் அவற்றை எமது எதிர்கால சந்ததியினருக்கும் கையளிக்க உறுதுணையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

அந்தவகையில் நீர்வளமும், நிலவளமும் அதனுடன் இணைந்ததாக வேளாண்மை மற்றும் பல்துறை விருத்திகளும் வளம்பெற்று பாரம்பரிய கலை வடிவங்களின் இருப்பிடமாகத் திகழும் கண்டாவளைப் பிரதேசத்தின் சமூக பண்பாட்டு அம்சங்களைப் பேணவும் அதனை மேம்படுத்தவும் 'வளை ஓசை' எனும் கலை இலக்கிய மலரை வெளியீடு செய்யும் இவ்வரிய முயற்சியில் ஈடுபடும் பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள், மலர்க்குழுவினர், மலர் சிறக்க காத்திரமான ஆக்கங்களை வழங்கிய படைப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலர் சிறப்பாக வெளிவரவும் கலாசார விழா சிறப்பாக நடைபெறவும் இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கண்டாவளைபிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "வளை ஓசைநாதம் - 8"மலருக்கு வாழ்த்துச் செய்திவழுங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கண்டாவளைபிரதேசத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், புவியியல் மற்றும் மக்களின் வாழ்க்கைமுறை) ஆகியவற்றை ஆவணப்படுத்தும் விதமாக இம் மலரானது அமைந்துள்ளமைபாராட்டத்தக்கதாகும்.

'மனிதன் ஒரு சமூகவிலங்கு' சமுகம் எனும் சங்கிலியால் இறுக்கமாககட்டப்பட்டுள்ளான். அச்சமூகத்தின் ஒட்டுமொத்தவிடயங்களிலும் மனிதன் உள்ளீர்கப்பட்டுள்ளான். எனவே.ஒருசமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கைமுறைகளை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் நிலைகொண்டுள்ளது. நல்ல சமூக மயமாக்கத்தின் மூலமாகசிறந்தமனிதர்களை உருவாக்கவேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எம் அனைவருக்கும் உரியதாகும்.

எமது எதிர்காலத்தின் சொத்துக்களான பிள்ளைகளை சரியான வழியில் வழிநடத்தி சிறப்புற வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பும் எமக்குரியதாகும். ஒருசமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றன காத்திரமானவை. பிரதேசத்திற்கானசிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக்கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனைபலரும் அறியச் செய்யும் முயற்சியாக இம் மலர் அமையும் எனநம்புகின்றேன். இன்றையகாலத்தின் தேவையாகஎமதுபண்பாடும் எங்களின் தொன்மங்களும் அடுத்ததலைமுறையினருக்கு எடுத்துச் செல்லவேண்டியகடப்பாடு கொண்டது. கண்டாவளைபிரதேசமானதுசிறந்தவளங்களைக் கொண்டுகாணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது. இப் பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள் வரலாறு. (தொல்லியல், புவியியல் நிலமைகள், மற்றும் கலையம்சங்கள் ஆவணப்படுத்தப்படுவது பாராட்டுக்குரியவிடயம்.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரபேரவையினர் அனைவருக்கும் எனதுநல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்.**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் நடைமுறை வாழ்வில் அவற்றினைப் பின்பற்றி ஒழுகுகின்ற மரபு மக்களிடையே அருகி வருகிற இக்காலத்தில் அவற்றினைப் பேணிப் பாதுகாக்கவும் அவை மக்களிடையே மரபு பிறழாது சென்றடையவும் மக்கள் பின்பற்றி ஒழுகவும் பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார விழாக்களையும் அதனோடிணைந்த வகையில் மலர் வெளியீடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் 'வளை ஓசை - நாதம் 8' இற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர்ந்த, ஓங்கியுயர்ந்த தென்னந்தோப்புக்கள், செந்நெல் வயல் நிலங்கள், கற்பகதருக்கள், பன்நெடுங்காடுகள், கடல் நீரேரிகள், குளங்கள், ஆறுகள், வாய்க்கால்கள், உப்பளங்கள், பூர்வீக கிராமங்கள், பண்டைய போக்குவரத்து மார்க்கங்கள், பாரம்பரிய வாழ்வியல் முறைகளை வெளிப்படுத்துகின்ற அடையாளச் சின்னங்கள், தொல்லியல் எச்சங்கள், ஆன்மீக தொன்மங்கள் எனப்பல சிறப்பு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது கண்டாவளை பிரதேசமாகும்.

கண்டாவளைப் பிரதேச செயலகம் மருவி,மறைந்து, புதைந்து கொண்டிருக்கின்ற கலை ,கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும், வரலாற்று அடையாளச் சின்னங்களையும், வழக்காறுகளையும் தூக்கி நிறுத்தி அதனைப் பாதுகாத்து வளர்க்கும் நோக்கிலும் பிரதேச எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் சிறப்பு ஏற்பாடாக வருடந்தோறும் 'வளை ஓசை' என்னும் நூலினை வெளியிட்டு வருகின்றனர். இவ்வருடம் அப்பிரதேசத்தின் படைப்பிலக்கிய வாதிகளின் பல்துறை ஆக்கங்களுடன் வெளிவருகின்ற 'நாதம் 8' மலருக்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும், மலர் முழுமை பெற உழைத்த பிரதேச செயலர், மலர்க்குழுவினர் மற்றும் கலாசாரப் பேரவையினர் ஆகியோரினது அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வளை ஓசையின் நாதம் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் ஒலிக்க எல்லாம் வல்ல ஆண்டவனது அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கண்டாவளை பிரதேச கலாசார பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படும் வளை ஓசை நாதம் 08 இதழுக்கு வாழ்த்து செய்தி வழங்கும் இக்கணம் என்னுள்ளம் உவகையில் ஊறிப்போகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் கண்டாவளை பிரதேசத்திற்கு தனியான இடமுண்டு 'உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார்" என்ற கூற்றிற்கு இணங்க வேளாண்மையினாலே வளம் பெருக்கி பெரு வாழ்வு வாழும் மக்களின் பூமி கண்டாவளை. வாழ்வின் செழிப்பிற்கு உதவும் வேளாண்மையுடன் ஏனைய தொழில் முறைகளையும் பின்பற்றிய பிரதேச மக்கள் காலத்திற்கு காலம் தமது கலைத்துவ ஆற்றலை இசை நாடகம், நாட்டுக்கூத்து, மற்றும் நாடகம் உள்ளிட்ட கலைகள் ஊடாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இந்த நிலையில் காலாதி காலமாக எமது பிரதேச மக்களினால் பேணப்பட்டு வந்த பிரதேசத்தின் கலை, கலாசாரம், வாழ்வியல், தொன்மைகள், நாட்டுப்புறவியல் ஆன்மீகம், மரபுரிமைகள் போன்ற விடயங்களை வளர்த்து வரும் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் வகையில் கலையே தமது வாழ்வென செயற்பட்ட கலைஞர்களை கௌரவிக்கும் வகையிலும் கண்டாவளை பிரதேச செயலகம் பிரதேச கலாசார பேரவையினரும் ஆண்டுதோறும் கலாசார விழாவினை நடாத்துவதும் அதன் நினைவாக சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருவதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

வளைஓசை சிறப்பாக வெளிவரவும் நூல் ஆக்கத்தில் அயராது பாடுபட்ட பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், நூற்குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'செந்தமிழ் நாடெங்கும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே எம் தந்தையர் நாடென்னும் பேச்சினிலே ஓர் சக்தி பிறக்குது மூச்சினிலே"

**அபிராமி பாலமுரளி**
உதவிப் பணிப்பாளர்,
பணபாட்டலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தந்த கலைநாதம்
# வளை ஓசை நாதம் - 08



கண்டாவளை பிரதேசம் பரந்த வயல் வெளிகளையும் தொடு வானம் வரை விரியும் கடல் வளத்தையும் நன்னீர் வளத்தையும் அதனோடு நிறைந்த வன வளத்தையும் மற்றும் உழைத்து உரமேறிய மனிதர், பால் சொரியும் பசுக்கள், என எம் சிந்தையை தூண்டி இழுக்கிறது கண்டாவளையின் பேரழகு. எமது பிரதேசத்தின் கலை வெளிப்பாட்டை. பிரதிபலிக்கும் வளைஓசை நாதம் -8 ஒலிக்கும் இக்கணம் என்னுள்ளம் உவகையில் ஊறிப்போகிறது. தமிழும் தமிழர் தம் வாழ்வும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கலாசார செழுமையை கொண்டது அத்தகைய இனக்குழுமத்தின் பிரதிநிதிகளாய் இருக்கும் நாம் கலாசார அம்சங்களைப் பேணிப்பாதுகாத்து இன்றும் பலவருடங்கள் எம் சந்ததிக்காய் வாழவைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

அத்தேவையின் ஓர் துளியைத்தானும் நிறைவு செய்ய வேண்டுமெனும் எம் எண்ணத்தின் விளைவே வளை ஓசையாகும். எம் இனத்தின் மொழியும் பண்பாடும் பழக்கவழக்கங்களும்) பல்லாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தவை அவை இன்றும் தன் வனப்புக்கெடா சீரிளமைத்திறத்தோடு பொலிந்து நிற்பதற்கு இத்தகைய ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உழைப்பு உரமூட்டியிருக்கிறது என்பதை நாம் வரலாற்றில் காணலாம். அவ்வகையில் வரலாற்றில் ஓர் சிறு பதிவாக எமது கண்டாவளையின் படைப்பிலக்கிய பெட்டகமாக வெளிவருவது இந்நூல் உங்கள் அனைவரினதும் கருத்திற்கும் கலை இரசனைக்கும் விருந்தளிக்கும் என நான் நம்புகின்றேன் வளை ஓசை நாதம்-8 நூல் வெளிவருவதற்கு கரம் கொடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் என் நன்றிகள்.

**த. பிருந்தாகரன்,**
கலாசாரபேரவையின் தலைவரும், பிரதேச செயலரும்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை - 2018

வடக்கு மாகாணத்தில் பெருத்த விவசாயப் பூமியாக விளங்குவது கிளிநொச்சி மாவட்டமாகும். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசம் பரந்த வயல் வெளிகளையும் கடல் வளத்தையும் நன்னீர் வளத்தையும் அதனோடு நிறைந்த வன வளத்தையும் கொண்ட கலைகள் ஓங்கி விளங்கும் பூமியாகும். இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்களினை மேம்படுத்தும் நோக்கோடு 2011 ஆம் ஆண்டு முதல் எமது காலாசார பேரவை வினைத்திறனுடன் செயற்படுகின்றது. கடந்தகால வெளியீடுகளின் தொடர்ச்சியாக வளை ஓசை நாதம் - 8 ஓங்கி ஒலிக்கின்ற இவ் இனிய தருணம் மகிழ்வுக்குரியது.

பேரவையின் ஆரம்பச் செயற்குழுவின் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் சார் வெளியீடுகளை வெளியிடுவது எனும் செயற்பாடு தற்போதும் தொடர்கின்றது. முறையே வளை ஓசை நாதம் 1,2,3,4,5,6,7 ஆகியவற்றை வருடந்தோறும் ஓங்கி ஒலிக்கச் செய்த கலாசார பேரவை 2011 ஆம் ஆண்டில் "கலை ஒளி" விருது பெறும் "கலைஞர் விபரத்திரட்டு" என்ற நூலையும் 2014 ஆம் ஆண்டில் "மண்வாசனை" எனும் சிறுகதை தொகுப்பையும் 2015 "நினைவுகளின் நினைவோடு" எனும் கவிதை தொகுப்பையும் 2017 ஆம் ஆண்டு " மலந்த சிந்தனை" எனும் கவிதையோடு இணைந்த சிந்தனை துளியினையும், "கவினுறு கண்டாவளை" எனும் ஆவணப்படத்தையும் பிரசவித்து இன்று பன்னிரண்டாவது வெளியீடாக "வளை ஓசை" நாதம் - 08 இனை வெளியிடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பேரவையின் வெளியீடுகள் இம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களினதும் இப்பிரதேசத்தில் சேவையாற்றி வருபவர்களினதும் படைப்புக்களாகவே அமைய வேண்டும் என்னும் திண்ணிய எண்ணம் எமக்கு உண்டு. அவ்வெண்ணம் இந்நூலிலும் நிதர்சனமாகின்றது. இந்நூல் பிரதேசம் சார் கலை, இலக்கியம், ஆன்மீகம், மரபுரிமைகள், பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள், மற்றும் வரலாறு சார்ந்த விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. அவ்வகையில் எமது பிரதேசத்தின் படைப்பாளிகள், படைப்பார்வலர்களுக்கான நல்ல களமாகவும் வளை ஓசை திகழ்கின்றது என்பது எமது எண்ணம்.

கலாசார விழா மற்றும் "வளை ஓசை" இதழ் வெளியீட்டிற்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டும் குறிப்பிட்ட நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும் எமது கலைவளர்ச்சிக்கு என்றென்றும் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்ற எமது பிரதேசம் சார் பொது மக்களினதும், கலையார்வலர்களினதும், வர்த்தகங்களினதும், பொது அமைப்புக்களினதும் பங்களிப்புக்கள் என்றும் நெஞ்சம் நிறைந்திருக்கும். இம் மலர் வெளியீட்டுக்காக ஆசிச்செய்தி மற்றும் வாழ்த்து செய்திகள் வழங்கிய பெரியோர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் விளம்பரங்களை வழங்கியுதவிய வர்த்தகங்களுக்கும் நூலினை அழகுற அச்சுப்பதித்து தந்த கரிகணன் தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக்கலை

**செல்வி. நடனவதி முருகேசு**
இசை ஆசிரியை (ஓய்வு நிலை)
தர்மபுரம் மத்தியகல்லூரி

லலித கலைகளுட் சிறந்து விளங்குவது இசைக்கலை. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்களில் இசை முதன்மை வாய்ந்தது. இசையில்லாத இயற்றமிழோ நாடகத்தமிழோ இனிமை பெறாதென்ற உண்மையினாலேயே இசையை நடுநாயகமாகப் புகுத்தியுள்ளனர். நாதப்பிரமமாய் விளங்கும் இறைவனை அடைவதற்குச் சிறந்த சாதனமாக விளங்குவது இசையே ஆகும். செவிக்கும் மனதிற்கும் இன்பம் தரவல்லது. மனிதர்கள் மட்டுமன்றி மிருகங்கள் அனைத்தையும் தம் வசப்படுத்தும் தன்மை இசைக்கு உண்டு. உடல் நோய்களையும் தீர்க்கும் சக்தி இசைக்கு உண்டென்பதை ஆராய்ச்சியாளர் கண்டுள்ளார்.

இசையைக் கேட்பதிலும், பயில்வதிலும் எமது உள்ளத்தில் சாந்தம், அமைதி, மனதை ஒருமுகப்படுத்தல் போன்ற சிறந்த பண்புகள் உருவாகும். இன்றைய மக்களின் ரசனைக்கேற்ப கர்நாடக இசையும் பிற இசை வகைகளும் சேர்ந்த ஒரு இசை மரபு வளர்ந்துள்ளது போற்றத்தக்கதே. ஆயகலைகள்(64) அறுபத்து நான்கு என நம் முன்னோர் கலைகளைப் பகுத்துள்ளனர் என அறிகின்றோம். இசைக்கலை மிக உன்னதமாக உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. கேட்பவரின் உள்ளத்தை இசைவிப்பதால் இக்கலைக்கு "இசைக்கலை" எனப் பண்டையோர் பெயர் வைத்தமை சாலவும் பொருத்தமாகும்.

இசைக்கலை ஒன்றினையே கற்றோர், கல்லாதோர் என எவ்வித வேறுபாடுமின்றி அனுபவிக்க முடியும். காதாற்கேட்டு இன்பம் பெறக்கூடிய கலை என்பதால் "சிரவணகலை" என்பர். பலதேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கும் படியான சக்தி இசைக்கே உண்டு. பாஷை விளங்காத எத்தேசத்தவரும் இசையின் ஓசையாலே இணைவர். அகம்பாவம் என்னும் துர்க்குணத்தை ஒழிக்கக்கூடிய சக்தியும் இசைக்கே உண்டு.

"இசை ஒரு நிகரற்ற கலை" எனலாம். கானம் என்பது கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கலையாகும். ஸ்ருதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரித்துப் பாடமுயல்வதினாலும், காலப்பிரமாண சுத்தம் (தாளம்) வழுவாது பாட முயல்வதினாலும் மனிதனுக்கு ஒழுங்குடன் நடக்கும் மனப்பான்மை ஏற்படுகிறது. கடவுளை அறிவதற்கும், வழிபாடு செய்வதற்கும் இசை ஒரு முக்கிய சாதனமாகும். இது ஒரு தெய்வீகமான கலை என்பதற்குச் சிவன் கையில் மருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி தேவியரின் கையில் வீணையும் இருப்பதில் ஓர் ஆழ்ந்த கருத்துள்ளது. மனிதனுக்கு ஈசன் அருளிய குரல் பேசுவதற்கு மட்டுமல்ல, பாடுவதற்கும் கூட என்பதை உணர வேண்டும். பாடும்கால் தான் ஒருவன் தன் குரலில் முழுப்பயனையும் அடையமுடியும். கைவிரல்களும் இசைக்கருவிகளைப் பயில்வதற்காகவே வித்தியாசமான நீளங்களுடன் அமைந்திருக்கின்றன. மனித தேகத்தின் அமைப்பிலும் இசை சம்பந்தமான பல தத்துவங்களைக் காணலாம். மனிதனின்,

குரல் - காற்று வாத்தியத்தின் அமைப்பையும்,

காது - தோற் கருவியின் அமைப்பையும்,

உட்காது - தந்தி வாத்தியத்தின் அமைப்பையும் உணர்த்துகின்றது.

எனவே உன்னதமான இசையை நாம் அடிக்கடி கேட்க வேண்டும். அப்பொழுதுதான் உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி அதன் மூலம் தெய்வீக உணர்ச்சி நமக்கு ஏற்படும். இக் காரணம் பற்றியே திருவள்ளுவர் செவிச்செல்வத்தைப் புகழ்ந்து கூறியிருக்கின்றார்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துளெல்லாந் தலை"

திருஞான சம்பந்தர் முதல் முதலில் பாடியருளிய பாடல் "தோடுடைய செவியன்" எனும் தேவாரத்தில் சிவனின் செவியை முதலில் கூறியிருப்பதும் அறியக் கிடக்கிறது.

இசையால் வசமாகா இதயம் எது? ஆனால் இன்று எம்மவர்கள் இசை என்ற சாதனத்தைக் கேட்பதில் கவனம் செலுத்தவில்லை. மாறாகத் தொடர் நாடகங்களிலே தம் பொழுதினை வீணடித்துக் கொள்கிறார்கள். மனம் போன போக்கில் வாழாது மனிதன் மனிதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளத் தொடங்கும் போது மனதினை வென்றவன் ஆகின்றான். இயற்கையிலிருந்தே மனிதனுக்குப் பல விஷயங்கள் கிடைத்தாலும் மனிதன் தனது அறிவினாலும், யுக்தியினாலும் புத்திக் கூர்மையினாலும் வளர்த்த கலையாதலால் இசைக்குத் தனிப் பெருமை உண்டு.

கானம் செய்யும் பொழுதும், கேட்கும் பொழுதும் நாம் இவ்வுலகக் கவலைகளை மறந்து இன்பமடைகின்றோம். மனிதனது துர்க்குணங்களைப் போக்கி நற்குணங்களைப் பெருக்கிச் சமூகத்திற்கு ஒழுங்கானவனாக ஆக்கக் கூடிய சக்தி இசைக்கே உண்டு. ஒருவன் தனது கானத்தினால் எல்லோரையும் மகிழும்படி செய்யலாம். பாட்டின் அர்த்தம் விளங்காதவர்கள் கூட, அப்பாடலின் இசையைக் கேட்டு மகிழ்வுறுகிறார்கள். எனவே இசைக்கு எத்தேசத்திலும் நல்வரவும், நன்மதிப்பும் உண்டு என்பது அறியக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூடியதாயுள்ளது.

"வாழ்க்கை என்றால் ஆயிரமிருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது வென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்"

என்ற பாடல் வரிகள் வாழ்வின் அர்த்தத்தை உணர்த்தி நிற்பதை அறிய முடிகிறது. இருப்பினும் இதனை இசையோடு ரசித்துக் கேட்டபின் மனம் நன்னிலையில் உள்ளதொரு நிலை ஏற்படும்.

எனினும் நம்மை நாமே பெருமைப் பட்டுக் கொள்வதில்லை. ஆக்கமுள்ள செயற்பாடுகளைக் கலைஞன் ஆற்றுதல் வேண்டும். பண்டைத் தமிழன்,

"மண்ணைப் பேசவைத்தான்; கடமாக இசைத்து நிற்கிறது.
நரம்பைப் பேசவைத்தான்; யாழாக ஒலிக்கிறது.
தோலைப் பேசவைத்தான்; பறையாக முழக்கம் செய்கிறது.
மரத்தைப் பேசவைத்தான்; அது புல்லாங்குழல் ஆக ஒலித்து நிற்கிறது.
மழையைப் பேசவைத்தான்; அது சல்லாரியாய்த் தாளத்தைத் தருகிறது."

இதைப் போன்று பலவற்றை அதிசயமிருக்கத்தக்க முறையிற் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு இளந்தலைமுறைக் கலைஞர்களுக்கு வேண்டும். எதிர்கால இளம் சந்ததியினர் இசைக்கலையில் சிறப்பாகத் துலங்க வேண்டும்.

இசை இயற்கையின் மொழி, இசை பிரவாகம் என்பது ஆழங்காண முடியாத பெரும் சமுத்திரம் போன்றது. அள்ள அள்ளக் குறையாத செல்வத்தை வாரி வழங்குவது போல கற்கக்கற்க மென்மேலும் பல இனிய நுட்பங்களை அறிந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். கர்நாடக "இசை" என்ற வானளாவிய மாபெரும் விருட்சத்தின் பக்க வேர்களாக இருந்து நாம் என்றும் பணியாற்ற வேண்டுமென்பதே என் அவா.

"என்கடன் பணி செய்து கிடப்பதே"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டின் முன் சென்றேன் இன்று

சு. மாதினி குமரபுரம்
பரந்தன்.

அனலிடை மெழுகென தினமொரு நினைவுடன்
ஆங்கே திக்காடி நின்ற நாளை....

சிந்திக்க வைத்த போது - இன்று
சிறகொடிந்து விழவில்லை அழவில்லை

முனை எடுத்தேன் முடிவெடுத்தேன் - இனியதை
முற்றிலும் கக்கிட வழியெடுத்தேன்.

வாடா மலராய் வருடம் ஒன்றில் பூப்பதனால்
வருடும் என் நினைவுகளை

கரம் நீட்டி ஏட்டிலே எழுத முடியவில்லை - அன்று
கவி உணர்வடுவாய் சொர்ப்பனம் தந்தாய் - இன்று

விஷத்தின் ருசி காதலின் பிரிவில் தெரியும் !
வீர களத்தின் ருசி உடல் வெறுப்பில் புரியும்!

நுண்ணுயிரினுள் நுழைந்து நுரையீரல் வரை கருகிய நாட்களை
நூற்றாண்டு சென்றாலும் நூலாய் நான் வடிப்பேன்.

எல்லா நினைவும் கவிக்குள் அடங்குமா - இல்லை
கானல் நீராகுமா?

கவியை நான் எழுதவில்லை - இன்று
கவிதை என்னைக் கொண்டே தன்னை எழுதுகிறது

மிதமான உலகமாய் மிதக்கிறதா - இன்று
மிகுதி நாளை சுமந்து வாறேன் வளையோசை - 09 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் : (இ-வ) திரு. கா. பாலேஸ்வரன், திரு. இ. செல்வநாதன். திரு. த. பிருந்தாகரன் (தலைவர்), திரு. ம. பிரதீப் (உப தலைவர்), திருமதி து. தனுஷா (செயலாளர்)

நிற்பவர்கள் : (இ-வ) திரு. சி. சிவராஸ், திரு. ஆ. செல்வராஜ், திரு. பா. சசிகரன், திரு. ந. றோபேட் நிக்சன் (பொருள்ளர்), திருமதி ஜெ. வராகினி, திருமதி கோ.தேவபிரியா, செல்வி. இ. ராதிகா, திரு. தி. பிரபாகரன், திரு. செ. அபித்குமார், திரு. யோ. கோபிநாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தின் மண்ணின் மாண்பும் மகத்துவமும்

**க.தே. புரட்சிதாசன்,**
2ஆம் கட்டை, கோரக்கன்கட்டு, பரந்தன்.

வந்தாரை வாழவைக்கும் பிரதேசம் வன்னிப் பிரதேசம். இங்கு இயற்கை அன்னையும், இறைவனும் உவந்தளித்த இப்புண்ணிய பூவுலகில் ஈழமணித் திருநாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்திலே பல பெருமையாகக் கூறக்கூடிய முரசுமோட்டை, பழையகமம், புளியம்பொக்கணை, கண்டாவளை போன்ற ஊர்கள் காணப்படுகின்றன.

இந்த ஊரிலே பண்பாடும், கலை வளமும், கல்விவளமும் நிறைந்தே காணப்பட்டது என்று கூறினால் மிகையாகாது. "படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பது நல்லது" எனக் கூறுவார்கள். ஆனால் இங்குள்ள மக்கள் பிறப்பின் பயனை பயனாகக்கருதி கல்வியும் உழைப்பிலும் மேலோங்கிக் காணப்படுகின்றனர்.

உழவுத்தொழில் இங்கு சிறப்பான தொழிலாகவும் பெருமைக்குரியதாகவும் காணப்படுகின்றது. பாரதியார் கூட "உழவிற்கும் தொழிலிற்கும் வந்தனை செய்வோம்" என்று பாடியதிலிருந்து இத்தொழிலின் பெருமை புலனாகின்றது. "உழவரை ஓம்புதலின் வாயிலாகவே ஏழைக் குடிகளையும் பாதுகாக்க இயலுமென்றும், படைகளால் வரும் வெற்றி தானும் உழவால் விளையும் உணவின்றிக் கிடையாது என்றும், வெள்ளைக்குடி நாகனார் கூறியுள்ளார்.

"உடலிற்கு உணவு கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் ஆவார்." உணவை முதலாக உடையது உடம்பு. உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீர். அந்நீரையும், நிலத்தையும் புணர்த்தியவர்கள் என்பதிலிருந்து உழவுத் தொழிலின் மேன்மை விளங்குகின்றது.

இங்கு வாழுகின்ற மக்கள்
"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்கின்ற வான்புகழ் வள்ளுவரின் குறளிற்கு ஏற்ப விருந்தோம்பல் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" என்று கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது போல் பண்பிலும் சிறந்து விளங்கினார்கள்.

மனிதனை மதித்து வாழுகின்ற மனிதாபிமானத்தின் உயர்ந்தநிலை காணப்படுகின்றது. ஆலயங்கள், இரணைமடுக்குளம், சீனித்தொழிற்சாலை பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற பச்சைப்பசேல் என்ற வயல் வெளிகளும் மற்றும் தென்னஞ் சோலைகளும் பனைக்கூடலும் இங்கே கிராமத்தை அழகூட்டுவனவாகக் காணப்படுகின்றன.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் நோக்கில் பூநகரியின் பெருங்கற்காலப் பண்பாடு

**திருமதி சசீதரன் நிலாஜினி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

இலங்கையில் வரலாற்று உதய காலம் கி.மு 1000 இற்கும் கி.மு 300 இற்கும் இடையில் நிலவியதகாகத கூறப்படுகின்றது. இதன் தோற்றத்திற்குத் தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டின் வருகையே காரணமாக அமைந்த தென்பதைத் தொல்லியலாளர் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இப்பண்பாடு பெருங்கற்காலப் பண்பாடு எனவும், இரும்புக் காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. காரணம் யாதெனில், இப் பண்பாட்டு மக்கள் இறந்தோரை அடக்கம் செய்ய ஈமச் சின்னங்களுக்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தியமையும் இரும்பின் உபயோ கத்தைத் தமது அன்றாட வாழ்க்கையிற் பெருமளவு பயன் படுத்தியமையுமாகும்.

இலங்கையில் இப்பண்பாடு பற்றிய சமீப கால ஆய்வுகள் சிங்கள மக்களின் மூதாதையர் வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்ற பாரம்பரிய கருத்தை முற்றாக நிராகரித்துள்ளன. விஜயன் வருகையோடு இலங்கை நாகரிகம் தோற்றியதெனவும் இவனின் வழிவந்தவர்களே நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், அரசதோற்றம் ஆகியன ஏற்படுத்தக் காரணம் என்பதும் மகாவம்சத்தின் கூற்றாகும். இதையே இலங்கை நாகரிக தோற்ற கால வரலாறு என ஏற்றுக்கொண்ட பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இதற்குச் சார்பான வரலாற்றைக் கட்டியெழுப்பினர். ஆனால் விஜயன் இலங்கையில் குடியேறியதற்கோ அவன் வழியில் வந்தவர்களால் நாகரிகம் அறிமுகப் படுத்தப்பட்டதற்கோ எவ்வித தொல்லியல் சான்றுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாக தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் வருகையோடு இலங்கை நாகரிகம் தோற்றம் பெற்றதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலே கி.மு 1000 ஆண்டளவிலே தோன்றிய இப் பண்பாடு எவ்வாறு தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு எனப் பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததோ அதேபோல இலங்கையிலும் தமிழ், சிங்கள, பண்பாடு தோன்றுவதற்கு இப்பண்பாடே காரணமாக இருந்தது என்ற கருத்தைப் பேராசிரியர் சிற்றம்பலம் முன்வைத்தார். மானிடவியல் ரீதியாக இப்பண்பாட்டு மக்களும் தென்னிந்திய திராவிட பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களும் ஒரே இன வர்க்கத்ததைச் சேர்ந்தவர்கள் என்பது மானிடவியலாளரின் கருத்தாகும்.

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் தென்னாசியாவிலே பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது திராவிட மொழி பேசும் பிராந்தியமான தென்னிந்தியாவிலே தான் செறிந்து காணப்படுவதோடு சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்கு கின்றது. ஈமச்சின்னங்களைக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பண்பாடு இப்பெயரைப் பெற்றிருந்தாலும் அச்சின்னங்களைவிட முக்கியத்துவம் வாய்ந்த பல பண்பாட்டு அம்சங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இலங்கையின் பெரு நிலப்பகுதியில் இப்பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் அனுராதபுரம், கதிரவெளி, பொம்பரிப்பு, வவுனியா, திசமாறகம, மாந்தை, கேகாலை போன்ற இடங்களிலே கண்டபிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள் தென்னிந்தியாவுடன் ஒத்துக் காணப்பட்டாலும் சிறப்பாக, தமிழ் நாட்டுடன் ஒத்துக் காணப் படுகின்றது. இதனால் பூநகரிப் பிராந்தியப் பண்பாட்டை இப்பின்னணியில் நோக்குவது பொருத்தமாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத் தொல்லியற்கழகமும், பல்கலைக்கழக விரிவுரையாளர் சிலரும் மேற்கொண்ட தொல்லியல்மேலாய்வாலும் சில தொல்லியல் அகழ்வாய்வாலும் ஆனைக்கோட்டை, காரைநகர், வேலணை போன்ற இடங்களிலும் இப்பண்பாட்டுச் சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூநகரிப் பிராந்தியத்திலே மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்விலே கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் மட்டும் இப்பண்பாட்டுக்குரிய கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்களைஅடையாளம் காண முடிந்தது. இவ்விடங்களில் இருந்தே குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும் கிடைக்கப்பெற்றதனால் அப்பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதெனக் கூறலாம். இப்பண்பாட்டில் ஈமச் சின்னங்களை அமைக்கப் பெருங்கற்கள் பயன்படுத்தப் பட்டாலும் நாட்டின் பௌதிகச்சூழலுக்கு ஏற்ப தாழிகளும் குழிகளும் பயன்படுத்தப் பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதற்கு ஆதிச்சநல்லூர், பொம்பரிப்பு, மாந்தை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சான்றாகும். இத்தகைய ஓர் ஈமச்சின்ன அமைப்பு முறையே பூநகரியிலும் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. பெருமளவு மணற் பாங்கான இப்பிராந்தியத்திலே பெருங்கற்கள் காணப்படாததனால் அவ்விடங்களிலே தாழிகளும் குழிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் வதிவிடம் இடுகாடு, குளம், வயற்பரப்பு ஆகிய நான்கும் முக்கிய அம்சங்களாக விளங்கின. இத்தகைய இடங்களை அண்டியே அதிகமாக இப்பண்பாண்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. பூநகரியிலே பல வருடங்களுக்கு முன்னர் காடுகளாக இருந்து தற்போது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தியாகம், குதிரை கட்டினதீவு, பல்லவராயன் போன்ற இடங்களிலும் இந்த அம்சங்களை ஓரளவு அவதானிக்கலாம். இங்கு கைவிடப்பட்டுள்ள சிறு சிறு குளங்களை அடுத்துள்ள மேட்டுப்பாங்கான நிலங்களிலும்வயற்காணிப் பரப்புக்களிலும் பெரும் தாழிகளின் உடைந்த பாகங்களும், சிறிய மட்பாண்ட ஓடுகளும், சுடுமண் உருவங்களும், மணிகள், கைவளையல்கள் முதலியவையும் மேலாய்வின்போது கிடைப்பெற்றுள்ளன.

ஆதிச்சநல்லூர், பொம்பரிப்பு போன்ற இடங்களைப் போல இங்கும் பரந்த அளவிலான பெருங்கற் காலத் தாழிக்காடு இருந்திருக்கலாமோ என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத் தோன்றுகிறது. வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற இடங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய தொல்லியல் மையங்கள் எனக்கூறலாம். இவ் விடங்களிலே தான் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் விடங்களில் தனிக் கறுப்பு, சிவப்பு, நரை நிற மட்பாண்ட ஓடுகள், சிவப்பு நிறம் கொண்ட முழுமையான இரண்டு பானைகள், மண்விளக்குகள், சுடுமண்பானைகள் என்பன கிடைத்துள்ளன.

இப்பண்பாட்டு மக்கள் ஓரளவுக்கு விவசாயத்தையும் பெருமளவிற்கு மீன்பிடித் தொழிலையும் மேற் கொண் டிருந்தனர் போல தெரிகின்றது. இதை, இச்சின்னங்கள் காணப்பட்ட இடங்களிலிருந்து காணப்பட்ட இரும்பினாலான கொழு, கத்தி முதலியனவும் பரவலாகக் கிடைத்த மீன்பிடி ஊசிகளும் உறுதிப்படுத்து கின்றன. இவற்றுடன் பல வடிவங்களிலே செய்யப்பட்ட மணிகள், கைவளையல்கள், எலும்பினால் செய்யப் பட்ட கழுத்துமா லைகள், அலங்காரப் பொருட்கள், கல்வளையல்கள், உலோ கத்தாலே செய்யப்பட்ட காற்சலங்கைகள் ஆகியவையும் இவ்விடங்களிலே கிடைத்துள்ளன. இச்சான்றுகள் அனைத்தும் செறிவான திராவிடக் குடியிருப்புக்கள் இங்கிருந்ததை உறுதிப் படுத்துகின்றன.

பூநகரிப் பிராந்தியத்தில் பெருங் கற்காலப் பண்பாட்டுச்சின்னங்கள் காணப்பட்ட மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலும் அவ் விடங்களுக்கு அருகிலுள்ள கல்முனை, கௌதாரிமுனை, பரமன்கிராய், பள்ளிக்குடா, பல்லவராயன், ஈழவூர், வீரபாண்டியன்முனை, பாலாவி ஆகிய இடங்களிலும் இருந்து பல்வேறு வகையான மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இம் மட்பாண்ட ஓடுகள் விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்தப்படும் போது இவை தோன்றிய காலம் தெரியவரலாம்.

பள்ளிக்குடா என்ற இடத்தில் புதிதாக வெட்டப்பட்ட கிணறொன்று இன்று கைவிடப்பட்டநிலையில் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கிணறு வெட்டியபோது மண்ணின் கீழ்ப்படையிலிருந்து பல மட்கலங்களும் மனித எலும்புகளும் வெளிவந்தமையாகும். அக்கிணற்றை நாம் ஆய்வுசெய்த போது கிணற்றின் ஓரத்தில் இருந்து அலங்காரத் தன்மை கொண்ட முழுமையான கத்தி யொன்றையும் உடைந்த நிலையில் சிறிய வண்டில்களையும் கண்டெடுக்கமுடிந்தது.

மேலும் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மண்ணிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தி வடிவிலமைந்த மணிகளையும், கைவளையல்களின் உடைந்த பாகங்களையும் அவதானிக்க முடிந்தது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு இங்கு கிடைத்த மட்பாண்டங்களைப் பெருங்கற்காலப் பண்பாட்டோடு தொடர்புபடுத்தி ஆராய இடமுண்டு.

ஆதிகால மக்கள் தரைக்கீழ் நீரைப் பெறுவதற்காகச் சுட்ட மண்ணைக் கொண்டு கட்டிய கிணறுகளைப் பயன்படுத்தியமை புராதன தொல்லியல் மையங்களிலிருந்து கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இதனைத் தொல்லியலாளர் மண்வளையற் கிணறு என அழைப்பர். இவை களிமண் பிரதேசங்களைவிட மணற்பாங்கான பகுதிகளிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கு வல்லிபுரம், மன்னார், முல்லைத்தீவு முதலிய பகுதிகளிலே கண்டுபிடிக்கப்பட்ட கிணறுகள் சிறந்த உதாரணங்களாகின்றன. இவ்வாறான கிணறுகள் பூநகரிப் பிராந்தியத்திலும் பயன்படுத்தப் பெற்றதற்கு ஈழவூரில் உள்ள கிராஞ்சிப் பகுதியிலுள்ள கிணற்றை ஆதாரமாகக் கருதலாம். மூன்று அடி ஆழமுடையது. இதன் கீழ்ப்பாகம் ஐந்து மண்வளையங்களை ஒன்றாகப் பொருத்தி வட்ட வடிவிலே கட்டப்பட்டுள்ளது.

இப்பிராந்தியத்திலே மேற் கொள்ளப்பட்ட மேலாய்விலே கிடைத்த ஆதிக்குடியிருப்புகளுக்குரிய சான்றுகளுள் சமயம் சார்ந்த சின்னங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அண்மைக்கால ஆய்வுகள் பல இந்துப் பண்பாட்டின் தொன்மை பற்றிய சான்றுகள் பெருங்கற் பண்பாட்டில் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளன. இவற்றின் ஈமச்சின்னங்களும் அவற்றுடன் தொடர்புள்ள பெருங்கற்களும் இந்து ஆலயங்களின் தோற்றத்தைக் கோடிட்டுக்காட்டுகிறது.

பூநகரியைப் பொறுத்தவரை அப்பிராந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிலே கிடைத்த கலைச்சின்னங்கள் சில இந்த நோக்கில் ஆராயத்தக்கவை. மண்ணித்தலை, வெட்டுக்காடு, பல்லவராயன் போன்ற இடங்களிலே சுடுமண் உருவங்களின் உடைந்த பாகங்கள் இலிங்க வடிவில் அமைந்த மண் உருவங்கள் என்பன கிடைத்துள்ள. ஆதிச்சநல்லூரில் உள்ளவை போன்றவை இரும்பாலான மண்ணித்தலை, வெட்டுக் காடு ஆகிய தொல்லியல் மையங்களில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் இம் மையங்களிலிருந்து மண்ணாற் செய்யப்பட்ட இரு வேறுபட்ட வடிவங்களில் அமைந்த மூன்று அகல் விளக்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இப் பிராந்தியத்தில் நிலவிய தொன்மையான வழிபாட்டுச் சின்னங்களென்று கருத இடமுண்டு.

எனவே, மேற்கூறப்பட்ட தொல்லியல் மையங்களிலிருந்து கிடைத்த பெருங் கற்காலச் சான்றுகளைக் கொண்டு திராவிடர் குடியிருப்புக்கள் பூநகரியில் இருந்தனவெனக் கருதலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. Gurumurthy, S. Ceramic Tradition in South India (Madras) 1981, Page 113.
2. Allcin, B. "The Microlithic Sites of Tinnavelly District" Ancient India No- 12, Page 4 - 20.
3. Ragupathy, P. Early Settlement in Jaffna An archacoological Suruey, (Madras, 1987) Page 179.
4. Sitrampalam,s.s The Megalithic Culture of Srilank, P.H.D Thesis, University of Poona 1980, Page 384.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் விஞ்சும் வளை ஓசையே!

**வளையூர் இளங்கவி பெ. புண்ணியராஜ்**
முத்தமிழ்கலா மன்றம்.
கண்டாவளை.

**தாளம்:- ஆதி**

**இராகம்:- கல்யாணி**

**சரணம்**

கார் கால மேகம் ஊர்கோலம் போக
வளையோசை மண்ணில் வளைந்தாடுமே
தார் வாழை தானீனும் குலைபோலே தன்னில்
கலை கொண்டு மண்மீது விளையாடுமே

(கார்கால....)

**பல்லவி**

மார்கழி மழையாய் கவிமேகம் பொழியும்
ஊர்வழி சென்று புவியாள விழையும்
பார்மகள் தன்னில் கலைத்தென்றல் வீசும்
சீர் புகழ் கொண்டு வளையோசை பேசும்

(கார்கால....)

கண்டார் உளம் நெகிழும் கண்டாவளை தன்னில்
நின்றாடும் எழில் விஞ்சும் வளை ஓசையே
சென்றோடி விளையாடி கலைதேடி உளந்தன்னில்
வென்றாடும் எழில் கொஞ்சும் கலை ஓசையே

(கார்கால....)

கண்டாவளை மண்ணில் கலை அள்ளி பருகும்
சென்றார் முகம் நோக்கு கலை நகை புரியும்
நின்றார் கரங்களில் நிலையாகி விரியும்
கண்டாவளை மகிழ கலையாகி பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கிணறுகள்

**கோ. சேகர்**
கிராம அலுவலர்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

**கிணறு ஒன்று**

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்ற வள்ளுவனின் வாக்கிற்கு அமைய உயர்ந்த எண்ணங்களே உவகையான முடிவுகளை தருகின்றது. கீழ்மையான எண்ணங்கள் என்றென்றும் உவர்ப்பான பெறுபேறுகளை விட்டுச் செல்கின்றன.

A9 எனும் குறியீட்டில் பெயருடைய யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையின் 263 Km கல்லுக்கும் 264 km கல்லுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வீதியின் கிழக்கு பக்கமாக பரிதாபமாக காணப்படும் கிணறே எனது பேசு பொருள்.

அது 2012 ஆம் வருடம், தற்போதுள்ளது போல அல்ல அன்று மக்களுக்கான உதவிகள் அரசால் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும். அதனை நுட்பமாக பரிசலித்து மிகவும் பொருத்தமான குடும்பங்களுக்கு வழங்கி வைக்க வேண்டும்.

அப்படி ஓர் வாழ்வதற்கு உதவி திட்டம் தான் சர்வோதய நிறுவனத்தின் விவசாய கிணறு அமைத்தல் என்ற திட்டம் கிடைக்கப்பெற்றது. எனக்கு தெரிய இடப் பெயர்வுக்கு முன்பு இருந்தே தோட்ட செய்கையில் முழு நேரமாக ஈடுபட்டு நாளாந்தம் சுப்பர் கப் மோட்டார் சைக்கிளில் மரக்கறிகளை கட்டி செல்லும்அவரை தெரிவு செய்தேன் அவர் மீளக்குடியமர்வுக்கு பின்னரும் தூர்ந்து போன துணுவில் இருந்து நீர் இறைந்து சிறிய அளவில் மரக்கறி தோட்டம் செய்து கொண்டு இருந்தார். பயனாளி தெரிவுக்கான அனுமதிகள் யாவும் பெறப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளியின் காணியில் சர்வோதய நிறுவனம் அமையப்பட்ட சீமேந்து கற்கள் மணல் சீமேந்து மற்றும் தேவையான அனைத்தும் கொண்டுவரப்பட்டு பெக்கோ இயந்திரம் மூலம் கிணறு வெட்டப் பட்டாயிற்று சங்கலை (கிணறு அத்திவாரம்) போடுவதற்கு ஆயத்தமான போது... கிளம்பியது பூதம்

அந்நாட்களில் கிளிநொச்சி நகரில் ஓர் அலுவலகம் இயங்கி வந்தது. அதற்கு இரண்டெழுத்து அலுவலகம் எனும் பெயர் வைத்து கொள்வோம். அந்த பயனாளி மீது தங்களுக்கு இருந்த தனிப்பட்ட பொறாமை எரிச்சல் கொண்ட ஒருசிலர், இப்பயனாளி பொருத்தமற்றவர் எனவும் இவர் தோட்டம் செய்வதில்லை எனவும் இன்னும் இல்லாத பொல்லாதவைகளை கூறி, ஊரில் உள்ள மக்களுக்கும் பொய்களை கூறி ஓர் குழுவாக சென்று அந்த அலுவலகம் கூறியதற்கு அடிபணிந்து ஓர் பிரதிநிதியும் கிணற்றடியை பார்வையிட்டு மக்களை திருப்திபடுத்துவதற்காக, அக்கிணற்றை அவ்விடத்தில் கட்ட முடியாது எனவும் அவருக்கு கிணறு வழங்க முடியாது எனவும் தீர்மானமும் எடுத்து விட்டார்கள். நான் எனது தீர்மானத்தில் உறுதியாகவே இருந்தேன் கிணறு கொண்டு வந்த நிறுவனமும் கையாலாகத்தனத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கேன் வம்பு என்ற நிலைப்பாட்டில் இருந்து விட்டது.

தனக்கு மூக்கு இல்லாமல் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்கட்டும் என்ற ஏழ்மை எண்ணம் கொண்டவர்களால் இன்னொரு விவசாயிக் காகிலும் பொதுமக்களுக்காகிலும் பிரஜோனப்படும் ஓர் பொது கிணறாயினும் அமைப்பதற்கு முடியாமல் அமைத்தார்கள் பாரல்கள் ஓர் கிணறு ... அதுதான் A9 வீதியின் km க்கு இடையில் வீதியின்கிழக்கு பக்கமாக கடல் நீரையே கொண்டு வந்து கிணற்றில் நிறைத்தது போல் உவர்ப்பு நீர் நீயும் நானும் இந்த கிராமத்து மக்களும் கொடிய யுகத்தில் அனுபவித்த துன்ப துயரங்களை போக்குவதற்கு ஒத்தடமாக யாரோ ஒரு பரோபகாரி கொடுத்த பணத்தினை பலனை இப்படியா வீணாக்குவது ஒரு சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்காக தன்முனைப்பான நடவடிக்கைக்கு சாட்ஷியாக A9 வீதியில் அக்கிணறு...

இப்போது அந்த விவசாயின் தற்போதைய நிலை எப்படி என்று பார்த்து விட்டு வருவோம். இவ்விடயம் தொடர்பாக அவர் பிரதேச செயலாளரிடமும் முறைப்பாடு செய்தார் அனுதாப வார்த்தைகளை தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை.

அன்று ஓர்மத்துடன் வந்த அவர் வெட்டி கட்டாமல் இருந்த கிணற்றை அடிப்படையாகக் கொண்டு அவ்வருடம் மரக்கறி பயிரிட்டார். “திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்ற உண்மைக்கு அமைய கடவுளின் கருணையும் கைகொடுத்தால் நல்ல விளைச்சல் அடுத்த வருட ஓர் குழாய் கிணற்றை அமைத்து கொண்டார். மாரி மழையால் வெட்டிய கிணறு துரவாகிவிட்டது குழாய் கிணற்றில் தாராளமாய் தண்ணீர் வரவே தோட்டத்தை விரிவாக்கினார். மீண்டும் MD90 மோட்டார் சைக்கிளில் மரக்கறிகளை கட்டிக்கொண்டு கிளிநொச்சி சந்தைக்கு போகும் அவரை துக்கம் கலந்து மகிழ்ச்சியுடன் மனதிற்குள் வாழ்த்தி கொள்கிறேன். பொறுத்தார் பூமியாழ்வார் பொங்கினார்.?

**கிணறு இரண்டு**

கிணற்றை காணவில்லை ஐயா கிணற்றை காணவில்லை என்று வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் வடிவேலுவின் கதை நம்மூரிலும் நடந்தது என்றால் நம்புவீர்களா?..

அதே போன்றதொரு சம்பவம் ஒரு பேசு பொருளாக ஒவ்வொரு புதன் கூட்டத்திலும் ஆராயப்பட்டு வந்தது அதாவது கட்டி முடிக்கப்பட்டது கிணறு ஆனால் காணவில்லை...

அது கொழுந்து புலவு கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குத் திசையின் கடைக் கோடியில் விவசாயத்தை அடிப் படையாகக் கொண்ட பிரமந்தனாறு கிராமத்தின் ஓர் குக்கிராமமே கொழுந்து புலவு. பெருமாள் சின்னம்மா வயது 75 ஒரு மகன் வயது 52 சித்தசுவாதீனம் இவர்கள் தான் பயனாளிகள் விவசாயக் கிணறுகளை அமைத்தல யீநதி 125000 இந்தப் பயனாளி இயலாத வயதிலும் தோட்டம் செய்து இயலாத மகனையும் பராமரித்து வருகின்றார் மூத்த மகன் அருகாமையில் வசிக்கின்றார். விவசாயத்துடன் மேசன் வேலையும் செய்வார்.

இந்த அம்மா தனது காணியில் ஏற்கனவே வெட்டப்பட்டிருந்த கிணற்றை அமைக்கும் படி நிதி உதவியில் 1ம் கட்ட கொடுப்பனவாக 25,000 பெற்று மூத்த மகனின் உதவியுடன் கிணற்று வேலையை ஆரம்பித்து விட்டார் கிணறு முழுமையாக கட்டி பூச்சு வேலை முடிவடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவாய் வரை மேலதிகமாக நிதி எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை ஆகவே அவருடைய வங்கி புத்தகத்தில் 100000 ரூபாய் வைப்பில் இருந்தது. தனது சேமிப்பில் இருந்து பணத்தை கொண்டு வேலைகளை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் கிணற்றில் போடப்பட்டிருந்த சாரமரங்களைக் கழட்டி அதன் ஓட்டைகளை அடைத்துக் கொண்டு இருந்த பொழுதொன்றில் கிணற்றின் மேல் தளத்தில் ஒருவரும் இடையில் வேலை செய்து கொண்டு இருந்த வேளை ஓர் மெல்லிய சத்தம் அதனை தொடர்ந்து பாரிய சத்தத்துடன் கிணறு முழுவதுமாக இடிந்து வீழ்ந்தது இடையில் நின்ற நபர் (அம்மாவின் பேரன்) படுகாயத்துடன் மேலே நின்ற மூத்தமகள் சிறுகாயத்துடனும் காப்பாற்றப்பட்டனர். அந்த இரண்டு பேர்களும் எவ்வாறு உயிர் தப்பினார்களோ அவ்வாறே கிணறு எக்காரணத்தால் இடிந்தது என்று புரியாமலே போய்விட்டது.

கட்டம் கட்டமாக கட்டப்பட்ட கிணற்றின் புகைப்படங்கள் காட்சியாக மேற்பார்வை செய்த அதிகாரிகள் உள்ளனர். கிணறு மேல்மட்டம் வரை கட்டிய படங்களும் உள்ளன. ஆனாலும் கிணறு காணாமல் அவ்விடம் சிறு குளம் போல் தண்ணிர் நிறைந்து காணப்பட்டது அவ்வளவுதான்.

கிணறு முடிக்கப்பட்டதால் மிகுதி பண முழுவதும் விடுவிக்க வேண்டும் ஆனால் கிணறு இல்லை பணத்தை விடுவிக்க முடியாத திரிசங்கு நிலை இப்போது குளம் போல் காணப்படும் கிணற்றை இறைத்து கிணற்றின் நிலையை அறிய வேண்டும் அரைவாசி உடைந்ததா? அல்லது முழுமையாக இடிந்ததா? என அறிய வேண்டும் கிடைக்கப் பெறும் தகவல்களோ பயமுறுத்துவதாக இருந்தது கிணற்றுக்கு அருகில் குளம் இருப்பதால் கிணற்றை இறைப்பது சாத்தியம் இல்லை என்றும் தகவல்.

நிர்வாக கிராம அலுவலர் இவ்விடயத்தை பாருங்களேன்.

என்ற பிரதேச செயலாளரின் ஒற்றை வார்த்தை என்னை உற்சாகப்படுத்தியது. எது எப்படியாயினும் கிணற்றை அமைக்காமல் நிதியை விடுவிக்க முடியாது. கிணறு அமைக்காவிட்டால் நிதியை திறைசேரிக்கு திருப்புவதுதான் அடுத்த முடிவாக காணப்பட்டது.

இந்த கிணற்றை அமைக்கும் சவால் நிறைந்த பணியை விருப்புடனேயே ஏற்றுக் கொண்டேன் (கிணற்றால் பாதிக்கப்பட்டவனாயிற்றே) முதலாவதாக பிரமந்தனாறு இளைஞர் கழகத்தின் நிர்வாகிகளை சந்தித்து ஓர் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தினேன். பழைய G.S ஏன் கூட்டம் போடுகின்றார். என்ற ஆவலிலும் விருப்புடனும் கூட்டத்திற்கு இளைஞர்களிடம் கிணற்றி முழு சனத்தையையும் அந்த அம்மாவின் நிலையையும் கூறினேன். ஆர்வமாக செவிமடுத்த இளைஞர்கள் மேற்படி வேலைக்கு தங்கள் பூரண ஆதரவை வழங்க சம்மதித்தனர் மீதியாகவுள்ள 100000 ரூபாவை வைத்து இடிந்த கிணற்றை புதுப்பிப்பதா? அல்லது புதிதாக வெட்டி கட்டுவதா? ஏனென்றால் விவாதிக்கப்பட்டு இடிந்த கிணற்றை குறித்த நாளில் இறைப்பதற்கு முடிவு எடுத்தோம்.

குறித்த நாளில் மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் கிணறு இறைக்கப்பட்டது. உதவி பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றை பார்வையிட்டு மீள கிணற்றை கட்டுவது சாத்தியமற்றது நீர்மட்டம் மேலே இருப்பதால் இருக்கின்ற பணத்தை கொண்டு 20 அடி ஆழத்தில் ஓர் கிணற்றை அமைத்து கொடுக்கும்படி என்னிடம் கூறினார்கள்.

அதே நேரம் கிணறு அமைப்பதற்கு பணம் போதாமல் போய்விட்டால் என்ன செய்வது என ஆராய்ந்த பொழுது ஊர்மக்கள் உதவி செய்வார்கள். மக்களிடம் கேட்டால் அந்த அம்மாவின் நிமித்தம் உதவி செய்வார்கள். மக்களிடம் கேட்டால் அந்த அம்மாவின் நிமித்தம் உதவி செய்வார்கள் என்று இளைஞர்கள் உற்சாகப்படுத்தினார்.

உடனடியாக சீமேந்து வாங்கப்பட்டு இளைஞர் கூடி கல் அரிந்தார்கள். பகலில் வேலைக்கு போவதால் இரவில் வேலை செய்தார்கள். JCB இயந்திரம் மூலம் 20 அடி வரை கிணறு வெட்டிய போதும் நீர் ஊற்று வரவில்லை. ஈர கசிவும் தென்படவில்லை. ஊற்று இல்லாமல் உதவி பிரதேச செயலாளர் சொன்னதற்கான 20 அடியில் தொட்டியை போல் கிணற்றை கட்டி விட எனக்கு மனதில்லை இருக்கும் பணம் போதாவிட்டாலும் குறைந்தது 25 அடி ஆழம் வரையாகிலும் வெட்டி கட்டுவது என்று முடிவெடுத்து ஆட்களை கொண்டு மேலும் ஐந்து அடி ஆழம் வெட்டிய போது நீர் ஊற்று தென்பட தொடங்கியது.

அத்தோடு சங்கலை போட்டு கட்டு வேலையை ஆரம்பித்தோம் கடன்பட்டு வேலையை நடத்திக் கொண்டு இருந்தோம். கிணறு கட்டி முடியாமல் முழுப்பணம் பெறமுடியாத நிலை இளைஞர்களும் நானும் மக்களிடம் சென்று நிலைமையைச் சொல்லி விளக்கிய போது நாம் எதிர்ப்பார்க்காத வகையில் ஆதரவு கிடைத்தது 10000, 5000, 4000, 3000, 2000, 1000 என மக்கள் தாரளமாய் தந்து உதவினார்கள். வேலைக்குத் தேவையான மணல் முழுதும் உழவு இயந்திர உரிமையாளர்களால் இலவசமாக தரப்பட்டது. கோயிலுக்குக் கொடுப்பதை பார்க்கிலும் இப்படி ஓர் ஏழைக்கு கொடுப்பதே மனதிற்கு நிம்மதி என்று உதவிகள் கிடைத்தது.

கிணற்று வேலையை பார்வையிட வந்த இளைஞர்கள் கழக உறுப்பினர் அந்த அம்மாவின் நிலைகண்டு உடனடியாக 5000 ரூபாவை அம்மாவிடம் கொடுத்து செலவுக்கு வைத்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்

நேர் எண்ணம் கொண்டு எந்த காரியத்தையும் நாம் அணுகினால் அதில்உள்ள தடைகள் தானாகவே விலகிவிடும்.

முடியாது, கஸ்ரம் மீதி 100000 திறைசேரிக்கு அனுப்புவோம் என்று கூறுவதும் இலகு அப்படி செய்வது இலகுஅந்த சொற்பபணத்தை வைத்தாவது அந்த ஏழை தாயின் கிணற்றை அமைத்து விடலாம் என்ற எண்ணம் கொண்டு முயற்சித்த போது இளைஞர்களினதும் அந்த கிராம மக்களினது அர்ப்பணிப்புக்கு கிடைத்த வெற்றி இந்த கட்டுரை மூலம் அநேகருடைய மனங்களைத் தட்டி எழுப்பும் என்ற நம்பிக்கையுடன் முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பதற்கு சாட்சியாக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**செல்வி. டக்சிகா மனோகரன்**
கண்டாவளை மகா வித்தியாலயம்

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது பழமொழி. நம் முன்னோர் அனுபவரீதியாக அறிந்த உண்மை இது. இன்றைய உலகில் தனிமனிதனாக எவரும் வாழ்ந்து விட முடியாது. மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழவேண்டி உள்ளது. ஒன்று கூடி வாழ்வதே உயர்வாகும். இதனையே மகாகவிபாரதியாரும் "ஒன்று பட்டால் உண்டுவாழ்வு" எனக் கூறியுள்ளார். இவ்வாறு பலர் ஒன்று கூடி உழைப்பது தம்மை மட்டுமல்ல தாம் வாழுகின்ற சமுதாயம், நாடு என்பவற்றுக்கு நன்மை செய்ய வழிவகுப்பது ஒற்றுமையான வாழ்க்கையே ஆகும். கூட்டு ஒத்துழைப்பே நாட்டுயர்வுக்கு வழிவகுக்கும். "எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தை தான்" என்பதற்கு இணங்க இப் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் நல்லொழுக்கம், நற்சிந்தனை என்பவற்றைப் போதித்து அவர்களை ஒற்றுமையாக வாழவழிகாட்டி, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பக்கத்துணையாக இருக்க வழிகாட்ட வேண்டும்.

ஒருவன் சிறுவனாகி, இளைஞன் ஆகி, தலைவனாக மலர்கின்றான். "இன்றைய இளைஞர்களே நாளைய நம் நாட்டின் தலைவர்கள்" ஆனால் அனைத்து இளைஞர்களும் நாளைய நம் நாட்டின் தலைவர்கள் எனக் கூறமுடியாது. வளரும் பயிர் அதன் வளர்ச்சி பருவத்தில் சில பூச்சிகளால் கெட்டுப்போவதுண்டு. அதனைப் போலத்தான். சிறுவர்களும் வளரும் போது சில தீய பழக்கங்களுக்கு உட்பட்டு அழிவதுண்டு. அவ்வாறு இல்லாமல் நமது எதிர்கால சந்ததியினர்கள் சிறுவயதிலேயே நல்ல ஒற்றுமையுடைய தேசப்பற்றுடையவராக மாறவேண்டும். அப்போது தான் மனிதன் மனிதனாக வாழமுடியும். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலைகளின்படி இளைஞர்கள் மத்தியில் பிரச்சனைகள் உருவாகுகின்றன. அதாவது பல பிரதேசங்களில் இளைஞர்களுக்கு இடையில் மோதல்கள், வாள்வெட்டுக்கள் போன்ற தாக்கங்களில் ஈடுபடுவதைக் காணலாம். இதனால் நமது நாட்டில் சர்ச்சையான சூழல் நிலவுகின்றது. இதற்கு காரணம் கல்வியறிவு இன்மை, ஒழுக்கம் இன்மை, ஒற்றுமையின்மை ஆகும். இவ்வாறு போனால் நம் நாடு என்ன நிலைமைக்குப் போகும் என சிந்தியுங்கள். இளைஞர்களுக்கு சிறந்த நோக்கத்தைப் போதியுங்கள். அவ்வாறாயின் தான் நம் நாடு உயர்வடையும்.

நம் நாடானது தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர் போன்ற இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவ் எல்லா இனத்தவருக்கும் ஒவ்வொருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் நம் தேசம் பலம் அடையும். ஆனால் இன்றைக்கு நம் நாட்டில் பல அரசியல் குழப்பங்களால் இனங்களுக்கு இடையே பிரிவு ஏற்பட்டுள்ளது. அதாவது அண்மையில் தமிழருக்கு இடையில் இடம்பெற்ற யுத்தம், முஸ்லீம்கள் இனக்கலவரம் என நம் நாட்டில் அமைதியின்மை நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இன்றைக்கு அவ் இனக்கலவரங்கள் முடிவடைந்து அமைதியான சூழல் நிலவுகின்றது. இனி வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியினரிடையே இனப்பாகுபாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து நாம் அனைவரும் ஒரே நாட்டவர் எனும் தன்மையை வளர்க்க வேண்டும். "பீடுற்றார் மேற்கில் பிறநாட்டவர் என்பதெல்லாம் கூடித்தொழில் செய்யும் கொள்கையினால்" என்பதற்கு இணங்க ஒற்றுமையாக கூட்டுறவாக உழைத்து நல்ல தொரு அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டும்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம்" எனும் வரியின் மூலம் உண்மையின் தன்மையை கூறியுள்ளார். சிறுவர்களுக்கு உண்மையின் தன்மையை எடுத்துக் கூற வேண்டும் உண்மை வழியில் செல்வோன் உலகத்தார் எல்லோரிடமும் பாராட்டு பெறுவான் பொய்மை மாறக்கூடியது. நீண்ட நாளைக்கு நிலைக்காது. ஆனால் உண்மை எத்தனை முறை கூறிப்பார்த்தாலும் உண்மையாகத்தான் இருக்கும் மாற்றம் அடையாது. உதாரணமாக அண்ணல் காந்தியடிகள் நேர்மையாக, உண்மையாக வாழ்ந்து தான் தன் நாட்டை முன்னேற்றினார். அவரைப் போல நாமும் ஒவ்வோருவரும் உண்மையாக வாழ்ந்து நம் நாட்டைக் காப்பாற்றுவோம்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலாள் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க ஒருவருக்கு பல்வேறு திறமைகள் இருக்கலாம் ஆனால் ஒழுக்கம் இல்லை எனில் அவனை உலகம் மதிக்காது என கூறியுள்ளார். நீங்கள் கீதை சுலோகங்களை மனப்பாடம் செய்தால் நான் மகிழ்ந்து விடமாட்டேன். வரலாறு, சமஸ்கிருதம் என்பவற்றைக் கற்கா விட்டாலும் எனக்குக் கவலை இல்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும் எனக் கூறியுள்ளார். இக் கூற்றின் மூலம் ஒன்றை உணர வேண்டும். நாம் மட்டுமல்ல நம்மைச் சார்ந்த அனைவரும் ஒழுக்கமாக இருந்தால் தான் நற் சிந்தனை உருவாகி, புத்தாக்கம் உருவாகி, முயற்சிகள் உருவாகி வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமையும் "ஏடு தூக்கி பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்" எனும் அழ.வள்ளியப்பா கூற்றுக்கு இணங்க நாளைய தலைவராய் விளங்கப்போகும் இன்றைய சிறுவர்கள் ஒழுக்கம் உள்ள ஒரு சமுதாயமாக வளர்க்கப்படவேண்டும். உலகத்தோடு ஒத்து ஒழுகக் கூடிய அறத்தின் வழியே பொருள் சேர்த்து மகிழ்ந்து வாழக் கூடிய நல்ல தேசப்பற்றுடையவராய் இருக்க வேண்டும் "நன்றும் தீதும் பிறர் தரவாரா" என்பதற்கு இணங்க நன்மையும் தீமையும் நமது கைகளிலேயே, ஒருமுறை தோல்வி ஏற்பட்டால் அதைக்கண்டு அஞ்சக் கூடாது. விடாமுயற்சியுடன் செயற்பட்டு வெற்றிபெற வேண்டும். ஒற்றுமையாக செயற்பட்டு நம் தேசம் முன்னேற்றம் அடைய உழைக்க வேண்டும்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" எனும் ஔவையார் கூற்றுக்கு இணங்க அரிய சிறப்பினை உடைய மானிடப் பிறவியாய் பிறப்பது என்பது அரியதாகும். ஆனால் பிறந்த நம் இனத்தவர்களை நல்வழிப்படுத்தி இளைஞருக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி ஒற்றுமையான நாட்டினைக் கட்டியெழுப்பி மானிடப் பிறப்பின் அர்த்தத்தை எடுத்துக்காட்ட வேண்டும். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போன்று நாமும் நல்லவரோடு சேர்ந்தால் நல்ல குணம் உடையவ ராகத்தான் வாழலாம். தீயோரோடு சேர்ந்தால் தீய குணம் உடையவராகத்தான் வாழலாம். இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு அறிவாற்றல் அதிகம் எனத்தான் நம்பப்படுகிறது. எனினும் நல்ல வழியில் செல்வதற்கு நம் மூத்தோர் வழி காட்டுதல் வேண்டும். அப்போது தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

நாம் எல்லோரும் ஒரே இனத்தவர். நமக்கிடையில் வேறுபாடு இருத்தல் கூடாது. "தமிழன் என்ற இனம் உண்டு தனித்தே அவர்க்கொரு குணம் உண்டு. என்று கவிஞர் கூறியுள்ளார். அன்னைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைப் பேசும் தமிழர்கள் அன்பை அடிப்படையாகக் கொண்டவர்கள். அறச் செயல்களால் சிறப்புப் பெற்றவர்கள். அனைவரும் அன்று ஒற்றுமையாக இருந்தமையால் தான் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளனர். அன்றைதைபோல இன்று மட்டுமல்ல என்றைக்கும் நம் இனங்களுக்கு இடையே ஒற்றுமை நிலைபெற இன்றைய எதிர்கால சந்ததியினருக்கும் எடுத்துரைத்து ஒரு ஒற்றுமையான அமைதியான நாட்டினை உருவாக்க வேண்டும். மற்றும் இன்றைய உலகில் செய்தித் தாள்களைப் படிப்பவர் எண்ணிக்கை மிக அரிது. உலகப் புதினங்கள் முதல் உள்ளூர் புதினங்கள் வரை அறிந்து கொள்ள செய்தித்தாள்களைப் படிக்கும் திறனை வளர்க்க வேண்டும். அப்போது தான் நாட்டு நடப்புகளை அறிந்து செயற்டுவதற்கு நமக்கு உதவியாக இருக்கும்.

எமது நாடானது இயற்கை வளம் பொருந்திய எழில் மிகுந்த நாடாகும். வானளாவிய மலைகள், பாய்ந்து செல்லும் ஆறுகள், பார்ப்போரை பரவசப்படுத்தும் நீர்வீழ்ச்சிகள், கண்ணைக் கவரும் பூந்தோட்டங்கள், என வண்ணங்கள் சூழ்ந்துள்ள எமது நாட்டில் என்ன வளம் இல்லை. ஏன் நாம் செல்ல வேண்டும் அயல் நாட்டிற்கு எமக்கு இடையில் உயர்வு தாழ்வு இருக்கக் கூடாது தொழில் வித்தியாசம் இருக்கக் கூடாது. நான் பெரிது நீ பெரிது என்ற தன்மை இனி வரும் காலங்களில் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். ஏனெனில் அனைவரும் ஏதோ ஒரு வகையில் தனது தன்மானத்தோடு உணர்வோடுதான் இருப்பான். எனினும் வாழ்க்கைச் செலவுக்காக எவ்வாறான தொழிலையும் செய்யலாம். களவு, பொய் தவிர வேறு எந்தத் தொழிலையும் ஒற்றுமையோடு செய்தால் நாம் மட்டுமல்ல நம் தேசமும் வளம் பெறும் "செய்யும் தொழிலே தெய்வம் அந்தத் திறமை தான் நமது செல்வம்" என்பது எடுத்துக்காட்டான வரியாகும். "பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா" என்பதற்கு இணங்க நாம் மட்டுமல்ல இன்றைய சமுதாயத்தினருக்கு ஒற்றுமையான தொழிலே பலம் என எடுத்துக் கூறவேண்டும்.

உழைப்பால் உயர்ந்த ரஷ்ய மக்களை நம் மனதில் கொண்டால், அவர்களின் கருத்து உத்தரவால் வாழ்கின்றான் பணக்காரன். உழைப்பால் வாழ்கிறான் ஏழை, என்பது அவர்கள் உள்ளத்தில் வந்தும் உயரிய கருத்தாகும். உழைப்பின் மகிமையை இவ்வாறு உணர்த்தலாம். இன்றைக்கு ரஷ்யா வல்லரசு நாடுகளில் ஒன்றாக இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் வர்க்க வேறுபாடு அற்ற அனைவரது ஒன்றுபட்ட உழைப்பாகும். இவ் எடுத்துக்காட்டிற்கு அமைய நாமும் ஒன்றுபட்டு உழைத்து அமைதியான, ஒற்றுமையான வல்லரசு நாடாக எமது நாட்டையும் மாற்ற வேண்டும்.


"அன்றைய இலங்கை தனை ஆண்ட மறத் தமிழன் ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தான்" இதன் மூலம் விளக்கப்படுவது என்ன? அன்று முதல் நம் நாட்டை ஆண்டவர்கள் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளனர். அவ்வாறு எமது நாட்டிற்குக் கிடைத்த அங்கீகாரத்தை நாம் அனைவரும் ஒன்றுபட காப்பாற்ற வேண்டும். எனவே நாளைய தலைவர்களாக விளங்கப்போகும் இன்றைய சிறுவர்கள் நல்ல ஒழுக்கம் உடைய, அமைதியான, தேசப்பற்று மிக்கவராக உருவாக்கப்பட வேண்டும். என்பது எமது எல்லோரினதும் கடமையும் பொறுப்புமாகும். அனைவரும். ஒன்றுபடுவோம் முன்னேறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணிக்கக் கூடாது மனிதம்

**வேல் மகள்**
புளியம்பொக்கணை



மண்ணதில் மகளிர் மானம் மடியுது
எண்ணிப் பார்க்கவே ஏதோ செய்யுது
என்னவோ நடக்குது எப்படி உரைப்பது?
இன்னும் நம்பிட நெஞ்சம் மறுக்குது.

ஆண்களும் ஒழுக்கத்தில் நிறைந்தவர்
இல்லை
வீண் பழி கேட்டுமே வெம்புவார்
உண்டே
பெண்களின் பெருமையும் தாய்மையின்
புனிதமும் கண் முன் இங்கே கரைவதைக்
காண்பிரோ?



உயிர் வளர்த்திடும் தாய்மை அதுவே
உயிர் பறித்திடும் பேயாய் நடந்தது
மங்கையர் குலத்தின் மாணிக்கம்
இவளே
இங்கவர் புரிவது இனத்திற்கு வசையே

பெற்றிட்ட பிள்ளையை கொன்றிடும்
துணிவு
கற்றுத் தந்தவர் யாரடி பெண்ணே?
கொஞ்சிக் குலாவிய செல்வக்
குழந்தைகள்
கெஞ்சிக் கதறவும் கசக்கி அழித்தியா?

தரணியில் உயர்ந்தவர் தமிழர்கள்
நாங்கள்
தரங்கெட்டுப் போவது நியாயமா
சொல்லுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா என்றாலும் எம் நாடு
என்றாலும்
நிந்தை என்னவோ தமிழர்க்கு தானே.

கண்ணியம் இல்லா பெண்சிலர் இங்கே
மண்ணில் வாழும் நிலையது இதனால்
தாயோடு சேர்ந்து சிசுவும் செத்திட
பேயாய் ஒருவன் நடந்தனன் பாரீர்
தப்புக் காதல் தரணியில் வேண்டாம்
நித்தம் நடப்பதை நினைவில் கொண்டு
மழலைச் செல்வங்கள் மகிழ்வொடு
வாழ
அளப்பரும் ஈகம் தந்திடத் துணிவோம்.

அன்னையர் சிலபேர் ஒழுக்கம்
சிதைவதால்
பெண்ணினம் எல்லாம் பெருமை
இழப்பதா
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
என்பதை என்றும் வாழ்ந்திட
வைப்போம்.



தந்தை என்றிடும் தகமையை மறந்து
புந்தி யழிந்து புனிதம் கெடுக்கும்
காமுகர் சிலரது காடைத் தனத்தால்
நாமுறும் துன்பம் நலிந்திடச்
செய்வோம்.

கால மாற்றத்தில் சீர்கெடும் உலகை
காப்பது எங்கள் கடமை அல்லவோ
எல்லோர் மனங்களும் நல்லதை
எண்ணுங்கள்
நல்லதோர் உலகம் அமைந்திட
முயல்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பம்

திருமதி. நி. தஷாஜினி
கலவெட்டித்திடல்

வானம் எங்கும் கரிய பெரும் மேகங்கள் உருண்டு திரண்டு நகர்ந்து கொண்டிருந்தன. அப்பப்போ கண் ணைப் பறிக்கும் வெளிச்சத்துடன் மின்னலும் அதைத்தொடர்ந்து இடியும் கேட்டுக் கொண்டே இருந்தது. மழை சாதுவாக தூறத் தொடங்கியது. சமையலறையில் இருந்து வெளியே வந்து எட்டிப்பார்த்தாள் சாரதா. தலையில் இடை இடையே நரைத்த மயிர்களும் இளமையில் முதுமை தோன்றிய அந்த முகமும் அவளை நடுத்தர குடும்பத் தலைவி என்பதை அடையாளம் காட்டிவிடும். கண்களைச்சுருக்கி மழைத்தூறலின் ஊடாக ஒழுங்கையில் தன் மகளின் வருகையைக் காணாது தேடினாள். "இங்க எங்கப்பா நிக்கிறியள்? பிள்ளையை இன்னும் ரியூசனால காணேல ஒருக்கா றோட்டுப் பக்கம் பார்த்துக்கொண்டு வாங்கோவன்" என்று விறாந்தையோரத்தில் பத்திரிகை பார்த்துக்கொண்டிருக்கும் தன் கணவனைக் கடிந்து கொண்டாள். அதற்குப் பதிலாக "ஓம் அப்பா வாறேன்" என்று பதிலளித்தார் மனோ.

மனோ, சாரதா தம்பதியினர் பரந்தனில் இருந்து 10 Km தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வருகின்றனர். இருவரும் அரச உத்தியோகத்தில் பணிபுரிபவர்கள். ஆசைக்கொன்று, ஆஸ்திக்கொன்று என ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். மூத்தவனராம் , இளையவன் ராஜி. ராம் பிறந்து ஐந்து வருடங்களிற்குப் பின் பிறந்தவள் தான் ராஜி. கடைக்குட்டி ராஜியில் கொள்ளைப் பிரியம் பெற்றோர்களுக்கு அதை போன்று ராமுக்கும் கொள்ளைப் பிரியம். தங்கையின் சகல தேவைகளையும் நிறைவேற்றி வைக்கும் அண்ணனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம் காணப்பட்டான். தாயும் தந்தையும் தமது பிள்ளைகளை மிக்க அன்புடனும் கவனத்துடனும் வளர்த்து வந்தார்கள்.

மழைச்சாரலில் நனைந்து கொண்டே தகப்பனும் மகளும் வருகின்றனர். வரவிற்காய் காத்திருந்த சாரதா தலையை துடைத்த வண்ணம் படலையை நோக்கி நகர்கின்றாள். மகளினுடைய தலையை துடைத்து துவாய்த்துண்டை மனோவுடன் கொடுத்து விட்டு சுடு தண்ணிப் போத்தலில் கலந்து வைத்த தேனீரைப் பரிமாறுகிறாள். பரிமாறிய வண்ணமே ஏன் பிள்ளை நேரம் சென்று என்று கேட்டாள் சாரதா. சோதனைப் பேப்பர் தந்த அதான் அம்மா நேரம் கொஞ்சம் போட்டுது என்றாள் ராஜி. சரி சரி வடிவா தலை துடைச்சதோ என்று கேட்டுக்கொண்டே சமையலறைப் பக்கம் சென்று விட்டாள் சாரதா.

சுளகினுள் ஒடியலைக் கொண்டு வந்த சாரதா இதை கொஞ்சம் துப்பரவு செய்து முறிச்சுத் தாறிங்களோ? அல்லது கற்றல் வேலை ஏதாவது இருக்கா எண்டு கேட்டாள் மகளிடம் இல்லை அம்மா இல்லை அம்மா ஏன் இப்ப ஒடியல்? என்ன செய்யப்போறீங்கள்? அண்ணாக்கு ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ் எண்டா விருப்பம் அண்ணாக்கு அடுத்த கிழமை லீவு என்டு கதைச்ச அண்ணாதான் எல்லாம் செய்து வச்சிருக்க சொன்னது அதுக்குத்தான். நல்ல சத்தான சாப்பாடு பிள்ளை, முந்தின காலத்தில பழஞ்சோற்று பழந்தண்ணி அதுக்குள்ள பனாட்டுப் போட்டு சாப்பிடுற என்ன சுவை தெரியுமோ? மோர், கஞ்சி எண்டு எவ்வளவு சாப்பாடு? வேப்பம் பூ வடகம் பொரிச்சு சாப்பிட்டா பூச்சி வயிற்றில இருக்காது. இப்ப வேலை கூட பொம்பிளைப் பிள்ளைகள் என்டாலும் சரி பெடியங்கள் எண்டாலும் சரி அதை யாராவது சாப்பிடுங்கோ? எண்டால் இதென்ன சாப்பாடு எண்டு கேட்குதுகள்.

சொகுசு வாழ்க்கை முறை, ஹோட்டல் சாப்பாடு இவையெல்லாம் முடங்கிக் கொண்டே போகிறது. அதுதான் இப்ப சின்ன பிள்ளைகளுக்கு எல்லாம் புதுப்புது வருத்தம். இப்பத்தைய அரிசிச் சோறு இரவே நாறிப் போயிடும்அவ்வளவு மருந்து பாவனைகளை நிப்பாட்டி பழைய காலத்த மாதிரி மாடுகளை பட்டி போட்டு எருக்கட்டி, இலை குழைகளை பரவி உக்க விட்டு விதைச்சு , தோட்டம் செய்து சாப்பிட்டா வருத்தம் எல்லாம் பறந்து போயிடும். என்று கூறிக்கொண்டே பிட்டுக்கு மா குழைத்து விட்டாள் சாரதா. அம்மா! எனக்கு பழைய கால வாழ்க்கை முறை ரொம்பவே பிடிச்சிருக்கு. நோய் நொடியில்லா சந்தோசமான நிம்மதியான வாழ்க்கை முறை என்றாள் ராஜி.

இந்தக் காலத்தில றோட்டால தனிய போய் வர பயமாக்கிடக்குது. கலியுக காலத்தில எல்லாம் அவசரம் பிள்ளை நீங்கள் பள்ளிக்கூடம், ரியூசன் போய் வரேக்க கவனமா, நிதானமா போய் வேண்டும். என்ன பிரச்சனை, கஷ்டம், தடங்கல் எண்டாலும் அம்மாட்ட வந்து சொல்ல வேணும். அம்மாவோட மனசு விட்டு ஒளிவு மறைவு இல்லாம கதைக்கோனும், அப்பதான் நல்லம் பிள்ளை என்று அறிவுரைக் கூறிக்கொண்டு இருக்க டெலிபோன் மணி அடித்துக்கொண்டு இருந்தது. சாரதா அழைப்பினை ஹலோ சொல்கிறாள். அம்மா.... என்றதும் தம்பி என்ன செய்யிறாய் என சுகம் விசாரித்து கதைத்துக் கொண்டிருந்தனர். தன் செல்லத்தங்கையிடம் டெலிபோனை கொடுக்கச் சொல்லுகிறான் ராம். டெலிபோன் கைமாறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா..... என்ன செய்யிறீங்கள்? என வினவிய வண்ணம் தங்கள் அன்புச் சண்டையைத் தொடங்கிவிட்டனர் ராமும் ராஜியும். அண்ணா நீங்க வீட்டில இல்லாத குறைதான் ஒன்று, மற்றபடி நாங்க நல்ல சந்தோசமா இருக்கிறம். நீங்களும் பட்டப்படிப்பை முடிச்சிட்டு வந்தீங்க என்டால் எங்கட வீடு வசந்த மாளிகை தான் அண்ணா என்றாள். அதற்கிடையில் மனோ வந்துகொண்டிருந்தார். அப்பா! இந்தாங்கோ அண்ணா கதைக்கிறார் எனக்கூறி டெலிபோன் கைமாறுகிறது.

என்னப்பா செய்யிறீங்க, ஏன் இப்படி மூச்சு திணறுது. என்ன செய்தனீங்கள்? ஒன்டும் இல்லைத்தம்பி; பின்னுக்கு கொஞ்ச விறகு கிடந்து கொத்தி அடிக்கினனான். மழை பெய்தா கஷ்டம். விடிய காலையில் அம்மாக்கு வேலைக்குப் போற நேரத்தில கஷ்டம் சமைக்க கொஞ்சம் கொஞ்சமா கொத்தி அடுக்கிறது அதுதான். ஏன் அப்பா காஸ் அடுப்பு ஒன்டு வாங்குங்கவன், அல்லது இரண்டு பேரும் சம்பளம் எடுக்கிறியள் கூலியாளைப் பிடிச்சு கொத்துங்கவன். இல்லை தம்பி வேலைக்கு போனால் ஐந்து நாளும் கதிரையில இருந்து வேலை, பிறகு வீட்டிலையும் வந்து வேலை செய்யாம இருந்தா வருத்தம் வரும். பிறகு சம்பளக்காசு ஆஸ்ப்பத்திரிக்கு செலவு செய்யத்தான் காணும். என்ன சாப்பாடு எண்டாலும் விறகு அடுப்பில் சமைக்கிற சுவை வராது. உந்த காஸ் அடுப்பில சமைக்க பொல்லாத வருத்தம் எல்லாம் வரும் தம்பி. "சரியப்பா நான் பிறகு கதைக்கிறன் என்று டெலிபோன் அழைப்பு துண்டிக்கப்பட்டது."

இரவுச் சாப்பாடும் தயாராகி விட்டது. இரவுச் சாப்பாட்டைக் கொண்டு வந்து மேசையில் வைத்து விட்டு தனது அலுவலக வேலைகளை சரி செய்வதற்காக தனது அறையினுள் போகிறாள் சாரதா. ராஜி அப்பாவுக்கு தன் சோதனை பேப்பர்களை காட்டிக்கொண்டு இருக்கிறாள். மூவரும் தம் வேலைகளை முடித்ததும் இரவு நேர உணவுக்காக ஒன்று கூடுகிறார்கள். உணவு உண்டு விட்டு நிம்மதியான உறக்கத்திற்கு செல்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் சமயக் கல்வியும் பெருகிவரும் வன்முறை கலாசாரமும்

றோ. வராகினி

மனிதனை மனிதனாக வாழ வைக்கும் முக்கிய மூலாதாரமாக சமயங்கள் காணப்படுகின்றன. மனிதனின் தனித்துவத்தை எடுத்தியம்பும் உயரிய காரணியாக சமயம் காணப்படுகின்றது. முக்கிய படிவங்களிலும், மனிதனின் உயரிய அடையாளத்தை தெளிவு படுத்துவதற்குமான தன்சார் மதம் சமயம் என அறியத்தரப்படுகின்றது.

இலங்கை ஓர் பல்சமய, பல்லின, பல்கலாசார நாடாக காணப்படுகின்றது. பௌத்தர், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என பல மதங்களைப் பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். மதம் சார் பாடசாலைகள் பண்டைய காலத்தில் காணப்பட்டன. இவை பரீஸ் பாடசாலைகள், அல்லது சண்டே ஸ்கூல் எனவும், சன்மார்க்க பள்ளிகள் எனவும், பௌத்த பிரிவேனாப் பள்ளிகள் எனவும், அடையாளப்படுத்தப்பட்டு உயரிய ஒழுக்க சீலர்களாக மக்கள் வாழ முனைந்தனர், சமயம் சார் நடத்தைகள் உயரிய முறையில் பேணப்பட்டு வந்தன. குருகுலக்கல்வி, திண்ணைப்பள்ளிகள், ஆலய பாடசாலைகள் என பிரதேசத்திற்கு உரியவாறு சமயக் கருத்துக்கள் தினமும் புகட்டப்பட்டன.

இவ்வாறு மாணவர்கள் ஒழுக்க சீலர்களாகவும்; தான் வாழும், இனம், மதம், கலாசார சீலர்களாக கீழ்ப் பணிவுள்ளவர்களாக மாதா பிதா குரு தெய்வம் என்று காலடி பணிந்து ஆசீர் பெற்று; பெற்ற மனம் குளிர உயரிய சன்மார்க்க பண்புகளுடன் வளர்க்கப் பட்டனர். முன்னைய காலத்தில் பள்ளிகளில் முதல் பாடமாக சமய விழுமியக் கல்வியும், சமய போதனையுமே காணப்பட்டன. கட்டாயம் சமய பாடம் முதலாவது பாடமாகக் கற்பிக்கப்பட்டது. அயலில் உள்ள ஆலயங்களுக்குச் செல்வது பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதும் கட்டாயமாக்கப்பட்டது. இதனால் அறநெறி நிலைத்திருந்தது.

இன்றோ நிலை தலைகீழாகத் தடம் புரண்டு. கரை தெரியா ஓடமாக வாழ்க்கை சிதறப்பட்டு சிறகுடைந்த பறவைகளாக துடி துடித்து மாண்டு போகும் நிலையை பரிதாப கண்ணீருடன் நோக்க வேண்டியுள்ளது. "கொடுமையைப் பார்க்கவோ விழிகள் உனக்கு" என்று ஓர் கவிஞன் பாடியுள்ளான். இன்று பெற்ற தாயே; இந்தப் பிள்ளையை ஏன் பெற்றேன். என்று தலையில் அடித்துக் கதறும் நிலைக்கு சமூகம் வந்து விட்டது. அன்றாடம் செய்திகளாக வாள்வெட்டு, வழிப்பறிப்பு கொலை, கொள்ளை, வன்புணர்வு அப்பப்பா! சொல்வே தலைச் சுற்றுகின்றது. வன்முறைக் கலாசாரம் கரைபுரண்டோடுகின்றது. முகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வன்முறை. சொற்களில் வன்முறை பார்வையில, செயல்களில் எல்லாமே வன்முறை......

ஆன்மீகம் கற்றுத் தரும் ஆலயங்களில் சுவாமி தூக்க ஆட்கள் இல்லை, வழிபாடுகள் வெறும் சடங்காகி விட்டன. வெற்று ஆலயங்களில் சம்பிரதாய நிகழ்வுகள். சிமாட் போன்களும், நெட் வேர்க் தொடர்பும் சின்னத்திரை மோகமும், சினிமாக் கலாசாரமும் போதை தலைக்கேறிய கொடூரமும் எம்கண் முன்னே அரங்கேறுகின்றன. பெற்றவர்களே பிள்ளைகளைக் கண்டிக் காத தண்டிக்காத அளவு சட்டங்கள் வரம்பு மீறி செயற்படுகின்றன. பிள்ளை நேயம் என அளவுக்கதிக சுதந்திரம் வழங்கி பெற்றோர்களையே சிறையிடும் புதிய சரிதம் இடம் பெறுகின்றன. தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடும் அமைப்புக்கள் கண் கொத்தி பாம்பாக வலம் வருகின்றன. எங்கே அமைதி? எங்கே சாந்தி? என அலைந்து திரிகின்றனர் மக்கள்.

வெளியே சொல்ல முடியாத அளவு வாள்வெட்டு, இளைஞர் குழுக்களின் அடாவடி, கழுத்தறுப்பு, வண்புணர்வு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன; இன்று சராசரி விபத்துக்களிலும் மற்றும் தற்கொலை போன்ற நிகழ்வுகளிலும் சராசரி இளையோர்களே அதிகம் ஈடுபடுவதாக புள்ளி விபரங்கள் எடுத்தியம்புகின்றன. போதையின் பாதையில் இளையோர்கள் பயணிக்கின்றனர். இதனால் இளைய சமூகம் ஒன்றைக் காணமுடியுமோ? என ஏக்கப்படுகின்றனர் சமூக ஆர்வலர்கள்.....

வளர்ந்து வரும் பிஞ்சுகளின் நெஞ்சுகளில் ஆன்மீக சமயப்பற்றை, ஒழுக்கக் கல்வியை ஐந்திலே புகட்ட வேண்டும். இதற்காக பின்வரும் நடவடிக்கைகளை அரசு, சமய நிறுவனங்கள் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

1. பாடசாலையில் சமயக் கல்வியை கட்டாயமாக்கல்
2. சமய ஒழுக்க ஆசிரியர்களை நியமித்தல்
3. மாணவர்களுக்கு சமய கருத்தமர்வுகளை பயிற்சிகள் வழங்கல்
4. ஆலய மட்ட சமயக் கல்வியை கட்டாயமாக்கல்
5. மதகுருமார் பாடசாலைகளை தரிசித்தல்
6. சமய விழாக்களை நடாத்தல்
7. அறநெறிப் பாடசாலைகளில் தனியார் வகுப்புக்களை தயார் செய்தல்
8. முறையான கண்காணிப்பு நடவடிக்கை
9. மறைக்கல்வி விழா, பாசறை, வேலைத் திட்டங்கள்
10. சமய விழுமிய ஆர்வலர்களை உருவாக்கல்.
11. சமய விவாதப் போட்டிகள், விழாக்கள்.

இவ்வாறான உயரிய சமய மார்க்க நிகழ்வுகளை, கண்டிப்பாகவும், சட்டம் இயற்றியும் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, இயன்றளவு சமய மார்க்க சிந்தனைகளை சமுகத்திற்குப் புகட்டி. திசைமாறும் சிறுவரை திசைமுகப்படுத்தி உன்னத ஆரோக்கிய சமூகமாக மாற்ற முடியும் என்பது வெள்ளிடைமலை. அதை விட, தன்னிலையை தானே உணர்ந்து செயற்பாட்டால் உலகிலே வன்முறை என்ற அரக்கனை ஓடஓட விரட்ட முடியும். எழுவோம் வளமாய் வாழ்வோம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செதுக்கும் கலை

ஜெ. மனுவர்ஷன்
பெரியகுளம்



கண்ணுக்கு இனியது கலை
கருத்திற்கும் இனியது கலை
எண்ணம் எங்கும் தித்தித்து
எழுச்சியூட்டும் கலை

சின்னவரின் சிந்தனைகளை
சிறகடிக்க வைப்பது கலை
பெரியவரின் உள்ளக் கிடக்கையை
வெளிக் கொள்வது கலை

ஆடலாம் பாடலாம்
நடிக்கலாம் வரையலாம்
செதுக்கலாம் உருவாக்கலாம்
ஒப்புவிக்கலாம் வடிக்கலாம்

எண்ணங்கள் எடுத்தியம்பி
ஏற்றம் கொள்கிறதே
தன்னாலே உருவாக்கி
தலை நிமிரச் செய்யும் கலை

மன்னன் கூட - தன்
மணி முடி தாழ்த்தி
மனம் ரசிக்கவல்ல
மகத்தான கலை

பண்டைய காலங்களில்
பண்பாடுகளைக் கட்டிக்காத்ததும் - எம்
பழமையான கோயில்களின்
பாரம்பரிய கலை வடிவங்கள்

இன்றைக்கு சமுதாயம்
இருந்த இடத்திலேயே
இணையத்தில் தட்டி
இரசிக்கிறது கலையை

தொன்று தொட்டு எம்
தொன்மைகள் காத்து
உலகெல்லாம் தமிழரசின்
உன்னதத்தை எழுதியது கலை

கோயில்லா ஊரில் குடியிருக்கக்
கூடாதென்றார் ஆன்றோர் - ஏனெனில்
கோலக் கலைகளின் ஊற்றாய்
கோலோஞ்சியவை அவைதான்

கலைகள் தான் - எம்
கல்போன்ற வாழ்விலே
கருத்தூன்றி சிறப்பமாய்
வடிவமைக்கும் உளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலி தந்த வாழ்வும் .....

யோ. கோபிநாத்

நீலக் கடலோடு
நெடுந்தூரம் போனவளே
காத்திருக்கின்றேன்
கடல் நீரோடு - கண்ணீர்
கலக்கும் வலிகளுடன்

கடல் யாரையும்
தன்னகத்தே வைக்காது
மண்ணகத்தே தள்ளுமென்ற
உன் மகுட வாக்கியத்துடன்
காத்திருக்கின்றேன்

நீரைத் தருகின்றாய்
அழகிய நுரைகளைத் தருகின்றாய்
மீனையும் முத்தையும்
மீனவ(னி)ற்கு - அழகிய
வாழ்வையும் தருகின்றாய்

வலைகளைச் சுமந்து
வள்ளமதில் சென்றவனை
வலியோடு தேடுகின்றேன்
என்னவனை மட்டும் - ஏன்
தர மறுக்கின்றாய்

பரந்து விரிந்த - உன்
மடிதனில் வீழ்ந்தவர்
யாபேரும் வாழ்ந்தனரே
எனக்கு மட்டும் - ஏன்
வலிகளைத் தருகின்றாய்

மெல்ல வலை வளைந்து
அள்ளி வரும் மீனினத்தை
துள்ளிக் கடல் பாய்ந்து
துணிவாய் மடியமர்த்தி
"மண்டாடி" என்று
மகிழ்வுடனே வாழ்ந்த - உனை
மன்றாடிக் கேட்கின்றேன்
என்னகத்தே வந்துவிடு

காலைக் கதிரவனும்
ஆழ ஊடுருவி
அன்பான உன்னை
அரவணைத்து வருவானென
காத்திருக்கின்றேன் - உன்
கருவினைச் சுமந்தபடி
வலிதந்த வாழ்வுடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையோடு இயைந்த வழக்கு

**செல்வநாயகி இராஜரட்டினம்**
பெரியகுளம்.

இலங்கையின் வடபுலம் கற்பகதரு எனப் போற்றப்படும் பனை மரங்கள் செறிந்த பிரதேசமாகும். இங்கு வாழும் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் பனையைத் தமது வாழ்வின் அங்கமாகவே கருதுகின்றனர். நகர மயமாக்கலாலும் துரித வீடமைப்புத் திட்டங்களாலும், நிலங்கள் துண்டாடப்படுவதாலும் பனை வளம் அழிக்கப்பட்டு வருகிறது. "பனையின் நிமிர்வு எமது வாழ்வின் உயர்வு" என்ற உண்மை எதிர்காலச் சந்ததியினர்க்கு தெரியாமல் போகும் நிலை உருவாகிவருவது வேதனைக்குரியது. அதற்கான ஞாபகமூட்டலாகவே இக் கட்டுரை அமைகிறது.

எமது சொத்தாகப் போற்றப்படும் இலக்கியங்களும் கூட, பனையின் மகத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன. ஈழத்துப்புலவரான காசிநாதப்புலவர் பனையின் பெருமையை பனங்காய்ப் பாரதம் எனப்படும் தல புராணத்தைப் பாடியுள்ளார். ஆனால் இன்று இளம் சந்ததியிடையே பனை என்றதும் ஞாபகத்துக்கு வருவது புழுக்கொடியல் மட்டுமே. வெளி நாட்டில் இருந்து ஊர் திரும்பும் உறவுகளும் கூட, புழுக் கொடியலையே தேடுகின்றனர். பனம் விதைகளை சேர்த்துப் பாத்தி போட்டு உரிய காலம் வரும்போது கிண்டி எடுத்தால் அது கிழங்கு.

கிழங்கின் உருசியை மறக்க முடியாத சத்தி முற்றப் புலவர் அதன் அழகையும் நயக்கின்றார். நாரைகளைக் கண்ட புலவர் வறுமையிலும் வாடையிலுங் கூட

**"நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பனம்படு கிழங்கு பிளந்தன்ன**
**கூர் வாய் செங்கால் நாராய்..."**

எனப் பாடியிருக்கிறார். இக் கூரிய நுனிப்பகுதியை உடைய கிழங்கை பச்சையாகக் கிளித்து காயவிட்டு எடுத்தால் ஒடியல். ஒடியலை இடித்து மாவாக்கி ஒடியல்பிட்டு அவிப்பார்கள். சோற்றுடன் சேர்த்து ஒடியல் பிட்டை உண்பதனால் உணவில் மாப்பொருள் அளவு கூடாது. வயிறும் நிறையும். அத்தோடு ஒடியல் மாவில் ஒடியற் கூழ் காய்ச்சினால் விரும்பாதவர்களே இருக்க முடியாது. கல்லடி வேலுப்பிள்ளை "கொண்டாடினான் ஒடியற் கூழ்" என்ற பாடல் நகைச்சுவையாக கூழின் சுவையை எடுத்துக் கூறுகிறது. ஆனால் இன்றோ நீரிழிவு நோயாளிகளின் உணவு வகையாக ஒடியல் மாறிவிட்டது. ஒடியல்பிட்டை தூளாக்கி தேங்காயும் சீனியும் சேர்த்து காலையுணவாக உண்ட அக்கால சிறுவர்களின் பலம் இக்கால குழந்தைகளுக்கு உண்டா?

கிழங்கை அவித்து கிளித்து முறித்து உண்பதும் தனிச்சுவைதான். அதனை உரலில் இட்டு உள்ளி, மிளகு, மிளகாய் தேங்காய்யுடன் இடித்து திரணையாக்கி உண்டால் அதற்கு நிகர் எதுவும் உண்டா? முதியோரும் சிறுவரும் கூட விரும்பி உண்பர். அவித்த கிழங்கை குந்து நீக்கிக் காய விட்டால் பல காலம் பாதுகாப்பாக இருக்கும். புழுக்கொடியல் கிடைக்கும். புழுக்கொடியலை மாவாக்கி தேங்காயும் சீனியும் சேர்த்து உண்பதும் நம்மவர் வழக்கம். இது செமிபாட்டைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிதப்படுத்துவதுடனாக மலச்சிக்கலை நீக்கும் அருமருந்தாகவும் காணப்படுகிறது.

**"தாலக்கனி ஒன்றினுக்காக**
**தரை மேல் மாந்தர் பலர் திரண்டு**
**வேல் கத்திகள் கொண்டெறிந்து**
**விஜயம் பொருதும் வளநாடன்"** என களனிபுராணத்தில் நட்டுவச் சுப்பையனார் வர்ணிக்கும் தேசம் எமது வடபுலமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் பளையும் கண்டாவளையும் இன்றும் பளம் பெருமை பேசும் இடங்களாகக் காணப்படுவது பெருமைக்குரியதாகும். பனம்பழம், பனங்காய் என்றே கூறப்படும். பனம் பழத்தைச் சுட்டு தோல் நீக்கி முதல் நாள் புளிந்து வைத்த பனங்களி காடி எனப்படும். அதனில் தொட்டு மூவர் மூவராகப் பங்கிட்டு சிறுவர்கள் முதியவருடனாக சேர்ந்து உண்ணும் போது சிரிப்பும் கேலியும் கூடவே இனிக்கும். விடுகதைக்கு விடைதேடி அறிவை வளர்க்கும் நம் மூதாதையர் பனம் பழத்துக்கு ஒரு விடுகதை கூறுவர்.

**"தொப்பென்று விழுந்தான்**
**தொப்பி கழன்றான்"**

அவன் யார்? இயற்கையோடு இயைந்த எம் வாழ்வை இது பிரதிபலிக்கின்றது அல்லவா? பனம்பழம் கால்நடைகளுக்கு உணவாகவும் பயன்படும்.

பனம்பழத்தைப் பிளைந்து வடித்ததும், பனையோலையால் பாய் செய்து அதன் மேல் மூன்று நாட்கள் படைபடையாக ஊற்றி காயவிட்டு பின்னர் தட்டுத்தட்டாக வெட்டி எடுத்தால் அது பனாட்டு. தேங்காய்ச் சொட்டுடன் சுவைத்தால் தனிச்சுவைதான். சீனிப்பாணியிட்டு சீரகத்தூள் தூவியெடுத்தால் பாணிப் பனாட்டு சின்னப்பசி எடுக்கும் தருணங் களில் கை கொடுக்கும். பனங்களியை மாவுடன் இனிப்பும் சேர்த்துப்பிசைந்து ஆலமிலையுள் வைத்து மடித்து அவித்தால் ஆலமிலைப்பிட்டு, உருண்டையாக்கி பாலில் இட்டு அவித்தால் பால்ப்பலகாரம். எண்ணெயில் பொரித்தெடுத்தால் பனங்காய்ப் பலகாரம். தமிழர்களில் கோடைகால உணவுகள் இவை. இவை உடல் வெப்பம் அடைவதைத் தடுக்கும். அத்துடன் உறவுகளை இணைக்கவும் பயன்படும்.

முளைத்திருக்கும் பனம் விதைகளை வெட்டினால் சுவையான பூரான் வெள்ளைநிறத்தில் கிடைக்கும். கிழங்கு கிண்டியவுடன் வரும் பனம் விதைகளை வெளியிலே குவித்தால் அடுத்த வருடம் அழகான ஊமல்களாக மாறும். ஊமல்கள் அடுப்பெரிக்கவும் புகையிலை உலர்த்தவும் பயன்படும். அதுமட்டுமல்ல சிறுவர்கள் அழகான காற்றாடி, பொம்மைகளை செய்து விளையாடுவர்.

பனையில் இளையது வடலியாகும். வடலி மட்டைகள் நீளமாக இருந்தால் அவை பாம்போடி வடலி மட்டைகள் எனப்படும். அம் மட்டையை வெட்டி கருக்கைச் சீவி நார் உரித்தால் கட்டுவதற்கும், இடியப்பத்தட்டு செய்வதற்கும் பயன்படும். பெரிய பனை மட்டை நார்; நார்க்கடகங்கள் பின்னவும் கடகங்களுக்கு மட்டை வைக்கவும் பயன்படும். குருத்து வெட்டும் போது கத்தி கையில் வெட்டினால் குருத்தில் உள்ள பூஞ்சை காயத்தில் போட்டால் சரியாகிவிடும்.

ஓலைகளின் பயன்பாடோ சொல்லவே முடியாது. பெரிய பனை ஓலைகள் வீடு வேய்வதற்கு பயன்படும். அதனைச் சிறுசிறு கீலங்களாக ஆக்கினால் மாடுகளுக்கு உணவாக பயன்படும். வேலி அடைக்கவும் பயன்படுத்தலாம். பசுந்தாட் பசளையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்க்கவும் முடியும். துரவுகளில் இருந்து நீர் இறைக்க பட்டைகள் செய்யப்படும். குருத்தோலைகள் காயவிட்டு எடுத்து வரும்போது ஒரு புறம் ஈர்க்கு, மறுபுறம் அடவியன் வரும் ஈர்க்கு சுளகு பின்னவும், கட்டுவதற்கு கயிறாகவும் பாதுகாப்பான உணவுகளை வைக்கும் உறி செய்யவும், சட்டி, பானைகள் வைக்கும் திருகளிணி செய்யவும், தூசு தட்டும் துடைப்பான் செய்யவும் பயன்படும். வடலி ஓலையில் வெயிற் காலத்தில் விசிறும் விசிறிகளும் செய்யலாம்.

வார்ந்த ஓலைகளில் பிட்டவிக்கும் நீத்துப்பெட்டி காசுவைக்கும் கொட்டப் பெட்டி, அர்ச்சனை செய்யும் பிராமணப் பெட்டி, மூடற்பெட்டி, அடுக்குப் பெட்டி, மாவரிக்க குழைக்க மாப்பெட்டி, சிறுவர்கள் சாப்பிட குஞ்சுப் பெட்டி, சிறுவர்கள், தலைக்கு தலைப் பெட்டி (தொப்பி) விதைகள் விதைக்க விதைப்பெட்டி, கடகப்பெட்டி, தையல் பெட்டி எத்தனை பெட்டிகள்? அத்துடன் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் "கொப்பறைகள்" இவை அந்தஸ்தை எடுத்துக் காட்டும். கடைக்கு எடுத்துச் செல்லும் உமல் எனப்படும். கைப்பை, களி பினைந்து வைக்கும் பிடி இல்லாத உமல், பாய்கள் பந்திப்பாய் வரிசையாக இருந்து சாப்பிட உதவும் படுக்கைப்பாய், சாயம்போட்ட பாய், காயவிட உதவும் களப்பாய், சோறு ஆறவிட உதவும் வெள்ளைப்பாய் இன்னும் எத்தனை ரகங்கள். இன்னும் சோறு ஆறவிட விழாக்களில் வெள்ளைப்பாய்க்கு மவுசு உண்டு. "**காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்.**" இந்த அநுபவ பழ மொழியையும் தந்தது பனைமரமே. குருத்து வெட்டுபவர்கள் பெரிய ஆண்கள் காயவிடுவதும் எடுப்பதும், சிறுவர்கள் பன்ன வேலை செய்வது, பெண்கள் பொத்துவது பிள்ளைகள். இதனால் லாபம் கிடைப்பதுடன் அனைவருக்கும் பொழுது போக்கும் மன ஒற்றுமையும் வளர்கிறது.

பனையின் இளங்காய் நுங்கு ஆகும். நுங்கை முடி நீக்கி வெட்டி நுங்குக் கண்களை சுவைப்பதில் அலாதி இன்பம் கிடைக்கும். நுங்கின் முடியாக்கி எனப்படும். அதனைக் கரண்டியாக்கி கூழ், களி உண்ணவும் பயன்படுத்தலாம். காலை வேளையில் விழுந்து கிடக்கும். நுங்குகளைப் பொறுக்குவதற்காக கடகங்களுடன் சிறுவர் புறப்படுவர். கூட நுங்கு பொறுக்குதல் போட்டி. உற்சாகமாகப் பொறுக்கிய நுங்கை பத்திரப்படுத்தி விட்டு பாடசாலை சென்று மீண்டும் வந்து நுங்கை குடித்து மகிழ்வர். குரும்பைக் கயர்கள் அரிவாளில் வெட்டி சிறு துண்டுகளாக்கி கால்நடைகளுக்கு உணவாக்கப்படும்.

மட்டைகள் வேலியடைக்கவும் அட்டாளை, பரண் போன்ற பொருள்கள் வைக்கும் தட்டுக்களையும், மனிதர்களின் இருக்கை ஆகவும் பயன்படும். கங்குமட்டைகள் விறவுகளாகப் பயன்படும். சவர்க்காரம் இல்லாத காலங்களில் பனங்கழியும், கொக்காரைச் சாம்பலுமே துணி துவைக்கப் பயன்பட்டன. தலை முடியைத் தூய்மைப்படுத்தும் அரப்பு (சம்பூ) ஆகவும் பயன்படுத்தப்பட்டது. வளர்ந்தவர்கள் அனைவருக்கும் தெரியும்.

கள் இறக்கும் தொழிலை ஒரு சாரார் செய்து வருகின்றனர். கள் அருந்தும் தொழிலை அனேகமாக ஆண்கள் விரும்புகின்றனர். இடத்துக்கு இடம் கள்ளுத் தவறணைகள் இன்னும் உண்டு. கள் அருந்த பனை ஓலையால் செய்யப்படும் புழாக்களும், அவை உணவை ருசிக்க தட்டுவங்களும் பயன்பட்டன. தட்டுவங்கள் போடப்பட்ட இடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தட்டுவன் கொட்டி" என்று இன்றும் பெயர் பெற்று விளங்குகிறது. நோஞ்சான் சிறுவர்கள் வலிமை பெற ஒரு பனைகள், இளம் பாளைக்கள், கொடுப்பவர்களும் உண்டு. அப்பத்துக்கு மா புளிக்கவைக்கவும் கள்ளைப் பயன்படுத்துவர்.

கள்ளை வடிப்பதற்கு பன்னாடைகள் உதவுகின்றன. அது மட்டுமன்றி பன்னாடைகளை அடுப்பு மூட்டவும் சூழ் கட்டவும் கூட பயன்படுகின்றன. கள் இறக்க மண் முட்டிகள் பயன்படுத்தப்படும். அதற்கு மோர் விடுகதை உண்டு. **"மாடேறி மேயாத மகிழம்பூப் பிட்டியில மண்ணேறிப் பால் குடிக்குது அது என்ன?"** என்பதே அதுவாகும் கள்ளில் இருந்து பனஞ்சாராயம் உற்பத்தி செய்யப்படுகிறது. பளைப்பகுதியில் இவ்வாறானதொரு தொழிற்சாலை உண்டு.

முட்டிக்கு சுண்ணாம்பிட்டு பதநீர் பெறப்படும். பதநீர் கஞ்சி காய்ச்சவும், மாங்காய் போட்டு வெயிற் காலத்தில் குடிக்கவும் உகந்தது. பதநீரை அருந்திய மாதன முத்தா கிணறு காவிய கதை நகைச் சுவையாக பேசப்படுகிறது. பதநீரை காய்ச்சி சிலர் பனங்கட்டியை குட்டான்களில் ஊற்றி பனங்கட்டி ஆக்குவர். தொழிற்சாலைகளில் பதநீர் பனங்கட்டியாகவும் பனம் வெல்லமாகவும் மாற்றப்படுகிறது. கண்டாவளை வெளிக் கண்டல் சந்தியில் பனம் வெல்ல தொழிற்சாலை உண்டு. பனங்கட்டி மருந்துகளாகவும், சுவைக்காகவும் பயன் படுத்தப்படுகிறது. இதற்காக ஒரு விழாவே உண்டு. அதுதான் ஆடிப்பிறப்பு விழா. கோடையில் உடல் உஸ்ணத்தைச் சீராக்க எடுக்கும் பெருவிழா. அன்றைய தினம் பனங்கட்டிக் கூழ் பிரதான உணவாகும். இதனை நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

**"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூழப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்?
கொழுக்கட்டை தின்னலாம்.....** என
அழகாகப் பாடியுள்ளார்.

பனை மரங்கள் வீட்டுமரங்களாக பயன்படுகின்றன. கிணறுகளில் துலா அமைக்கவும் கிணறுகளில் இருந்து தண்ணீரைத் தொட்டிக்கு எடுத்துச் செல்லும் கால்வாய்களாகவும் அன்று பயன்பட்டன. அது மட்டுமன்றி நல்ல தண்ணீரை எடுக்க தோண்டிய பூவல்களைப் பாதுகாக்கவும் கொட்டுகள். சிறாம்புகள் அடுப்பெரிக்கவும் பயன்பட்டன. பறவைகள் தங்கும் உறைவிடங்களாகவும் கொட்டுகள் பயன்பட்டன.

பிளாஸ்டிக் பாவனையும், மின்சாரம் பயன்பாடும், பொதியிடப்பட்ட தின்பண்டங்களை தயங்காமல் சுவைக்கும் மனப்பாங்கும். வந்த பின்னர் பனையின் பயன்பாடு குறைவடைந்து வருகிறது. பனை இயந்திரத்தால் புரட்டி அழிக்கப்படுகின்றன. மண்ணெய்யால் படைவைக்கப்படுகின்றன. இவ்வாழ்வு அதல பாதாளத்துள் எம்மையும் எம் சந்ததியையும் தள்ளிவிடப் போகின்றது. செயற்கையான வாழ்வு, நோய் உள்ள சமுதாயத்தையே தோற்றுவிக்கும். மருந்தை உணவாக்கும் கலாசாரத்தை நிறுத்தி உணவை மருந்தாக்க பனைவளம் காக்க வேண்டும். பனையோடிணைந்த வாழ்வு குறைவற்ற மகிழ்ச்சியை மீண்டும் எமக்குப் பெற்றுத்தரும். "பனைவளம் காப்போம்."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஸ்பிரயோகம்

S. செல்வா
(கட்டைக்காடு)

பெண் என்றால்
பேயும் இரங்கும் என்பார்கள்
அரக்க மனம் கொண்ட உனக்கு
இரக்க மனம் இல்லையா?
வயது எல்லை இன்றி நீயும்
இளம் பிஞ்சுகளை நசுக்க நினைத்ததேனோ
துஸ் எனும் பிரயோகத்தால்
பத்து அகவை நிறையாத
பிஞ்சுக் குழந்தைகளை
மரணம் என்ற ரீதியில்
சடலமாக புதைத்து விடும்
மிருகமான கொடூரச் செயல்
இன்னும் தான் நடக்கிறதே!
நஞ்சை நீயும் உன் மனதில் வைத்தா
இளம் பிஞ்சை நீயும் கொல்லுகிறாய்
தப்பு நீயும் செய்து விட்டு
கஞ்சாவை சாட்டுவதேன்
மது என்னும் ஒரு பேர் வழியால்
மாது என்னும் இளம் பிஞ்சை
இரக்க மனம் இன்றி நீயும்
இளம் கற்பதனை அழிப்பதேனோ
ஏனிந்த மனங்கள் கொண்டு
இப்படியான கொடூரச் செயல்
இனியும் தான் ஒழியாதோ.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிய பூக்கள் (சிறுகதை)

**சரவணமுத்து ரங்கநாயகி**
இல- 24, குமரபுரம், பரந்தன்.

விக்கியும் சுமிதாவும் காதல் திருமணம் செய்து கொண்டு யாருக்கும் தெரியாமல் கிராமப் புறத்துக்கு வந்து வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் பெற்றோரின் விருப்பம் இன்மையால் தான் கிராமப் புறத்தில் வாழ வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. சுமிதா வசதியான குடும்பத்தில் வாழ்ந்த பெண். விக்கியின் குடும்பம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர். சுமிதா எந்தக் குறையும் இல்லாது பெற்றோருடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தவள். எது கேட்டாலும் உடனே பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். நன்றாகப் படித்த சுமிதா போன் மூலம் கதைத்து காதல் கொண்டு விக்கி என்னும் நண்பனையே திருமணம் செய்தாள்.

நகர்ப்புறத்தில் எல்லா வசதிகளுடனும் வாழ்ந்த சுமிதாவுக்கு கிராமப்புற வாழ்க்கை பிடிக்காமல் தினமும் அழுது கொள்வாள். பெற்றோருடன் வாழ்ந்த வாழ்க்கையை மீட்டுப் பார்த்து நொந்து கொண்டாள். போன் மூலம் தொடர்பு கொண்டு காதல் கொண்ட வாழ்க்கையை நினைத்து தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுட்டேனே என்று புலம்பினாள். போன் மூலம் தொடர்பு கொண்டு முன்பின் தெரியாதவர்களுடன் பழகி திருமணம் செய்தவர்கள் எத்தனை பேரின் வாழ்க்கை சீரழிந்து போகின்றது. அவசரத் தேவையைக் கருதிப் போன் பாவிக்க வேண்டும்; தேவைக்கு ஏற்ப போன் பயன்படுத்தினால் பணமும் செலவாகாது. நேரத்தையும் செலவு செய்யாது மீதப்படுத்தலாம். இனி வரும் சந்ததியினரது கையில் போன் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். விக்கியை நம்பி வந்த சுமிதா வாழ்ந்து தானே ஆக வேண்டும். பெற்றோரை விட்டுப் பிரிந்து வந்தவள் இனி எப்படி பெற்றோரின் முகத்தில் விழிப்பது என்ற தவிர்ப்பும் கூடவே இருந்து கொண்டது.

சுமிதாவுக்கு தேனீர் கூடத் தயாரிக்கத் தெரியாது. எப்படி உணவு சமைப்பாள்! எந்தத் தொழிலும் தெரியாது. எல்லாமே அவளின் பெற்றோர் செய்து வந்தனர். படிப்பிலே கவனஞ் செலுத்திய சுமிதா சமையல் செய்வதில் பங்கு கொள்வதில்லை. விக்கியே உணவு சமைத்துக் கொடுத்தார். சமையல் வேலைகளையும் விக்கியே கற்றுக் கொடுத்தான். விக்கி நாளாந்தம் கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் வாழ்க்கையை ஓட்டிச் சென்றான். விக்கி கூலி வேலை செய்து துன்பப்படும் போது பெற்றோருடன் தான் எப்படி வாழ்ந்தேன்; இன்று தவறு செய்துவிட்டேன் என்று நொந்து கொள்வாள். பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோருக்கு தன்பிள்ளைகளை எப்படி வளர்த்து அவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமை தான். அதற்காக பெற்றோரை மீறித் தனது விருப்பத்துக்கு! அதுவும் போன் மூலம் கதைத்து திருமணம் செய்வது முட்டாள் தனம் என்று கூற வேண்டும்.

காலங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன. சுமிதா வேலை ஒன்றில் இணைந்து கொண்டாள். தான் உழைக்கும் பணத்தில் தனக்குத் தேவையான உடை, வீட்டுப்பொருட்கள் வாங்கினாள். ஓரளவு வீட்டின் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ அவளுக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தது. பல சிரமத்தின் மத்தியில் அக்குழந்தைகளை வளர்த்து வந்தார்கள். விக்கியும் கூலித் தொழிலை விட்டு நிறுவனம் ஒன்றில் வேலை செய்தான். ஆரம்பத்தில் வேலை செய்யும் போது பல இடர்பாடுகளை எதிர்நோக்கிய விக்கி; காலங்கள் செல்லச் செல்ல அவ்வேலையில் பற்று வைத்துச் செய்தான். "செய்யும் தொழிலே தெய்வமாகக்கருதி" வேலை செய்தான். இத்தொழிலின் ஊடாக மேன் மேலும் தன்னையே வளர்த்துக் கொண்டான். தான் கூலி வேலைசெய்யும் போது பட்ட கஸ்ரங்களையும் வெயில், மழை என்று பாராது உழைத்த உழைப்பையும் நினைத்துக் கொள்வான். தான் பட்ட கஸ்ரங்கள் எல்லாம் பஞ்சாகப் பறந்து போய்விட்டதே என்று மனதைத் தேற்றி கொள்வான்.

இரண்டு குழந்தைகளையும் கஸ்ரப்பட்டு வளர்த்தாலும் நன்றாகப் படிக்க வைத் தார்கள். பிள்ளைகளும் தினமும் பாடசா லைக்குச் சென்று படிக்கும் போது மிகவும் கவனத்துடனும் ஆர்வத்துடனும் கற்றார்கள். படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டிலும் கெட்டிக்காரர்கள். ஏனைய பொதுத் தொண்டு வேலைகளிலும் ஈடுபட்டு சேவை செய்வதிலும் கெட்டிக்காரர். ஆனால் தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்புவது இல்லை. பிள்ளைகளுக்கு பெற்றோரே ஆசான்கள் போல் கல்வியைப் புகட்டுவார்கள். பிள்ளைகளிடத்தில் அன்பாகப் பழகி நல்லதையே செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறிக் கொள்வார்கள்.

இவர்களின் மூத்த மகளின் பெயர் அஞ்சலி, இரண்டாவது மகளின் பெயர் யசோதை. இரண்டு பிள்ளைகளையும் இரண்டு கண்கள் போல வளர்த்தார்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு எடுக்க வேண்டும் என்பதற்காக பிள்ளைகளுடன் பெற்றோரும் இணைந்து கற்றுக் கொண்டார்கள். ஓய்வு நேரங்களில் பிள்ளைகளுடன் பெற்றோரும் விளையாடுவார்கள். எங்கு சென்றாலும் பெற்றோரே கூட்டிச் செல்வார்கள். பாடசாலைகளில் நடைபெறுகின்ற எந்த நிகழ்விலும் அஞ்சலியின், யசோதையின் பெற்றோர்கள் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்தார்கள். புலமைப் பரிசில் பரீட்சையும் எழுதினார்கள். பரீட் சையின் முடிவுகளும் வந்தன .இரண்டு பிள்ளைகளும் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். பெற்றோருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு சுற்றுலா சென்றார்கள்.

சுற்றுலா முடித்துக் கொண்டு வீட்டுக்குத்திரும்புகின்ற போது பிள்ளை யசோதா விபத்தில் சிக்கி உயிரிழந்தாள். இந்த இழப்பை பெற்றோரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாமே கூட்டிச் சென்று தாமே பறி கொடுத்தோமே... என்று அழுதார்கள், புரண்டார்கள். இரண்டு கண்களில் ஒரு கண்ணைப் பறிகொடுத்தோமே என்று புலம்பிக் கொண்டார்கள். மூத்த மகள் அஞ்சலியும் விபத்தை நேரடியாகப் பார்த்த படியால் பயந்து கத்திக்கொண்டாள். இந்த இழப்பை யாராலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிள்ளைகளும் நல்ல கெட்டிக்காரர். எதிலும் சுறுசுறுப்பானவர்கள். பிள்ளை களை மகிழ்விப்பதற்காக சுற்றுலா சென்றோமே, இப்படிப் பிள்ளையைப் பறிகொடுத்துவிட்டோமே என்று ஏக்கத்தில் சுமிதா நோயாளியாகப் போய்விட்டாள். விக்கியால் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மகள் அஞ்சலியும் பாடசாலை செல்வதையும் நிறுத்தி விட்டாள். தாய்க்கு அருகில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்தாள். பள்ளிப்படிப்பை இழக்கக் கூடாது, படிக்க வையுங்கள் என்று பலர் புத்தி சொல்லியும் கேட்க மாட்டாள். தந்தை விக்கியும் வேலைக்குச் செல்வது இல்லை. மீண்டும் இக் குடும்பத்தைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை. எவ்வளவு கஸ்ரத்தில் இருந்த விக்கி இப்போதுதான் நல்ல நிலைக்கு வந்துள்ளான் என்று எல்லோரும் கூறிக் கொள்வார்கள்.

விக்கியும் வீட்டில் முடக்கிக் கிடப்பதால் பிள்ளையின் படிப்பும் இடையில் நிற்கிறதே என்று அறிவுரை கூறுவார்கள். விக்கி மீண்டும் வேலையில் இணைந்து கொண்டான். முன்னர் போல் அவனால் வேலையில் ஈடுகொடுக்க முடியவில்லை. மகள் அஞ்சலியையும் பாடசாலைக்கு அனுப்பி வைத்தான். அஞ்சலியும் கல்வியில் அக்கறை கொள்ளுவதில்லை. பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதும் இல்லை. எந்நேரமும் தங்கை யசோதையின் நினைவில் மூழ்கிக் கொள்வாள். சக மாணவர்கள், ஆசிரியர்களின் முயற்சியினால் அஞ்சலியைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார்கள். படிப்பில் மெல்ல மெல்லக் கவனஞ் செலுத்திப்படித்தாள். ஆனால்! சுமிதாவைத் தேற்ற முடியவில்லை.

விக்கியும் வேலைக்குப் போவதும் அடிக்கடி வந்து சுமிதாவையும் கவனித்துக் கொள்வான். நாட்கள் நகர்ந்தன. சுமிதாவின் உடல் நிலையும் சீரான நிலைக்கு வந்தது. இவ் வேளையில் சுமிதாவின் பெற்றோர்களோ, விக்கியின் பெற்றோர்களோ வந்து பார்க்கவும் இல்லை. சுகங்கள் பற்றிக் கேட்பது இல்லை. தங்கள் விருப்பத்திற்குச் செய்து கொண்ட திருமணம்; எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள். பெற்றோர்கள் வந்து பார்க்கவில்லை என்று விக்கிக்கும் சுமிகாவுக்கு கவலை ஏற்பட்டது. தாங்கள் செய்த தவறை நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டார்கள்.

இருப்பது ஒரு பிள்ளை. அவளின் எதிர்காலம் நல்லதாக அமைய வேண்டும் என்பதற்காக அஞ்சலியையும் கூட்டிக் கொண்டு வேறு இடத்தில் படிக்க வைத்தார்கள். O/L பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற்று உயர்தரம் படிக்க வைக்க வேண்டும் என்றும் பல்கலைக் கழகம் சென்று படிக்க வேண்டும் என்றும் பல கனவுகளுடன் பெற்றோர்கள் அஞ்சலியைப் படிக்கவைத்தார்கள். அஞ்சலியும் பெற்றோரின் சொல் கேட்டு நன்றாகப் படித்தாள். படிப்பு முடிந்ததும் நல்ல இடத்தில் திருமணம் செய்து வைப்பதாகப் பெற்றோர்கள் கனவு கண்டனர். ஆனால் அஞ்சலியால் மேற்கொண்டு படிக்கமுடியவில்லை. அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுவாள். இவளின் உடல் நிலையும் மாறிக் கொண்டு நீண்ட நாள் நோயாளியாகப் போய் விட்டாள். இந் நிலையில் அஞ்சலியை பார்க்க முடியாத அளவுற்று மெலிந்து படுக்கையில் கிடந்து இறந்தே போய் விட்டாள். இந்த இழப்பைப் பெற்றோரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரண்டு பிள்ளைகளையும் பெற்று வளர்த்துப்படிக்க வைத்து இரண்டு கண்களைப் போல் பாதுகாத்து வளர்த்த பெற்றோர்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்து தவிப்பது! இரண்டு கண்கள் இருந்தும் பார்வையில்லாது போன்றவர்களாகவே வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்திரை பெரிய சிறை
# (குறு நாடகம்)

**ம.றோமியல்**
தலைவர்,
கலை ஒளி கலாமன்றம், கட்டைக்காடு.

(மீளக் குடியமார்வுக்காக பாடசாலை ஒன்றில் சின்னையா, மீனாட்சி குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்)

**சின்னையா:-** இஞ்ச வந்தும் ரெண்டு நாளாகிப் போச்சு, இன்றும் எங்கட காணியில கொண்டு போய் விடுறாங்கள் இல்லை.

**மீனாட்சி:-** பதிவுகள் எல்லாம் முடிஞ்சப்புறம் தானே விடுவாங்கள்.

**சின்னையா:-** என்னதான் பதிவு எண்டு மாறிமாறி பதியுறானுகள், உருப்படியா ஒண்டும் நடந்த பாடில்ல.

**மீனாட்சி:-** அங்க எங்கட ஜி. எஸ் வாறார் போய் என்னெண்டு கேட்டிட்டு வாங்கோவன்.

**சின்னையா:-** அவர்ட்ட முகத்தைப் பார்த்தா கொஞ்சம் கடுப்பா வாறார் போல கிடக்கு, என்னோட பொரிஞ்சு விழுவார் கொஞ்சம் பொறு பாப்பம், கையில ஏதோ லிஸ்ட் வைச்சிருக்கிறார்...

G.S:- சுடலைபுரம் கிராம மக்கள். இண்டைக்கு வீட்டை போகலாம் ஐயாயிரம் ரூபா பணமும் தரப்பாள் தடியும், இந்தியன் பெட்டியும் தருவம் கெதியா வாங்கோ..... அனைவரும் ஓடல்...

காட்சி II

ஒரு மெசின் பெட்டியில சின்னையா குடும்பமும் இன்னும் பல குடும்பங்கள் இருத்தல்.

**சின்னையா:-** எட பொன்னம்பலம் எங்கட சுடலபுரக் கிராமத்தின்ரை உறுப்பே தெரியாம கிடக்கு பாரன

**பொன்னம்பலம்:-** இஞ்ச இதில நிண்ட புளியடி, அங்கால கிடந்த ஆலடி, பாலையடி ஒண்டையும் காணேல..... சுடுகாடாக் கிடக்குது....

**சின்னையா:-** இஞ்ச என்ர, காணி வீட்டையும் சுற்றியிருந்த வேலி, கக்கூசு, மரங்கள் ஒண்டையும் காணேல என்ர கடவுளே.

**மீனாட்சி:-** என்னப்பா வீடு, காணி மாறி வந்திட்டமோ? எனக்கெண்டா சந்தேகமா கிடக்குது.

**சின்னையா:-** இது தான் மீனாட்சி யுத்தத்தின் வடுக்கள். முறிஞ்ச தென்னம் பிள்ளையும் கொப்புடைஞ்ச மாமரமும் பாரிண்ட வேம்பும் பத்தைக் காடும் பாம்புப் புத்தும் தானே மிஞ்சி இருக்கு வா.வா. இறங்கு பிள்ளையளையும் இறக்கு இதில பையள வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி III

(வீடமைப்பு திட்டம் முடிவுற்று குடிபுகுதல் விழா நடைபெற்று கிரகப் பிரவேகம் செய்தல்)

**மீனாட்சி:-** என்ர கடவுளே. எங்களக் காப்பாத்தி மீளவும் எங்கட மண்ணுக்குக் கொண்டுவந்திட்ட உனக்கு கோடான கோடி புண்ணியம்.

**சுந்தரி:-** ஓம் அம்மா, எத்தினையோ சனங்கள் செத்தும் உறவுகளைப் பிரிந்தும் அங்கவீ னங்களாக இருந்தும். எங்களுக்கு ஒண்டும் நடக்கேல்ல, கடவுளுக்கு முதல்ல நன்றி சொல்ல வேணும்.

**முத்து:-** ஓமக்கா. வீட்டையும் அழகா கட்டியாச்சு. ஆனா. ஒரு சாமானும் வீட்டுக் குள்ள இல்ல இவன் குமரண்ட வீட்டில போன கிழமைதான் லீசிங்கில எல்லாம் எடுத்தவங்கள்.

**மீனாட்சி:-** ஓமடா தம்பி. நானும் கொப் பரிட்ட பல தடவை சொல்லிப் போட்டன். இந்த வானில வாற லீசிங்காரரிட்ட கொஞ்சம் எடுப்பம் எண்டா மனுசன் கேட்குதே.....

**சின்னையா:-** இஞ்ச பார் மீனாட்சி எங்கட விரலுக்கு தக்கது தான் வீக்கம். உழைப்பும் இல்ல எப்பிடி திருப்பி காசைக் கட்டுறது.

**சுந்தர்:-** T.V. கொம்பியூட்டர், லப், எல்லாம் படிக்க வேணும் தானே.

**மீனாட்சி:-** எல்லாப் பிள்ளையளப் போலவும் எங்கட பிள்ளையளும் நல்லா படிக்க இந்த மனுசன் வேண்டுதே..... (புறுபுறுத்தல்)

**சின்னையா:-** சரி சரி, இண்டைக்கு T.V வாங்குவம் பின்னேரம் லீசிங்காரன் வருவான்தானே.... அடே..... அங்க. வாகனம் வருகுது... (வாகனத்தில் பொருட்களை இறக்குதல்)

காட்சி IV

**சுந்தர்:-** அம்மா எனே அம்மா.... இருபத்தி நாலு மணியும் T.Vக்கு முன்னால தான் இந்த மனிசி சாப்பாடும் இல்ல, படிப்பும் இல்ல.

**முத்து:-** அம்மா T.Vவைக் கொஞ்சம் சவுண்டக் குறையுங்க வீட்டுப் பாடம் செய்யஏலாம கிடக்குது.......

**சின்னயா:-** பசி வயித்தக் கிண்டுது. மீனாட்சி ... மீனாட்சி... எழும்பி வாவனப்பா... பசிக்குதெல்லே பெடியள் பள்ளிக்குப் போக வேணும் எல்லோ....

**மீனாட்சி:-** நல்ல கட்டம் போகுது குழப்பாம அங்கால போங்கடா, இஞ்சே விருப்பம் எண்டா போட்டுச் சாப்பிடுங்க இல்லாட்டி போங்க... (சனியன்கள் ஒரே குழப்புதுகள் ஆ..... என்ன சோக்கா இருக்கு.... ரசித்தல்)

**சின்னையா:-** அது சரி, இவன் சின்னவன் எங்க போட்டான். சின்னவா சின்னவா, சின்னவா.... (தேடல்...... அங்குமிங்கும்)

**சுந்தர்:-** அம்மா இவன் தம்பி சின்னவனைக் காணேல்ல

**முத்து:-** அம்மா அம்மா சின்னவன் எங்க, சின்னவன் எங்க.

**மீனாட்சி:-** பக்கத்து வீட்டில நிப்பான் போய்ப்பாரடா. என்னக் குளப்பாம... போடா போடா போ (விரட்டல்)

**சின்னையா:-** கத்திக்கொண்டு ஒடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரல்.. ஐயோ என்ர சின்னவா, சின்னவா போட்டியடா எங்கள விட்டு...

**சுந்தர்:-** ஐயோ அம்மா சின்னவன் கிணத்துக்குள்ள சின்னவன் போட்டான்....

**முத்து:-** ஐயோ தம்பி...... தம்பி.... உன்னைக் கவனிக்க ஏலாமல் போட்டுதடா.... எல்லாம் இந்த அம்மாவால வந்தது தானே? மீனாட்சி:- (T.V முன்னால் இருந்து அழுதல்) ஐயோ பாவம் விசரி விசர் வேல பாத்திட்டாள்.... என்ன கட்டம் அப்பா...

(ஊரே திரண்டு கிணற்றுக்குள் இருந்த சின்னவனைத் தூக்கி எடுத்து கட்டிலில் கிடத்தல்.)

**மீனாட்சி:-** ஐயோ என்ர பிள்ளை.... (மார்பில் அடித்து புலம்பல்)

**சின்னத்திரை:-** மோகத்தால் குடும்ப அங்கத்தவர்கள் பெரிய சிறையில் சிக்கப்பட்டு சின்னாபின்னமாகி விட்டனர்.

**சின்னவன்:-** உயிரிழப்பு முத்துவின் படிப்பு வீண் சுந்தரியின் வாழ்க்கை பாழ்.... சின்னையாவின் உழைப்பு உடல், எல்லாமே பூச்சியம்....

விழித்தெழு... அறிவுகொள். உயிர்ப்புடன் வாழ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேலை வாங்க ஆசை தான்

பரமலிங்கம் ஜெயமணி
8ஆம் ஒழுங்கை, கட்டைக்காடு,
பெருங்குளம்.






ஏழைப் பெண் எனக்கு
ஏனிந்த ஆசைகள் தான் !
நெடு நாளாய் எனக்கு
நெஞ்சில் ஓர் ஆசை உண்டு
கொட்டன் சாறி வேண்ட நான்
கொள்ளை ஆசை கொண்டிருந்தேன்
புடவைக் கடை ஒன்றினுள்
புகுந்து விட்டேன் சந்தோஷமாய்
பையினுள்ள பைசாவோ
பத்தாமல் இருந்தும் கூட
கோடு போட்ட கொட்டின் சாறி
கொள்ளையில் கிள்ளியது
பையன் ஒருவன் வந்து - மேசையில்
பத்திரமாய் எடுத்துப் போட்டான்
நாவல் கலர் எனக்கு
நல்லாத்தான் இருக்கும் என்றான்
எனக்கும் அதை எடுக்க
எண்ணம் தான் தோன்றியது
நான் வைத்திருந்த காசில்
நாலு மடங்கு விலை சொன்னான்
ஆசை எனக்கு இருந்தும்
அதை எடுக்க நான் தயங்க
விலை தம்பி கூடிப் போச்சு
வேண்டாமென நான் விலக
குறைத்துத் தருகின்றேன்
தம்பி அவன் வாதாட
குடுத்து வேண்டவும்
குறைவான சில்லறைக் காசு
ஆசையை மனதில் வைத்து
மனம் அங்கும் இங்கும் ஊசலாட
கட்டாயம் இந்தச் சாறி
எடுங்கள் அக்கா என்று சொன்னான்
தோழில் உள்ள கைப்பையை
மெதுவாக இறக்கி வைத்தேன்
பையைத் திறந்து நானும்
சில்லறையைப் பொறுக்கியதும்
கடைக் காறன் எனைப் பார்த்து
ஏளனமாய்ச் சிரித்து விட்டான்
ஏன் தம்பி சிரிக்கிறாய்
என்று நான் அவனைக் கேக்க
அவன் சொன்ன பதிலெனக்கு
அதிர்ச்சியை ஊட்டியது
சில்லறை பொறுக்கி நீங்கள்
சேலை வேண்டத்தானா
வேண்டுமென்றான்
கடைக்காறன் சொன்ன பேச்சைக்
கவலையுடன் கேட்டுக் கொண்டு
பத்திரமாய் சில்லறையை
பைக்குள் போட்டு விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத வாழ்வு (சிறுகதை)

ம. வேலாயுதபிள்ளை
கலவெட்டித்திடல்

இதமான தென்றல் யன்னலின் ஊடு மெல்லதாய் எட்டிப் பார்க்கும் காலக்கதிரவனின் ஒளிக் கீற்றுக்கள். பறவைகளின் சத்தங்கள். அவ்வூர் ஆலயத்தின் பக்திப் பாடல்கள் என காலைப் பொழுது ரம்மியமாக விடிந்து கொண்டிருந்தது. நரேன் மறுபடியும் போர்வையால் மூடிக்கொண்டு படுத்தான். “என்னப்பா இண்டைக்கு வேலைக்குப் போகலயா?” என்ற மனைவியின் குரல் நரேனை படுக்கையில் இருந்து அலுப்போடு எழ வைத்தது. நரேன் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றான். அவனது மனைவி அமுதா. அழகிய அன்பான. குடும்பத்திற்கு இன்னும் அன்பைக் கூட்டின இரண்டு செல்வங்கள்; மூத்த பையன் நிதன், மகள் நித்தியா. நிதன் ஒன்பதாம் ஆண்டு படிக்கிறான். நல்ல கெட்டிக்காரன் மாகாண மட்டப் பரீட்சைக்கு இன்னும் சில மாதங்களே இருந்தமையால் படிப்பில் ஒரே கவனத்துடன் திரிந்தான். நித்தியா ஏழாம் தரம் கல்வி மட்டுமல்ல கலைகளிலும் அவள் முதலிடம் தான். பெற்றோர்களுக்கு இதை விட என்ன சந்தோசம் வேண்டும். பிள்ளைகளால் அவர்களுக்கு அப்படி ஒரு மதிப்பும் சந்தோசமும்.

ஆனால் நரேனின் உழைப்பு இக்கால வேகத்தில் சற்று ஆடம்பர செலவுகளுக்கு போதாமையாக இருந்தது. அதைவிட பிள்ளைகளும் வளரவளர தேவைகளும் அதிகரித்தன. இதனால் வெளிநாடு செல்லும் எண்ணம் நரேன், அமுதா மனதில் பல நாட்களாக ஓடிக் கொண்டிருந்தது. நரேனிற்கு குடும்பத்தை விட்டுப் பிரிந்து போவது என்பது சொல்லணாக் கஸ்ரத்தை கொடுத்தது. அவனுக்கு இதில் விருப்பம் கொஞ்சம் குறைவு தான். இருந்தாலும் குடும்பம் நல்லா இருக்க வேணும் என்றா கொஞ்சக் காலம் கஸ்ரத்தை அனுபவிப்பம் என்று நினைத்தான். பெண்கள் கொஞ்சம் ஆடம்பரத்தையும், மற்றவர்களைப் பார்த்து அப்படி வாழவேண்டும் என்பதிலும் விருப்பம் கொஞ்சம் அதிகம் கொண்டவர்கள் தானே அமுதாவும் இதற்கு விதி விலக்காகவில்லை. அவள் நரேனை வெளிநாடு அனுப்புவதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக இருந்தாள். காணி ஒன்று விற்று, இருந்த நகைகளை விற்று, கடன் வாங்கி நரேனை கனடாவிற்கு அனுப்பி வைத்தாள்.

ஆண்டுகள் நகர்ந்தன. நரேனும் கஸ்ரப்பட்டு உழைத்து கடன்களை க்கட்டி, நகரத்தில் காணி வாங்கி பெரிய வீடு கட்டி, மனைவி, பிள்ளைகளுக்கு என இரண்டு மோட்டார் சைக்கிள் வாங்கி அவன் உழைப்பில் அக் குடும்பம் கஸ்ரம் என்றால் என்ன என தெரியாத நிலைக்கு மாறியது. நவீன தொலைபேசிகள், கொம்பியூட்டர் என பிள்ளைகளின் அனைத்து ஆசைகளையும், தேவைகளையும் இரவு, பகல் பாராது உழைத்து நிறைவேற்றினான் நரேன். இன்னும் கொஞ்சக் காலங்கள் கஸ்ரப்பட்டு உழைச்சிட்டு தன்ர குடும்பத்தோட சேர்ந்து இருக்கோணும் என்பதே அவனது எண்ணம். உழைத்துக் கொண்டு வந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் தொழில் தொடங்கலாம் என்பதே அவனது ஆசை. இதற்கு இடையில் அவன் தனது நாட்டிற்கு வந்து போக விசா கிடைத்தது. தன் குடும்பத்தை பார்க்கும் மகிழ்ச்சியில் திளைத்தான். ஊர் வந்து சேர்ந்த நரேன் தன் குடும்பத்தை பார்த்து மகிழ்ந்தாலும், சில காரணங்கள் அவனை கலங்கவும் வைத்தன. அவை வேறொன்றும் இல்லை. நிதன் படிப்பில் இருந்த முன்மாதிரி தலைகீழாய் மாறியிருந்தது.

சாதாரண தரத்தில் சிறந்த பெறு பேறுகளை எடுத்த நிதன் உயர்தரப் பரீட்சையில் இரண்டு தரம் எழுதியும் சித்தியடையவில்லை. நண்பர்கள் அதிகமாகி ஒரே மோட்டார் சைக்கிளில் வெளியில் சுத்துவதும் இரவில் நேரமாகி வீட்டிற்கும் வருவதும் போனில் மூழ்கியிருப்பதுமே அவன் செயற்பாடாக இருந்தது. மறுமுறை பரீட்சை எழுதவும் முடியாது என்று விட்டான். மகள் சாதாரண தரம் நல்ல பெறுபேறுகளை எடுத்து உயர்தரம் படிக்க இப்பொழுது தான் ஆரம்பமாகி இருந்தாள். அமுதாவும் தொலைக்காட்சி நாடகங்களுடன் பிள்ளைகளைக் கவனிப்பது சற்று குறைவாகி இருந்தது. தற்போதைய நவநாகரிக உலகில் கஸ்ரம் தெரியாமல் பிள்ளைகளை வளர்த்தமை எவ்வளவு பெரிய பிழை என்று அவனை எண்ண வைத்தது. ஆனால் அவனாலும் நிதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனெனில் அவர்களை நீண்ட காலம் அவர்கள் வழிக்கு விட்டது தந்தையின் சொல் கேட்கும் நிலையில் நிதன் இல்லை. நரேன் விடுமுறை முடிந்து எல்லோரிடமும் விடை பெற்று வெளிநாடு புறப்பட்டான். இன்னும் மூன்று நான்கு வருடங்களில் முழுமையாக ஊர் வந்து விடுவதே அவன் முடிவாகி இருந்தது. பிள்ளைகளை கவனித்து கண்டிப்புடன் வளர்க்குமாறு அமுதாவிடம் சொல்லிவிட்டுத் தான் சென்றான்.

நிதனின் போக்கு ரொம்ப ரொம்ப மாறிக்கொண்டு போனது. அவனது நண்பர்கள் வட்டாரம் நல்லதாக அமைய வில்லை. பணம் அதிகமாக இருந்ததால் நண்பர்களுடன் சேர்ந்து மதுவுக்கு அடிமை யானான். அமுதா மகனின் நிலைமை கண்டு கண்டித்தாள். கேட்கும் நிலையில் அவன் இல்லை. அத்தோடு போதைப் பொருள் பாவனைக்கும் நிதன் ஆளானான். நிதனின் நண்பர்கள் நிதனுடன் வீட்டிற்கும் வரத் தொடங்கினார்கள். அமுதா வீட்டில் பெண் பிள்ளை இருக்கு; கூட்டி வரவேண்டாம் என்று சொல்லியும் நிதன் கேட்கவில்லை. "அவங்கள் நல்ல பெடியள் இனி அதைப்பற்றிக் கதைக்க வேண்டாம்" என்றான். நிலைமை கண்ட அமுதா மனங்கலங்கினாள். ஒரு நாள் அமுதா கடைக்குச் சென்று விட்டாள். நிதனும் வீட்டில் இல்லை. நித்தியா தான் வீட்டில் நின்றாள். கடையால் வீட்டிற்று திரும்பி வந்த அமுதா "ஐயோ! நித்தியா" என்று குழறியபடி மயங்கி விழுந்தாள். அங்கே தூக்கில் தொங்கிய நிலையில் நித்தியா. வீட்டிற்கு வந்த நிதன் தங்கையையும், தாயையும் கண்டு கதறி அழுதான்.

உறவுக் காரர்களின் உதவியுடன் தாயை வைத்தியசாலையில் சேர்த்தான். நித்தியாவுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. பொலிஸ் வந்து பிரேத பரிசோதனைக்கு அவள் உடலைக் கொண்டு சென்றது. அதன் பின்னர் தான் அவள் உடலில் காயங்களுடன் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு இருக்கிறாள் என்று முடிவானது. அயல் வீட்டுக்காரர்கள் நிதனின் நண்பர்கள் வீட்டிற்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதாகக் கூறினார்கள். அவர்களைத் தேடிப் போன நிதன் அவர்களுடன் ஏற்பட்ட சண்டையில் கொலைக்காரன் ஆனான். நண்பன் ஆக இருந்த துரோகி ஒருவன் நிதனின் கத்திக்கு இலக்கானான். மற்றவர்களை பொலிஸ் கைதுசெய்தது. எல்லோரும் போதைப்பொருள் பாவித்திருக்கின்றார்கள். கொலைக் குற்றத்துக்காக நிதனும் சிறை சென்றான். சம்பவம் அறிந்த நரேன் அழுது குழறினான். மறுநாளே ஊர் திரும்பினான். செல்லமாய் வளர்த்த மகளின் உடலையும், அன்று மனைவியின் நினைவற்ற கோலத்தையும், பாச மகனின் சிறை வாழ்க்கையுமே அவன் வெளிநாடு சென்று கஸ்ரப்பட்ட பலனாய்க் கிடைத்தது. தேற்ற யாருமின்றி கதறி அழுதான். யாரால் தேற்ற முடியும். எப்படி ஆறுதல் சொல்ல முடியும்.

நிதனுக்கு பல வருடங்கள் சிறையே தீர்ப்பானது. அமுதா நடைப்பிணமானாள். அமுதாவை வீட்டில் கவனித்தவாறு சிறையில் மகனைச் சென்று பார்ப்பதுமாய் அன்பு மகளின் நினைவுகளோடு, நரேன் வாழத் தொடங்கினான். நரேன் என்ன பாவம் செய்தான். குடும்பத்திற்காய் கஸ்ரப்பட்டது தப்பா? பாவம் நித்தியா என்ன செய்வாள். சிறையில் தவறுகளை நினைத்து நிதன் அழுதான் துடித்தான். என்ன செய்ய; காலம் கடந்த ஞானம் எதையும் மீட்டுத் தரப் போவதில்லை. எப்படி இருந்த குடும்பம் இன்று இப்படி ஒரு நிலமைக்கு ஆளாகி விட்டது. உறவுகளே! எதையும் தேவைக்கு அதிகமாக கொடுத்து விடாதீர்கள். கஸ்டத்தையும் கற்றுக் கொடுங்கள். இந்த நிலை எமது குடும்பங்களுக்கு வர எவ்வளவு நாளாகும்... இனியும் தவறுகளுக்கு இடமளிக்காதீர்கள்.

**இளைய சமுதாயமே!**
இழந்துவிட்டு பழைய வாழ்வைத் தேடாதீர்கள்:
வாழ்க்கையை மகிழ்வாய் வாழுங்கள்!
பாழாக்கி மாண்டு விடாதீர்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையைப் பேணுவோம்



சி. யதுர்சனா,
கண்டாவளை கிளிநொச்சி

உயிரினங்கள், தாவரங்கள் வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது இயற்கையே ஆகும். இயற்கை இல்லாவிடின் இன்று நாம் வாழவே முடியாது. இறைவனால் தானாகவே படைக்கப்பட்டது இயற்கை மட்டும் தான். இந்த இயற்கையையும், அதன் வளங்களையும் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரது பொறுப்பாகும். இன்று இந்த இயற்கை அழிந்து போகும் அபாயத்தினுள் உள்ளது. இதை நாம் தடுக்க வேண்டும். இயற்கை அழிவிற்கு எடுத்துக் காட்டாக காடுகளை வெட்டுதல், மண் அகழ்வு, கனிப் பொருள் அகழ்வு, நச்சுப் புகைகளை வளியுடன் கலக்க விடல் என பலவற்றைக் கூறலாம். இந்த இயற்கை தூய்மையாக இருந்தால் மட்டுமே நாம் வாழலாம்.

இன்று மக்கள் பல்வேறு தேவைகளுக்காகக் காடுகளை வெட்டுகின்றார்கள். இதனால் காட்டையே உயிர் என்று நம்பி வாழும் காட்டு விலங்குகள் உண்ண உணவின்றி அருந்த நீரின்றி இறக்கின்றன. அத்தோடு மண் வளமும் பாதிப்படைகிறது. இன்று எமது அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வது நீர் தான். அந்த நீரை நாம் மழை மூலம்தான் பெறுகின்றோம். மரங்கள் இல்லாவிடின் மழை பெய்யாது. நாட்டில் வரட்சி ஏற்படும். உணவின்றி அனைத்து உயிரினங்களும், தாவரங்களும் அழியும். இவை அனைத்திற்கும் காரணம் மனிதனின் முறையற்ற செயற்பாடாகும். இதைத் தடுக்க வேண்டுமானால் நாம் காடுகளையும் மரங்களையும் அழிப்பதற்குப் பதிலாக மரங்களை நாட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் நாட்டில் உணவிற்கு பஞ்சம் வராது.

அடுத்ததாக தொழிற்சாலைக் கழிவுகளை, மக்களின் அன்றாட வீட்டுக் குப்பைகளையும் கொண்டு சென்று நீரினுள் கொட்டி விடுகிறார்கள். இதனால் நீர் மிகவும் அசுத்தமடைகிறது. நீரை அருந்த வரும் உயிரினங்களும் இறக்கின்றன. நீரில் இருந்து வரும் துர்நாற்றம் எமது சுவாசத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் முக்கியமாக சுவாசப் பிரச்சனை உள்ள நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். ஆறு, குளம் ஆகியவற்றின் நீரையே அன்றாட தேவைக்காக பயன்படுத்தும் மக்கள் மிகவும் பாதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகின்றனர். இச்செயற்பாடுகளை நாம் தவிர்க்க வேண்டுமாயின் குப்பைகளை, தொழிற்சாலைக் கழிவுகளை நாம் தகுந்த முறையில் வெளியேற்றுவதன் மூலம் நீர்ப் பிரச்சினையிலிருந்து வெளியே வரலாம். இவற்றையெல்லாம் செய்வது எமது நலனுக்கு மட்டுமன்றி இந்த உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கு ஆகும்.

வீடுகள், கட்டிடங்கள் கட்டுவதற்கும் கடற் கரையோரங்களிலும், ஆற்றோரங் களிலும் மண்ணை அகழ்கின்றார்கள். இதனால் மண்வளம் குன்றுகின்றது. மழைக் காலங்களில் மண் அரிப்பும், மண்சரிவும் நிகழ்கின்றது. இதனால் மரங்கள் சரிந்து விழுகின்றன. மரங்கள் பாதையில் விழுகின்றன. அத்தோடு மலைகளில் இருக்கும் கற்பாறைகள் வீதியை நோக்கி உருண்டு வருகின்றன. இதனால் எமது அன்றாட போக்குவரத்து தடைப்படுகின்றது. முக்கியமாக அவசரமாக வைத்தியசாலையை நாட வேண்டிய நோயாளிகள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். வீடுகள் மண்சரிவு ஏற்படுவதனால் உடைந்து விழுகின்றன. முக்கியமாக நிலநடுக்கம் ஏற்படுகிறது. இதனால் மக்கள் பிரதானமாக பாதிப்படைகின்றனர். இவ்வாறான முறையற்ற நடவடிக்கையை செய்யாமல் பாதுகாப்பது மக்களின் தலையாய கடமையாகும்.

கடலுக்கு அடியிலும், சமுத்திரங்களின் அடியிலும் இரத்தினக் கற்கள், முருகைக் கற்பாறைகள் அகழ்வதால் மண் வளம் பாதிப்படைகிறது. அதுமட்டுமல்லாமல் இவ்வாறான கனியப் பொருள் அகழ்வதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. இதனால் தாழ்நிலப் பிரதேசத்தில் உள்ள சிறிய குடியுருப்புக்கள் நீரில் மூழ்கின்றன. எமது உடமைகள் நீருடன் அடித்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறு நடக்காமல் தடுக்க நாம் கனியப் பொருட்களை முறையற்ற முறையில் அகழ்வதைத் தடுக்க வேண்டும்.

அடுத்து வாகன நச்சுப் புகைகள், தொழிற்சாலை இயந்திரத்திலிருந்து வரும் புகைகள் வளியுடன் கலக்கின்றன. இதனால் இக்காற்றை நாம் சுவாசிப்பதால் எமக்கு சுவாச நோய்கள் பல ஏற்படுகின்றன. நோயாளிகள் பலர் இறக்கின்றனர். இதைத் தடுக்க வேண்டுமானால் வாகனம், தொழிற்சாலையில் இருந்து வரும் புகையை இயன்றளவு குறைக்க வேண்டும். இன்று மக்கள் குறைந்த ஆயுளோடு இறப்பதற்குக் காரணம் இவ்வாறான மனிதனின் முறையற்ற செயற்பாடாகும்.

முற்காலங்களில் எமது முன்னோர்கள் நீண்ட ஆயுளோடு ஆரோக்கியமாக வாழ்ந்தார். இவர்கள் இவ்வாறு வாழ்ந்ததற்குக் காரணம் இயற்கையோடு கலந்து வாழ்ந்ததே ஆகும். இன்று செயற்கை உருவானதால் மக்கள் இயற்கையை விட்டு விட்டார்கள். ஆனால் செயற்கையை விட இயற்கையில் தான் பயன் அதிகம் உள்ளது என என்னும் புரிந்து கொள்ளவில்லை. அதனால் தான் இயற்கை வளங்களை அழிக்கின்றார்கள். உதாரணமாக அன்றைய காலத்தில் முன்னோர்கள் இயற் கையை உள்ளடக்கியதாக கிடைக்கும் பழங்கள், கிழங்கு வகைகள், மரக்கறிகள் உண்டார்கள். அதனால் அவர்கள் நல்ல ஆரோக்கியத்தோடு வாழ்ந்தார்கள். இன்றைய நவீன காலத்தில் பல வகையான விரைவுணவுகள் வந்ததால் அதை உண்பவர்கள் புதுப் புது நோய்களுக்கு உள்ளாக வேண்டிடி உள்ளது. அதனால் அவர்களது ஆயுள் மட்டமும் குறைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தான் இயற்கையின் மகத்துவம். நாம் நீண்ட காலம் வாழ வேண்டுமானால் நல்ல நச்சுப் பதார்த்தங்கள் கலக்காத போசணையான உணவுகளை உண்ண வேண்டும். இதனால் எமக்கு ஒரு நோயும் வராமல் இருக்கும். அத்தோடு சுறுசுறுப்பாக எமது அன்றாட தேவைகளைச் செய்ய லாம். அதுமட்டுமல்லாது அன்றைய சூழல் குளிர்மையாகவும், சுத்தமான காற்றையும் பெறக் கூடிய மாதிரி இருந்தது. இன்று மரங்களை அழிப்பதால் சூழலின் குளிர்மையையும், சுத்தமான வளியையும் பெற முடியாமல் உள்ளது. இவை அனைத்தையும் நாம் பெற வேண்டுமானால் எம்மைக் காக்கும் அந்த இயற்கையையும் அதன் வளங்களையும் நாம் காக்க வேண்டும். இன்று பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்குக் காரணம் மனிதனின் முறையற்ற செயற்பாடாகும். இன்று உலகில் இலட்சக்கணக்கான சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இறப்பதற்குக் காரணம் நாம் ஒவ்வொரு வரும் இயற்கையை தகுந்த முறையில் பேணாததே ஆகும்.

இந்த உலகில் நூற்றில் ஒன்றோ, இரண்டு பேர் தான். இயற்கை வளத்தைப் பாதுகாத்து இயற்கையோடு கலந்து வாழ்கின்றனர். இவர்கள் இன்று நோய்களில்லாமல் நீண்ட ஆயுளோடு சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ்கின்றனர். அவர்கள் தான் இன்று சமூகத்தில் நல்ல பிரஜையாகவும் வாழ்கின் றார்கள். இவ்வாறு நாமும் இருந்தால் தான் எமக்கு அடுத்து வரும் சந்ததியும் இயற்கையைப் பாதுகாக்க முடியும் என்ற விழிப்புடன் செயற்படும் எம் அனைவரது முக்கியமான கடமை தான் இயற்கையை சிறந்த முறையில் பேணுவதே ஆகும். இன்று இயற்கை இல்லாவிடின் நாம் உயிருடன் இருக்க முடியாது. இயற்கை என்பது எமக்கு தானாகவே இறைவனால் படைக்கப்பட்ட அம்சமாகும்.

நாம் குப்பைகளை கண்ட இடங்களில் தூக்கி வீசுகின்றோம். பொதுவாக வைத்திய சாலைக்கு அருகிலும், வீதி ஓரங்களில் போடுகின்றனர். இதனால் இவற்றிலிருந்து வரும் துர்நாற்றத்தை சுவாசிப்பதால் சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் முதல் சின்னஞ்சிறிய பிஞ்சுக் குழந்தைகள் வரை இதைச் சுவாசித்து இறக்கின்றனர் பலர் ஊனமுற்று உள்ள னர். இவற்றை எல்லாம் நாம் தடுக்க வேண்டுமானால் குப்பைகளை தகுந்த முறையில் வெளியேற்ற வேண்டும். உக்க முடியாத குப்பைகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இயற்கையை பாதுகாக்கலாம். அத்தோடு இன்று இறப்பவர்களில் பாதிப்பேர் இயற்கையைப் பேணாது இருப்பவர்களே ஆகும்.

எனவே சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எம்மைக் காக்கும் இயற்கையையும் அதன் வளங்களையும் உரிய முறையில் பேணலாம். அத்தோடு சிசு மரண வீதம், கர்ப்பிணித் தாய் மரண வீதம் என்பவற்றைத் தடுக்கலாம். இயற்கை இல்லாவிடின் நாம் இன்று வாழ முடியாது. இயற்கையைப் பேணுவோமானால் சிறந்த ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளோடும், நிம்மதியான வாழ்வோடும் வாழலாம். நாம் ஒவ்வொருவரும் இயற்கை யைப் பேணுவோமானால் எம்மைப் பாதுகாத்து எமக்கு கீழ்வரும் சந்ததியும் இயற்கையைப் பேணினால் தான் அது எம்மைப் பாதுகாக்கும். நாம் அனைவரும் இயற்கையைப் பேணி ஆரோக்கியமான வாழ்வு வாழ்வோமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி குடியைக் கெடுக்கும்

செல்வா லக்ஷி
கட்டைக்காடு, பெரியகுளம்.





அங்காடிச் சந்திக் கருகில்
இருந்த ஓர் விவசாயி
குடும்பத்தில் இவர் நல்ல
குல விளக்காய் இருந்தவர் தான் !
உழைப்பில் இவர் நல்ல
உத்தமராய் திகழ்ந்தவர்தான் !
மனைவி மக்கள் அனைவரோடும்
மகிழ்வோடு வாழ்ந்தவர் தான்!
வயதோ அவருக்கு ஏறவில்லை
இளவயது தான் இவருக்கு
இப்படி ஆகி விட்டார்
இடையில் வந்தகுடிப் பழக்கம்
இவரை இப்படி ஆக்கியது
வீட்டில் உள்ள அத்தனையும்
வித்து அவர் குடித்து விட்டார்
மனைவி மக்களையும்
மனமுடைய வைத்து விட்டார்
அயல் வீட்டுக் காரரோடும்
அடிக்கடி சண்டைகள் தான்
ஐந்து பிள்ளைகளின் அப்பாவாய்
இருந்தும் கூட

அவர்களுக்குச் சோறு போட
அவரிடத்தில் ஒன்றும் இல்லை
மனமுடைந்த மனைவியவள்
மனநிலை பாதிப்புற்றாள்
இடை நடுவில் கல்விகளை
இழந்து விட்ட பிள்ளைகளும்
குடும்பத்தில் வறுமையோ
குலை குலையாய் தலை தூக்க
குடி தான் இவரை
குட்டிச் சுவர் ஆக்கியது
கள்ளுத் தவறணையில்
காலையிலே போய்ச் சேர்ந்திடுவார்
தந்திரமாய் இரவில் வந்து
சாப்பாடு போடு என்பார்
சாராயம் வித்த சரதாவோ
சந்தோஷமாய் இருக்கின்றாள்
தாவரத்துக்குக் கூட அவள்
மாபிள் பதிச்சுக் கொண்டு
இனிமேல் என்றாலும்
குடியை விட்டிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மரணித்த இதயங்கள்"

திருமதி. ஜெ. வராகினி
பெரியகுளம்

பாலன் வீதியில் செல்லும் போது சந்தியில் பலரின் கிசு கிசுப்பு.... தன்னைப் பார்த்து ஏதோ கதைப்பது போன்று உணர்ந்தான், இன்னதென விளங்காத குறு குறுப்பு மனதில்....

இருபது வருடங்களின் பின் கடந்த மாதம் தான் புலம் பெயர்ந்த நாட்டிலிருந்து தன் தாய்த்தேசத்தில் காலடி வைத்திருந்தான். எனவே தான் அங்கு கூடி நிற்பவர்கள் பற்றி அவனுக்குத் தெரியவில்லை.



வழமை போல சந்தைக்குச் சென்று மரக்கறிகள் மீன் வாங்கி, வீட்டில் மனைவியிடம் கொடுத்து விட்டு தன், நண்பன் நந்தனைப் பார்க்கச் சென்றான். இவனைக் கண்டவுடன் "பாலா என்னடா இது?" எனப் போனைக்காட்டினான். அதனைப்பார்த்த பாலனுக்கு மூச்சே நின்று விட்டது போலிருந்தது.

ஆம்... பாலன் யுத்த அரக்கனின் கொடுமையால் **1990** இல் தனது இரு பிள்ளைகளையும் மனைவியையும் விட்டு வெளிநாடு சென்று விட்டான். அவன் செல்லும் போது மகளிற்கு 2 வயது, மகனிற்கு ஆறு வயது. வெளிநாடு சென்று பன்னிரண்டு வருடகாலமாக மனைவி பிள்ளைகள், உறவினர்களின் தொடர்பு இன்றி பித்துப்பிடித்தவன் போல் வாழ்ந்து வந்தான். பின்னர் நண்பர்கள் மூலம் ஒருவாறு மனைவி பிள்ளைகளின் தொடர்பு கிடைக்கப் பெற்றது. அதன் பின்னரே நிம்மதியாக தொழில் செய்யத் தொடங்கினான். ஆரம்ப காலத்தில் "காட்" கிடைக்காது சிறையில் வாடி பின்னர் ஒருவாறு மீண்டும் வந்து தொழில் புரிந்து இன்று ஒரு நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகின்றான். தனது சகோதரிகளுக்கு நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்து பெற்றோரின் கடமைகளைத் தீர்த்தான். இனி தன்னுடைய குடும்பத்தை வாழவைக்க உழைத்து வரும் நாளில் தனது மனைவி பிள்ளைகளைக் காணும் ஆவலில் ஓடோடி வந்து இருமாதம் ஓடிவிட்டது.

அவன் வெளிநாடு செல்லும்போது சிறுவர்களாய் இருந்த மகனும் மகளும் இன்று இளைஞராகவும் யுவதியாகவும் வலம் வருகின்றார்கள். பாலனும் வெளிநாட்டு வாழ்க்கையினால் இளமை குலையாத தோற்றத்தோடு காணப் பட்டான். பதினைந்து வருடங்களில் மனைவி பிள்ளைகளைக் கண்ட சந்தோசத்தில் திக்கு முக்காடி தன் மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை ஆரத்தழுவி தனது அன்பை வெளிப்படுத்தினான். அதை யாரோ ஒரு விசமி மகளை அணைத்து முத்தமிடும் படத்தைப் பேஸ்புக்கில் போட்டு காமலீலை என கொச்சைப்படுத்தி இணையத்தில் தவழ விட்டதன் விளைவு தான் பாலனின் அதிர்ச்சிக்குக் காரணமாகும்.

அவன் இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. என்ன கொடுமை; செக்கிற்கும் சிவலிங்கத்திற்கும் வேற்றுமை தெரியாத மனித ஜென்மங்களா நம் இனம், மனிதத்தன்மை அற்ற அரக்கர் உலகில் வாழ்வது போன்ற பிரமை பாலனுக்கு ஏற்பட்டது. தன் பாசமகளைக் கூட தொட தனக்கு உரிமையில்லையா என ஏதேதோ புலம்பியபடி நண்பனின் தோளில் முகம் புதைத்துப் புலம்பினான்.

"என் மகள் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் எதிர் காலம் என்னாவது? தாய்நாடு, தாய்மண் என்று ஓடோடி வந்த எனக்கு கிடைத்த பரிசு இதுதானா?" என்னவென்று புரியாது மனக் குழப்பத்துடன் உடல்சோர்ந்து போனான் பாலன்.

நந்தனின் உதவியால் ஒருவாறு வீடு வந்த பாலனுக்கு வீட்டில் மனைவி, மகள், மகன், எல்லோரும் கலங்கிய விழிகளுடன் சோர்ந்து போய் இருந்ததைப் பார்க்க அவனுக்கு அழுகையே வரும் போல இருந்தது. அப்பா என்ன செய்வம்; ஏதாவது செய்து "அது யார்என்று கண்டுபிடிச்சு கோட்சில ஒப்படைக்க வேணும்" என்று மகளும் "கண்டா நல்ல சாத்துச் சாத்தவேணும்" என்று மகனும் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினர். ம்... என்ன செய்தும் என்ன? மனித மனங்கள் இன்று எதைத் தேடுகின்றன. உலகிலேயே பண்பாட்டின் சிகரங்களாய் விளங்கும் இலங்கையர் இன்று சீரழிக்கும் கொடுமைகளைப் புரிவதேன்?

"உழைத்தது போதும் நான் தாய் மண்ணிலே மனைவி மக்களோடு நிம்மதியாக வாழ்வோம் என நினைத்து வந்த எனக்கு இந்த நாட்டை விட்டு வெகுதூரம் ஓட வேண்டும் என்ற மனநிலையே வந்தது. அதன்பின் நிம்மதியாக உண்ண முடியவில்லை. உறங்க முடியவில்லை தொண்டையில் முள்சிக்கியது போல் மனவேதனையை குடும்பமே அனுபவித்தது. புலம் பெயர் உறவுகள் மூலம் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு பல வேலைத்திட்டங்களை செய்து வந்த பாலன் அவற்றை செய்யக் கூடமனமின்றி சோர்வடைந்தான்.

சில நாட்களில் குடும்பத்துடன் அவுஸ்ரேலியா செல்லத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு பயணம் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள். ம்... இன்று மனமெல்லாம் கனக்க இதயத்தில் வலியுடன் விமான இருக்கையில் தலைசாய்ந்து கண்ணை மூடினான் பாலன். கண்களின் ஓரம் நீர்கசிந்தது. இந்த நாட்டின் வைத்தியரையும், தொழிலதிபரையும் சுமந்தபடி விமானம் முகில்களிடையே மிதந்து சென்றது.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்கள் கூறும் பரிபூரண மனிதன்

சி. விதுசன்
கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது; அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு, நீங்கி பிறத்தல் அரிது" என்ற ஒளவையாரின் முதுமொழிக்கு அமைய மானிடராக இப்புவியில் பிறப்பெடுத்த நாம் நல்ல ஒழுக்கமுள்ள, அமைதியான சமூகம் போல் வாழப்பழக வேண்டும். அவ்வாறு எம்மை ஒழுக்கமாக வாழவைக்க வாழ்ந்து காட்டிய ஏராளமான மனிதர்களின் வரலாறுகள் எம்முன் கலை இலக்கியமாக படைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நாம் சிறந்த முறையில் விளங்கிக் கற்றுக்கொள்வோமே ஆனால் மனித விழுமியங்களை எம்மால் கட்டிக்காக்கமுடியும். மனித விழுமியங்களை கட்டிக்காப்பதற்கு இந்த இலக்கியங்கள், கலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

மனிதர்களோடு தோன்றிய நாட்டார் பாடல்கள் தொடக்கம் இன்றைய காலத்து நவீன கவிதை வரை மனித விழுமியங்களை மேம்படுத்தியே இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த வகையில் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வள்ளுவனின் திருக்குறள் எந்த வழியில் வாழ்க்கையில் நின்று ஒழுகினால் வீடு பேற்றை அடைய முடியுமோ அவற்றை அழகாகக் காட்டியுள்ளது. ஒரு மனிதன் இந்த மண்ணில் தோன்றி எந்த ஜீவராசிகளுக்கும் இடையூறு இல்லாமல் வாழமுடியும் என்பதைத் தத்துவமாக வெளிக்காட்டியுள்ளது. நூற்று முற்பது அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் மனித விழுமியங்களைத் தழுவி நிற்கின்றன.

இவற்றினாலேதான் இது பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. மண்ணாசை கொண்டவன் எவ்வாறு மடிந்துபோவான் என்பதற்கு மகாபாரதம் நல்ல உதாரணமாகும். "தர்மத்தை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்." என்ற உண்மையை இந்த உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. வஞ்சனை, தந்திரம், சூது, பொய், மது போன்ற தீயபழக்கங்களுக்கு அடிமைப்பட்டவரின் வாழ்வு எவ்வாறு அமையும். என்பது மிகத் தத்துவமாக விளக்கியுள்ளது. தமிழில் காலத்துக்கு காலம் தோன்றிய இலக்கியங்கள் எல்லாம் மனித விழுமியங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தோன்றியுள்ளது என்பதற்கு இவ்வாறான



இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன.

இதேபோன்று பெண்ணாசை பிடித்தவன் எவ்வாறு அழிந்து போவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை விளக்க இராமாயணம் ஒரு நல்ல உதாரணமாகும். ராவணன் ஒரு மிகப் பலம் பொருந்திய அரசன் மட்டுமல்ல சோமாகானம் பாடி சிவபெருமானையே பயப்படுத்திய சிவபக்தன். அவனே இன்னொருவன் மனைவி மீது ஆசைப்பட்டதனால் மண்ணோடு மண்ணாக வேண்டி நேரிட்டது என்பதனைத் தத்துருவமாக வெளிக்காட்டுகிறது. இன்று உலகின் மூலைமுடுக்கள் எல்லாம் பெண்களுக்கான வன்முறையும் பாலியல் கொடுமைகளும் நாளும் நடைபெறுவதற்கு காரணம், இவ்வாறான இலக்கியங்கள் மக்களிடம் சென்று கற்பிக்கப்படுவதில்லை. இராமாயணம், உயரிய நட்பு, சகோதர பாசம் போன்ற நல்ல பழக்கவழக்கங்களை மனிதசமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுகிறது. இதே போன்று உண்மையின் பெருமையினை எடுத்துக்காட்டுகின்றது. இதே போன்று சத்தியத்தின் வலிமையை உணர்த்த அரிச்சந்திர மகாராஜன் கதை நல்ல ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதன் மூலம் உண்மையின் பெருமை எடுத்துக்காட்டப்படுகின்றது. உலகில் வன்முறைகளும் கொடுமைகளும், களவும், சண்டையும் நடந்துகொண்டிருக்கின்ற வேளையில் மகாத்மாகாந்தி அரிச்சந்திர மகாராஜன் படித்த பின் அஹிம்சை வழியில் நின்றொழுகி துப்பாக்கி வேட்டு சத்தத்தின் மத்தியில் இந்தப்பெரிய இந்தியாவிற்கே கத்தியின்றி, யுத்தமின்றி சுதந்திரம் பெற்றுக்கொடுத்திருக்கிறார். இதே போல மனித விழுமியங்களைக் காப்பாற்றுவதற்காக இவற்றை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பக்தி இலக்கியங்கள். இறைவனின் பெயரால் மக்கள் விழுமியங்களும் நெறிப்படுத்தப்படுகின்றன. ஒவ்வோரு மனிதனின் கலாசாரப் பண்புகளுக்கேற்ப இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. பக்தி இலக்கியங்கள் மற்றவர்கள் மீது இரக்கம், கருணை, பாசம் போன்றவற்றை மனிதர்கள்பரஸ்பரம்பரிமாறிக்கொள்ளவே படைக்கப்படுகின்றன.

பக்தி இலக்கியங்களுக்குப் பின்னால் காடு மேடுகளில் அலைந்து திரிந்த மனிதன் கூட்டம் கூட்டமாக வாழப் பழகியதோடு சிறந்த சமூக பழக்கங்களையும் கற்றுக் கொண்டான். இந்த இலக்கியங்கள் ஒவ்வோரு மனிதனது சமூக கலாசார பண்பாடு விழுமியங்களைக் கட்டிக்காத்து வந்திருக்கிறது. இது இன்றளவில் அந்தந்த இனங்களின் வரலாற்றை சமூக பண்பாடுகளையும் பறை சாற்றி நிற்கின்றது. ஆரம்ப காலங்களில் தமிழர்களும், கிரேக்கர்களும் சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டவர்கள் என இவ் உலகிற்குப் பறைசாற்றி நின்றது. கிரேக்கர்களின் இலக்கியங்களான ஓடிசி, ரெலிமாக்ஸ் போன்றவையாகும். இதே போன்று தமிழர்களின் பெருமைகளை பறைசாற்றும் பல இலக்கியங்கள் உண்டு. இதே போன்று ஒவ்வோரு இனத்தவருடைய பெருமைகளைப் பறைசாற்றும் பல இலக்கியங்கள் உண்டு. இவற்றைப்பற்றியெல்லாம் நாம் அறிவது வரலாறு மூலம் ஆகும். இதைவிட மூத்தோர்கள், பல புத்தகங்கள் என்பவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒவ்வோரு மனிதனதும் வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்குகின்றான். அவன் இதைவிட பல்வேறு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்கிறான். ஒவ்வோரு மனிதனும் தனது வாழ்க்கையில் முன்னேற வேண்டும். என்கிற ஆசை ஒவ்வோரு மனிதக்கும் உண்டு.

புவி இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்றது. ஆனால் புவியில் வாழ்கின்ற ஒவ்வோரு மனிதனும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற உணர்வு இருக்கும். புவியில் முதன்முதலாக உயிரிணங்கள் நீரியிலேயே தோற்றம் பெற்றன. பின்புதான் நாகரிகம் வளர்ச்சியடைந்து குரங்கிலிருந்து மனிதன் தோற்றம் பெற்றான். இவ்வாறு நாகரிகம் வளர்ச்சியடைந்து மனிதன் வேட்டையாடி உணவை பெற்றுக் கொண்டான். பின்பு நாகரிகம் வளர வளர மனிதன் முன்னேற்றமடைந்து நவீன காலத்தை வந்து சேர்ந்துள்ளான்.

உலகில் பல வன்முறைகள் நடைபெற்றாலும் அதைச்செய்வதற்கு நாம் அஞ்ச வேண்டும். இதே போன்று உலகில் பல வன்முறைகள் நடைபெற்று வருகின்றன. ஒரு மனிதனால் சட்டத்திற்கு விரோதமாக செயற்படக்கூடாது. இதை மீறிச் சட்டவிரோதமாக செயற்பட்டால் பல தண்டனைகளை அனுபவிக்க நேரிடும். இதற்கு உதாரணமாக குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்ற பழமொழி உண்டு. ஒரு மனிதன் ஆபத்தில் இருக்கும் போது யாரானாலும் நாம் உதவ வேண்டும். இதைவிட நாம் ஒருவர் செய்த உதவியை வாழ்க்கையில் மறக்கக் கூடாது.

இதையே வள்ளுவர் தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக் கொள்வர் பயன் என்று அறிந்தோர் இதேபோல் ஒருவர் செய்த நன்றியை நாம் மறக்கவே கூடாது. இதன்மூலம் நாம் எமது நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கோடு செயற்பட வேண்டும். எமது நாடான இலங்கை மிகவும் புகழ்பெற்ற நாடாகும். இலங்கை புகழ் நிறைந்த நாடு மட்டுமல்ல மிகவும் பசுமைநிறைந்த நாடாகும். இங்கு பல பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றுள் சில திணை, இறுங்கு, இறப்பர், தென்னை, கமுகு என்பவனவாகும். இலங்கை என்பது பல்லின, பன்மத மொழிகளைக் கொண்ட நாடாகும். இந்த நாட்டை முற்காலத்தில் பல அரசர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இதே போன்று இலங்கை பல நாடுகளுடன் வர்த்தக உறவைக் கட்டியெழுப்பியுள்ளது. இப்போது எனது இலங்கை நாடானது மிகவும் வளர்ச்சியடைந்தது நவீனகாலமாக தோற்றம் பெற்றுள்ளது.

இதே போன்று மாணவர்களாகிய நாம் அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு செயற்படவேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் அழியா என் தமிழ்

**வேல் நயன்**
புளியம்பொக்கணை

எனக்கென்று ஒரு தாய்
எனக்கென்று ஒரு மொழி
வேற்றவன் தாயை
தாயென்று அழைத்தாலும்- அவர்
என் தாய்க்கு ஈடாகுமா?




வேற்றவன் மொழியினை
ஏன் என் மொழியாய்
நினைத்து என் தமிழை
இழக்க வேண்டும் நான்

நான் கருவில் உதித்த நாள் முதல்
என் காதில் பட்ட தெல்லாம்
பார் போற்றும் பழந் தமிழ்- அ து
என் தமிழ்
யாரோ பொய்யழகில் பேசிய
ஆங்கிலத்தை சீராட்டி பேசி அதுவே
மொழியென்பர்
ஓராயிரம் மொழி வந்திடினும்
என் தமிழுக்கு ஈடு ஏதாகும்
ஆங்கிலத்தை கற்று தெளிந்திடினும்
பாங்கான பழந்தமிழை மறவாதே

பெற்றெடுத்த தாய்க்குத் தமிழில் அம்மா
வேற்று மொழியில் இதன் மகிமை
வருமா?

உயிர் எழுத்தாய் மெய் எழுத்தாய்
உயிர் மெய் எழுத்தாய்
பயிர் போல் பசுமை மிகு தமிழுக்கு
உயிரான உவமை இல்லை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கென்று ஒரு வழி
உனக்கென்று ஒரு மொழி
ஆதி முதல் தொட்டு
அரசாண்ட மன்னவர்கள்
பேணி வளர்த்த என் தமிழை
கூனிக் குறுகி பேசாது
கூர் கொட்டும் அம்பாக
நேர் நின்று பேசு



தமிழ் என்றும் சாகாது வாழ்ந்திடவே
தமிழ் மன்னன் அதியமான்
தான் பெற்ற நெல்லிக்கனியை
தமிழ்க் கிழவி ஔவைக்கு
மகிழ்வோடு தான் கொடுத்து
வாழ்வாங்கு வாழ வைத்தான்
வல்ல புகழ் என் தமிழை.

தஞ்சைப் பெருங்கோவிலை
தமிழ் எழுத்தால் சிறப்பித்து
விஞ்சு புகழ் தந்தான் இராஜராஜன்

ஆங்கிலமும் அதனை அண்டியதும்
ஆக்கிரமிக்குமா? என் தமிழை
எம் இனம் அழிந்ததே என்று
நம்மவர் நடை தளர்ந்தால்
ஆரத்தழுவும் அழகு தமிழை
ஆர்தான் காப்பது


வீரம் கொண்ட விளங்கு தமிழை
ஓரம் தள்ளி விட்டு விட்டு
தூர நின்று வேடிக்கை பார்த்தால்
வீரம் நிறைந்த என் தாய் பொறுப்பாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவாகிய உறவுகள்





**வே. சபிதா**
**புளியம்பொக்கணை**
**பரந்தன்**

அலைகள் கரைகளைத் தொடும் அழகிய நெய்தல் நிலத்தில் ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள் அமைதியாய் சந்தோசமாய் வாழ்ந்தன. அந்தக் குடும்பங்களுள் ஒன்று தான் அன்ரனி குடும்பம். கிட்டத்தட்ட திருமணமாகி பத்து வருடங்களுக்கு மேல் வரும்- காதல் திருமணம் அன்று எப்படியோ இன்றும் அப்படியே! அதே காதல் அதே பாசம் ஊருக்குள் நல்ல குடும்பத்தை உதாரணம் காட்டுவதாக இருந்தால் எல்லோரும். முதலில் சொல்வது அன்ரனி குடும்பத்தை தான். அன்ரனிக்கும் கொஞ்ச வயது தான். முப்பது வயது. கலகலப்பான பேச்சு பெரியோர்களை மதிக்கும் பண்பு. அத்தோடு நேர்மையானவன் அன்ரனி கடல் தாயே அவர்களின் வாழ்வானவள். றெஜினா அவனின் காதல் மனைவி. நல்ல குடும்பத்திற்கு உதாரணம் இவர்கள் தான் என்றால் றெஜினா எப்படியானவள் என விவரிக்க வேண்டுமா? பொறுமை , நேர்மை, அன்பு என அவளும் அன்ரனியைப் போலவே மனம் படைத்தவள்.

இவர்களின் அன்புக்குக் கிடைத்த செல்வங்கள் இரண்டு பையன். பிறந்து கிட்டத்தட்ட பத்து வருடங்கள் பின்னரே ஒரு பொண்ணு பிறந்திருந்தாள். பையன் றெனால்ட், பொண்ணு றெசிக்கா. றெனால்ட் படிப்பிலும், விளையாட்டிலும் சரி, நல்ல கெட்டிக்காரன். தங்கச்சி என்றால் உயிர். பாடசாலையால் வந்ததும் அவளைத் தூக்குவதும் விளையாடுவதும் தான் வேலை. தங்கச்சிக்கு சொல்லுவான் நீ வேளைக்கு வளர்ந்தால் தான் என்னோட கையைப் பிடித்துக்கொண்டு கடற்கரை மணல் எல்லாம் விளையாடலாம் என்று. அவாவும் ஏதோ விளங்கின மாதிரி அவனின் கதைகளுக்கு எல்லாம் கால் எல்லாம் அடிச்சுச் சிரிப்பா. கடல் ஏறித் தொழில் செய்யும் அன்ரனியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை அமைதியாய் சந்தோசமாய் நகர்ந்து கொண்டிருந்தது. அந்த கடற் கரையோரம் குடியிருந்த குடும்பங்கள் எல்லாம் எவ்வளவோ கனவுகளுடன் சந்தோசமாய் வாழ்ந்தன. அன்று றெசிக்காவின் முதலாவது பிறந்த நாள். நல்ல சந்தோசமாக கொண்டாடினார்கள். உறவுகள் சொந்தங்கள் எல்லாம் சேர்ந்து வந்திருந்தார்கள்.

அன்று நத்தார் கொண்டாட்டமும்; மகிழ்ச்சியோடு மக்கள் கொண்டாடினார்கள். றெனால்ட் அவனது சித்தப்பாவுடன் அன்று காலை அவர்களின் வீட்டிற்கு நத்தார் கொண்டாட்டத்திற்கு சென்று விட்டான். மறு நாள் காலை வேளை... உயிர்காக்கும் கடல் அன்னை உயிர் பறிப்பாள் என யாரும் எண்ணவில்லை. எல்லோரும் தங்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அன்ரனியும் அன்று கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை. வீட்டில் தான் நின்றான் றெஜினா காலை உணவு தயார் படுத்தி கொண்டிருந்தாள். அன்ரனி தன் குட்டி மகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான். திடீர் என கடல் பெரும் சத்தத்துடன் இரையும் சத்தம் கேட்டது. அலறல் சத்தங்கள்... மகளையும் தூக்கிக்கொண்டு எட்டிப்பார்க்க எத்தனிக்கும் அந்த நொடிப் பொழுதில் எல்லாமே அள்ளுண்டு போனது. கடல் தாயின் மடியே தஞ்சம் என குடியிருந்த அந்தக் கடற்கரையோர மக்களை சுனாமி எனும் தன் கோர அலைகளால் கொன்று குவித்தாள். தண்ணீரில் விளையாடிய உறவுகள் கண்ணீரில் மிதந்தன. கட்டடங்கள், வீடுகள், தென்னை மரங்கள் எல்லாம் சரிந்து தரை மட்டம் ஆயின.

சொத்துக்களையும் கடல் கொண்டு போக, செத்த உயிர்களும் ஏராளம். கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில் எல்லாமே கண்ணீர் மயமாகின. பல கடற்கரையோரங்கள் சுனாமியால் இதே நிலையாயின. அந்த ஊரின் அன்புக் குடும்பமும் அலைகளுக்குள் அள்ளுண்டது. எல்லாமே முடிந்து போயின...துயரச் செய்தி கேட்டு சித்தப்பாவுடன் தன் கடலோரம் ஓடினான் றெனால்ட் எதையும் காணவில்லை... வீடிருந்த இடமே தெரியவில்லை. கடல் அலை தந்த எச்சங்களே... அவள் கண்ணீருக்கு எஞ்சியிருந்தன. அலறித்துடித்தான். ஏங்கி அழுதான். “அன்பு அப்பா.....அம்மா என் ஆசைத் தங்கச்சி எங்கே ? “ஐயோ....! எங்குமே மிஞ்சிய உறவுகளின் ஓலங்கள் அலைகளுக்குள் அகப்பட்டு கரைகளுக்கு தள்ளப்பட்ட உயிருக்குப் போராடும் உறவுகள் ஏராளம்.... றெனால்ட்டுக்கும் சித்தப்பாவிற்கும் நீண்ட நேரங்களின் பின், தாயினதும் தந்தையினதும் உயிரற்ற உடல்கள் கிடைத்தன. கட்டிப்பிடித்து கதறி அழுதான். அந்த பிஞ்சு உள்ளம் தன் சொந்தங்களை தண்ணீருக்குள் மூழ்கடித்து விட்டு கடல் அன்னை அமைதியாய் இருந்தாள். தன் தங்கையைத் தேடி அழுதான் எங்குமே அவள் இல்லை. உயிர் வலிக்கும் கணங்கள் உலகமே கண்ணீர் சிந்தியது. தந்தை,தாய் மரண நிகழ்வுகள் முடிய றெனால்டை அவனது சித்தப்பா கூட்டிச்சென்று விட்டார். வாகனம் சட்டென பாதையின் மூலையில் திரும்ப அவன் நினைவுகளும் நிகழ்காலத்திற்கு திரும்பின றெனால்ட் பத்து வருடங்கள் கழிந்து தன் ஊருக்கு வந்து கொண்டிருந்தான். ஆம்...! சுனாமிப் பேரலையின் அவலத்தின் பின் இன்று தான் அவன் ஊர் திரும்புகிறான். சித்தப்பாவுடன் சென்ற றெனால்ட் இன்னொரு உறவுக் காரரின் உதவியுடன் வெளிநாடு சென்று விட்டான். இப்பொழுது நாடு திரும்பி யவன் தன் உறவுகளை இழந்த ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கொண்டிருந்தான். காலங்கள் கடந்திட்டாலும் காலம் தந்த காயங்கள் மறையவில்லை. பழைய நினைவுகள் அவன் நெஞ்சை அடைக்க கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. இப்பொழுது தன் சித்தப்பாவுடன் தான் தன் ஊரிற்கு சென்றுகொண்டிருந்தான். ஊருக்கு சென்றவன் தேவாலயம் சென்று பங்குத் தந்தையுடன் சந்தித்துப் பேசினான். பங்குத்தந்தை அவர்களுக்கு முதலே சினேகித மானவர் சித்தப்பா அவரிடம் வந்த விடயத்தைக் கூறினார்.

தேவாலயத்தின் சிறுவர் காப்பகத்தில் உள்ள சிறுமிகளில் ஒரு சிறுமியை தத்தெடுக்க வந்திருந்தார்கள். தன் உயிர் தங்கையின் நினைவாய் ஒரு தங்கையை தத்தெடுக்க ஆசை. கொஞ்சம் வளர்ந்த சிறுமியாய் சித்தப்பா சித்தப்பா பாது காப்பில் தத்தெடுத்தனர். அதற்குரிய சட்டதிட்டங்களுக்கு அமைய தன் தங்கை இருந்திருந்தால். இப்படித்தானே வளர்ந்திருப்பாள் என எண்ணத்தில் ஒரு சிறுமி தத்தெடுக்கப்பட்டாள். "யான்சி" என்று பங்குத் தந்தை ஒரு சிறுமியை அறிமுகப்படுத்தி அவர்களிடம் ஒப்படைத்தார். அந்த காப்பகத்தில் சுனாமிக்காலத்தில் மீட்கப்பட்ட சிறுமிகள் ஏராளம்; யான்சியும் அப்படித்தான். றெனால்ட்டும், சித்தப்பாவும் யான்சியை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். றெனால்ட் றெசிக்கா என அவளை கட்டி அணைத்தான்.

யான்சியின் கரம் பிடித்த றெனால்ட் கடலோர மணலில் கால் பதித்தான். அன்று " நீ வேளைக்கு வளரனும் அப்பதான் என்ர கையை பிடித்துக் கொண்டு கடலோர மணலில் விளையாடலாம்" என்ற அவனது ஆசை இன்று நிஜத்தில் நடந்தது. ஆனால் உண்மைகள் புலப்படாமல் உண்மை உறவுகள் மீண்டும் உறவாகின. அவள் றெனால்ட் இன் அன்புத் தங்கை றெசிக்காதான். உண்மை தெரிந்தது. கடவுளுக்கும் கடல் தாய்க்கும் அவர்களின் பெற்றோர்களின் ஆத்மாக்களுக்குமே சுனாமிப்பேரலைகள் றெசிக்காவை உயிருடன் கரை தள்ளி காப்பாற்றி விட்டன. ஆனால் அன்று றெனால்டுக்கும், சித்தப்பாவுக்கும் றெசிக்கா கிடைக்கவில்லை. இன்று யான்சியா, றெசிக்கா அண்ணனுடன் இணைந்தாள். கடல் பிரிந்த இரு உறவுகள் கடலோரம் இணைந்து நடந்தன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புற இலக்கியத்தில் எமது வைத்தியமுறைகள்

**சித்த ஆயுர்வேத மருத்துவர்**
**திரு. ந. சிவசுப்பிர மணியம் (வாணி)**
வாணி வைத்திய நிலையம்
விஸ்வமடு.

நாட்டுப்புறவியல் பற்றிய கல்வியில் நாட்டுப்புற இலக்கியம் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றது. நாட்டுப்புற இலக்கியம் என்பது

பழமொழிகள், விடுகதைகள்
கும்மிப்பாடல்கள், கோலாட்டுப்பாடல்கள்
ஒப்பாரிப்பாடல்கள், கதைப்பாடல்கள், தொழிற்பாடல்கள்

போன்ற பலதரப்பட்ட வடிவங்களில் காணப்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியம் என்பது ஏட்டளவில் எழுதப்பட்டதன்று பாமரமக்களின் மரபாக, வாய் மொழியாக எழுந்துரைக்கப்பட்டுள்ளதால் காலத்தால் அழியாத தமிழ் இலக்கியத்தின் பொக்கிஷம் என்று கூறலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. செல்வம் இருப்பவர்களிடம் நோய்கள் அதிகம் ஏற்படுவதே இன்று நாம் காணும் காட்சியாகவுள்ளது. "நோய்க்கு இடம் கொடேல்" என்று பலர் எண்ணி வாழ்ந்தாலும் நோய்கள் நம்மைப் பற்றிக் கொள்கின்றன. இவற்றிற்கு பழைய காலங்களில் பாடல்கள் மூலம் வைத்திய முறைகளையும் அறிய முடிகிறது. இயற்கையோடு இன்புற்று வாழும், வாழ்ந்த மக்களின் அனுபவங்கள் பலவற்றை நாட்டுப்பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இலங்கையில் உடல் நோய்த்துன்பம் நீக்கும். மேன்மையான மருத்துவ முறைகளை இலகுவாக சொல்வளத்தின் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக அறிய முடிகிறது. இவ்வகையான ஒரு சில நாட்டுப்புறப்பாடல்கள்: -

**கை, கால் வீக்கம்:-**

குழந்தைகளுக்குச் சில நேரங்களில் கை, கால்கள் காரணமின்றி வீங்கிக் காணப்படும். எமது வைத்திய முறையில் "கணை" என்ற தைலத்தைப் பயன்படுத்துவோம். இத்தைலம் கடுகு, சுக்கு, வேம்பு இவற்றின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. இதனை உடல் முழுவதும் பூசி இள வெந்நீரில் நீராட்டிவர வீக்கம் குறையும்.

**"கை, கால் வீக்கத்துக்குக் கண்ணே உனக்கு**
**கணை எண்ணெய் நான் தருவேன்**
**மலை போல வந்தாலும் கண்மணியே பனிபோல**
**விலகிவிடும்"**

என்ற தாலாட்டுப்பாடல் மூலம் அறிய முடிகிறது. வளரும் குழந்தைகளுக்கும் பெரும்பாலும் தாய்ப்பால் குறைவாக காணப்படும். குழந்தைகளுக்கும், ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கும் வரக் கூடியதாகவுள்ளதால் வசம்பு, கற்பூரம், நற்சீரகம் இவை கலந்த மருந்தைப் புகட்டிவரக் குணமாகிவிடும்.

**தலைவலி:- (தலைப்பாரம்)**

குழந்தைகளுக்குப் பெரும் வேதனை கொடுக்கும் நோய்களில் இதுவும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலம் நன்கு வெளியேறாமையால் ஏற்படும். கண்களில் இருந்து கண்ணீர் வடியும். நெற்றிசூடாக இருக்கும். காரணம் குழந்தை அடிக்கடி சத்தமிட்டு அழுவார்கள். இந்தப் பாடல்

"மண்டையிடி பொறுக்கலையே - கண்ணே உனக்கு
மருந்துரைத்துப் போடட்டுமா? கோரோசனை கொடுக்கட்டுமா?
கண்ணே உனக்கு குரு மாத்திரை கொடுக்கட்டுமா?
மண்டையிடி தைலம் கண்ணே உனக்கு மாமன் வாங்கிவாராரு
தொந்தரவு செய்யாமல் - என் கண்மணியே தொட்டிலிலே - தூங்கிடம்மா"

என்ற பாடல் மூலம் தலைவலிக்கு ஏற்ற மருந்துகளாக கோரோசனை, குருமாத்திரை, தைலம் போன்றவை கூறப்படுகின்றன. வேர்க்கொம்பு (சுக்கு) உடன் கற்பூரதைலத்தை விட்டரைத்து நெற்றியில் பற்றுப் போடுவதாகவும் கூறப்பட்டுள்ளது. தைலத்தை நீலகிரித்தைலம், கற்பூரத்தைலம், மண் டையிடி தைலம் என்றும் கூறுவர். இத் தைலத்தை வலியுள்ள இடங்களில் மென்மையாகப் பூசிவரக் குணமாகிவிடும். குழந்தையும் நித்திரை செய்யும். கோரோசனை என்பது நமது மருந்து முறையில் தயாரிக்கப்படும் மருந்தாகும். இதனைத் தாய்ப்பாலில் உரைத்துப் பருக்கிவர தலைப்பாரம், நீர்க்கோவை போன்ற நோய்கள் நீங்கும்.

**உடம்புவேதனை:- (வலி)**

குழந்தைகளுக்குச் சில நேரங்களில் உடம்புவலி ஏற்படுவதுண்டு. இவ்வேளையில் குழந்தைகள் தமது உடம் பினை முறித்து (கை, கால்களை அசைத்து) கதறி அழுவார்கள். இதற்கு ஒத்தடம் சிறந்த மருந்தாகும். இதனை இப்பாடல் மூலம்

"உடம்பெல்லாம் நோகுது கண்ணே உனக்கு
ஒத்தடம் நான் கொடுக்கட்டுமா?
ஏலமும் இஞ்சிச்சாறும் கண்ணே உனக்கு
எட்டுச் சொட்டு நான் தருவேன் கண்ணே உனக்கு"

குழந்தைகளைத் தொட்டிலில் அதிக நேரம் விடுவதால் உடம்பில் வலி ஏற்பட்டு புரண்டு புரண்டு அழுவதுண்டு. இதற்கு இரண்டு வகையான மருத்துவமுறைகள் கூறப்படுகின்றது.

வெளிமருந்தாகத் தைலத்தைப் பூசி வெந்நீர் ஒத்தடம் கொடுப்பதாகும். இதில் சிறிதளவு சுகம் ஏற்படும். வெந்நீரைத் தவிர அரிசித்தவிட்டை வறுத்து சூடு ஆறிய பின்பு துணியில் கட்டி வலியுள்ள இடங்களில் ஒத்தடம் கொடுத்துவர பூரணசுகம் ஏற்படும்.

"எண்ணெயில் ஒத்தடமும் கண்ணே உனக்கு
வெந்நீரில் ஒத்தடமும் - இன்னும்
வேறே ஒத்தடமும் கண்ணே உனக்கு
கொடுக்க மாமி வந்திடுவான்"

இதில் எண்ணெய் ஒத்தடம் என்பது வலியுள்ள இடங்களில் தடவி விடுவதாகும். இது வயது வந்தவர்களுக்கு ஏற்படும் வாதநோய்க்கும் சிறந்த மருந்தாகும். இவ்வெண்ணெயில் மூலிகைச்சாறும், மருந்துப்பொருட்களும் கலந்திருக்கும். உள் மருந்தாக உடல்வலிக்கு ஏலக்காய், இஞ்சி இவற்றை அறித்துச் சாறு எடுத்து எட்டுச் சொட்டு தாய்ப்பாலில் கலந்து கொடுத்து வரச் சுகம் ஏற்படும்.

**தொண்டை வலி:-**

கிராமத்து மக்கள் தங்கள் தொண்டை வலிக்கு வேப்பெண்ணெய்க்குப் பதிலாகச் சாராயத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இச் செய்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சானை மதிக்காத பெண்டுகளே - உங்கள்
தொண்டைக்கு என்னடி - கம்மலடி (இருமலடி)
தொண்டை வலிக்குச் சாராயம் - உங்கள்
உடம்பு வலிக்கு வெந்நீரும் அதிக குளிர்ச்சி காரணமாகத் தொண்டையில் இருமல் ஏற்படுவதுண்டு. இக் குளிர்ச்சியை சாராயம் போக்கிவிடும். உடல் வலிக்கு நல்ல சூடான வெந்நீரில் குளியல் முறை நல்ல பலன்களை கொடுக்கும்.

**குடல் ஏற்றம்:-**

குழந்தைகளுக்குக் குடல் ஏற்றம் ஏற்படுவதுண்டு. கவலையீனம் காரணமாகத் தலைகீழாக, அல்லது முறைகேடாகத் தூக்கினால் இது ஏற்படும். இதற்கு மருத்துவம் செய்ய மருத்துவமாது இருந்திருக்கின்றனர். குடல் தட்டுதல் இந்த வைத்திய முறையைக் கையாண்டு வந்துள்ளனர்.

குடலேற்றம் என்றிட்டாலும் கண்ணே என் கண்மனியே
குடல் தட்டுவாள் வந்திடுவாள் என் கண்மணியே
குடல் தட்டிச் சுகம் செய்வாள் என் கண்ணே! கலங்காதே

குடல் ஏற்றத்தால் வயிற்றுஇரைச்சலும் மலம் அடிக்கடி போவதுமுண்டு. இந்நேரத்தில் குழந்தையைக் குப்புறப் படுக்க வைத்து நடு முதுகின் மேல் சாம்பலைத் தடவி விடுவர். இடுப்புப் பகுதியில் இருந்து கழுத்துப் பகுதிவரை உள்ள முள்ளந்தண்டுச் சதையினை. இரண்டு விரலுக்கு இடைவெளிவிட்டு இரண்டு கைகளால் நெட்டி வாங்குவது போல் மடிக்கும் போது "டப்" என்று ஒலி கேட்கும். இவ்வாறு இருமுறை செய்வதைக் குடல் தட்டுதல் என்பர். தற்போது இந்த வைத்திய முறையைக் கிளிநொச்சியில் வைத்தியம் செய்யும் ஒரு பரம்பரை வைத்தியர் திறம்படச் செய்து வருகின்றார்

**வயிற்றுளைச்சல்:-**

வயிற்றுளைச்சல் என்பது வயிறு சம்பந்தமான நோயாகும். இதனால் மலம் நீர் வடிவில் அடிக்கடி வெளியேறும். வெற்றிலையும், உப்பையும் வெறும் வயிற்றில் உண்டு வர இந்நோய் குணமாகும். இம் முறை வயது வந்தவர்களுக்கே உரியதாகும்.

"வயிற்றுளைச்சல் மிஞ்சிப்போச்சு ஐயா உனக்கு
வயிற்று வலி வந்திருச்சா?
வெற்றிலையும். உப்பும் வைச்சு ஐயா நீயும்
வெறும் வயிற்றில் உண்டிடுவாய்"

வயிற்று வலிக்குக் காரணம் அதிக உறைப்பான உணவும். சமிபாடு அடையாத உணவுகளுமாகும். வெற்றிலை உமிழ் நீரைப் பெருக்கி வாயுவை அகற்றுகிறது. இந்த உமிழ்நீர் உணவைச் சமிபாடடையச் செய்தால் சுகம் ஏற்படும்.

"மாதுளம் பிஞ்சு. தென்னம் பிஞ்சு நல்ல
மாவிலைக் கொழுந்துடன் தானரைத்தே
சூதுளைப்பிள்ளை கருந்த கழிச்சல் அகலுமென்றே
கும்மியடியுங்கடி"

என்ற கும்மிப்பாடல் மூலம் அறிய முடிகிறது. மாதுளம் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, மாவிலைக் கொழுந்து இவற்றைச் சம அளவில் எடுத்து நன்கு நீர் விட்டு அரைத்து குன்டுமணி அளவு எடுத்து குழந்தைகளுக்கு கொடுத்து வர பூரண சுகம் ஏற்படும்.

**நாரிவலி:-**

இது பொதுவாகப் பலருக்கு ஏற்படுவதுண்டு

"சுக்குடன் முக்கா வேளை இரண்டையும்
சுகமாய்க் காய்ச்சி அருந்திடவே
நாரிவலி தீருமென்று சிரித்துச் சிரித்துக்
கும்மியடியுங்கடி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கும்மிப் பாடல் பக்கவலிக்கும், நாரிவலிக்கும் மருந்து உரைக்கின்றது. முக்கா வேளை என்பது ஒருமூலிகை இதன் வேரை சுக்குடன் கலந்து நன்கு சூடாக்க வேண்டும். ஒரு வேளை நீர் விட்டு நன்றாகக் காய்ச்ச வேண்டும். நன்கு வற்றிய பின்பு காலை நேரம் பருகி வர சுகம் ஏற்படும்.

**பிரசவ வலி**

பெண்கள் வாழ்வில் ஏற்படும் வேதனை பிரசவ வலி என்பர். அவர்கள் இந் நேரத்தில் அடையும் வேதனைக்கு ஈடு எதுவும் இல்லை. அதனாலேயே தாய்மையைப் போற்றுகின்றோம்.

பட்டினத்தடிகளும் "அங்கமெல்லாம் நொந்து பெற்று" என்றார். இரு உயிர்கள் பிரிவு நேரம். இதற்குச் சில முன்னேற்பாடுகளைச் செய்வர். பலவித மருந்துகளை உண்ணக் கொடுப்பர். மருத்துவமாதை அழைப்பர். இதனை தாலாட்டில்

எனது செல்ல மகளுக்குச் சிறு வயிறு நோகுதென்று
வாராளே மருத்துவிச்சி தங்க ரதம் ஏறி
கசாயம் குடிக்காமல், கடைச்சரக்கு வாங்காமல்
வெந்நீர் குடியாமல் இந்த வேந்தனைப் பெற்றெடுத்தாள்.

குழந்தைப்பேறு பார்க்கும் மருத்துவ மாது ஊருக்கு இருவர் இருப்பர். இவர்கள் வந்து குழந்தையை எளிதில் பெற்றெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

முக்காலி கொண்டு வந்து முன்னாலே தான் போட்டாள்
ஈத்துக்கயிறு கொண்டுவந்து எதிரிலே தான் போட்டாள்
முக்காலி மேல் இருந்து ஈத்துக்கயிறு தான் பிடித்தாள்.

இவ்வாறு சில ஏற்பாடுகளை மருத்துவ மாது செய்வார். இவர்களுக்கு கல்வி அறிவு இல்லாவிட்டாலும் அனுபவ அறிவு அதிகம் உண்டு. குழந்தையை எளிதில் பெற்றிட வெந்நீர் குடிக்குமாறும், அன்றி கசாயம் காய்ச்சிக் கொடுப்பர்.

**கண்வலி**

"தென்னம் காயை திருகி இட்டுச் சிறு பயிற்றைப் பருப்பாக்கி
சேர்த்துண்ணக் கண்வலி தீரு மென்று சொல்லிக் கும்மி
சித்திரப் பெண்ணே அடியுங்கடி" என்ற கும்மிப்பாடலில் கண்வலிக்கு மருந்து கூறப்பட்டுள்ளது. பாசிப்பயிற்றை வறுத்துடைத்துப் பருப்பாக்கி பின்னர் அதை நன்கு வேக வைக்க வேண்டும். முற்றிய தேங்காயை உடைத்துத் துருவி இதனுடன் பருப்பையும் கலந்து உண்டுவரக் கண்வலி குணமாகும்.

**வயிற்று வலி:-**

"பருத்த தேங்காயைத் திருகிப் பிட்டுச் செய்து
பற்படாகத்தை உரமாக்கி திருத்தமாகவே
தின்றால் இருவேளை வயிற்றுவலி தீருமென்றே
கும்மியடியுங்கடி"

நன்கு முற்றிய தேங்காயைத் துருவி அத்துடன் பற்படாகம் என்ற மூலிகை யையும் சேர்த்து நன்கு வேகவைத்து மருந்து தயார் செய்ய வேண்டும். இதனைத் தினமும் இருவேளை உண்டு வந்தால் வயிற்றுவலி குணமாகும்.

**வசியம் (மருந்து போடுதல்)**

சில கிராமங்களில் "வசியமிடுதல்" என்ற வழக்கம் இப்போதும் நடைமுறையில் இருந்து செயற்பட்டு வருகிறது. ஆண்களை மயக்கிடப் பெண்களும், பெண்களை மயக்கிட ஆண்களும் இம் மருந்துகளைப் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி மறைந்த எழுத்தாளர் "டானியல்" அவர்கள் சில உண்மைகளை கற்பனையில் கலந்து பல சிறுகதைகளை எழுதி உள்ளத்தையும் நாம் நினைவில் வைக்க வேண்டியுள்ளது.

"காடை கழுத்தறுத்து கௌதாரி பித்து எடுத்து
கோழிக் குடல் எடுத்து கூட்டுறாளம் கைமருந்து
சாதிக் கோழியை அடிச்சி - எந்தன் குட்டி
சாறு நன்கு காய்ச்சி வச்சு
நல்லெண்ணெய் கூட ஊற்றி
நடத்துநாளம் கை மருந்து"

இதனை அருந்தியவர்கட்டு மயக்கம், மறதி, தன்னிலை மறத்தல், பிதற்றல் போன்ற குணங்குறிகள் ஏற்படும். சில கிராமங்களில் மருந்து விழுத்தல் என்ற வைத்தியமும் நடைபெறுகிறது.

**மருத்துவ நம்பிக்கைகள்:-**

மருத்துவம் தொடர்பாகச் சில நம்பிக்கைகள் நாட்டில் வருகின்றன. இது பற்றி ஒரு நாட்டுப்பாடல் மூலம் அறிய முடிகிறது. ஒரு சிலருக்கு ஒரு சில நோய்களை அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் கூடுவதும், குறைவதும் உண்டு. கை, கால் வீக்கம் அமாவசை அன்று அதிகமாகும் என்ற நம்பிக்கையை,

**"அம்மாவாசை போயிடுச்சு கண்ணே நீ
அஞ்சவேண்டாம் ஒண்ணுக்குமே நீ"**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. நோய்களைத் தெய்வங்கள். நீக்குமென்று நம்பிக்கை பழைய காலம் தொடக்கம் இன்று வரை நடைமுறையில் நம்பி வருகின்றோம்.

செல்வ சந்நிதியான் சந்திக்குக் கண்ணே நாம்
தை மாதம் போய் வருவோம்
மொட்டை வழித்து நாம் நேர்த்திக் கடன் நிறைவேற்றி
வருவோம் கண்ணே!

நோய் வசப்பட்ட மனிதன் உடலில் நோய் குணமாக இயற்கையான ஒரு முறை செயப்படுகிறது. அதில் நம்பிக்கை சேரும் போது குணமாகும் முறை வேகமடைகிறது. நம்பிக்கை நம்மை வாழவைக்கும்.

**கண்திருஸ்டி:-**

குழந்தையைப் புதியவர்கள் யாரும் பார்த்துப் பெருமூச்சு விட்டால் குழந்தைக்குத் திருஸ்டி ஏற்படுமென இப்போதும் நம்பி வருகிறார்கள். எனவே கண்ணேறு கழிக்கும் வழக்கம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

**மண்ணிலே விழுந்தாலும் விழலாம் - சிலர் கண்ணிலே விழக்கூடாது** என்பது பழமொழி. மனிதனது கண்பார்வைக்கு அழிக்கும் சக்தி உண்டு.

"கண்ணா - கண்ணார்க்கு கண்நோக்கம் வாராமல்
சுந்ணாம்பும், மஞ்சளும் சுற்றி
ஏறி கண்ணார்க்கு
வேப்பிலையும், மஞ்சளுமாய் வீசி கண்ணார்க்கு:

குழந்தைக்கு கண்ணேறு, கழிப்பு அடிக்கடி செய்வதுண்டு. மேற்கூறியவாறு வீதியில் எறிவதால் கழிந்து விடுவதாகக் கருதுகின்றனர்.

தற்போது பலவகையான பாடல்கள் வெளிவந்து கொண்டிருக்கிறது அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

அன்றைக்கு நாம் வாழ்ந்த நலமான வாழ்விழந்தோம்.
இன்றைக்கு நாட்டில் எங்கே திரும்பிடும்
புற்றுநோய் எங்கிருந்து புதிதாக முளைத்தது?
மற்றும் சில உணவுகளில் மரணத்தைத் தேடுகின்றோம்.

மண்வீட்டில் வாழ்ந்தாலும் மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம் இப்போ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வீட்டில் சலரேகம்
முடக்கில் கொலஸ்ரோலாம்
பின் வீட்டில் பிறஷர், பக்கத்தில் பக்கவாதம்
என் வீட்டில் எப்போது என்ன வரும் நானறியேன்.

தகரத்தில் அடைத்ததுவும், பிளாஸ்டிக்கில் நிரப்பியதும் நிகரற்ற பொருள் என்று நீட்டி முழக்குகின்றோம். நகரத்து வாழ்க்கைக்கு நாளாந்தம் பழகியதால் நுகரும் பொருள் எல்லாம் நோய் சேர்ந்தே வாங்குகின்றோம். மீண்டிடுமா அந்தக்காலம்?

நெல்லரிசி, வரகரிசி, சாமை, தினை, குரக்கன் என்று பல்வேறு தானியங்கள் பக்குவமாய் பயிரிட்டு பொல்லா நோய் அத்தனையும் பொசுக்கியது அக்காலம்.

நாட்டுக்கோழி வறுத்து நற்சீரகம் சேர்த்து கூட்டிக் குழம்பாக்கி குடும்பம்மாய் உட்கார்ந்து பாட்டி வைத்தியத்தில் பசி தணித்ததக்காலம் உலகத்தில் பலபேரும் உணராத மருத்துவத்தை சுலபத்தில் சொன்னார்கள் நம்முன்னோர் சொன்னவற்றில் சிலவற்றைப் பேணும் நாம் சிந்தித்து வாழ்ந்திருந்தால் பலவற்றை தவிர்த்திருப்போம் பலமோடு வாழ்ந்திருப்போம்.
(மருத்துவர் கதிரேசபிள்ளை தர்ஷனன்)

இறுதியாக ஆயுர்வேதம் பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். எமது பாரம்பரிய விழுமியங்களை எமது சமுதாயம் மறந்து விடுவது வேதனைக்குரிய விடமாகிறது. தனக்கென்று வாழ்வதில் மனித இனம் முன்னணியில் நிற்கிறது. ஆனால் தாவரங்கள், மூலிகைகள் எங்களைப் பயன்படுத்தி உங்கள் உடல் நல பேணுங்கள் அன்று வளர்கின்றன. ஆனால் நாம் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் பலவகையான நோய்களினால் பாதிப்புள்ளாகின்றோம்.

இயற்கை விதி முறைகளை மதித்து நாம் வாழ்ந்தால் மருந்துகளை எண்ணிப் பார்க்காத, நோய்களற்ற இன்பத்துடன் சுகவாழ்வு வாழலாம்.

நோய்களுக்கும், துன்பங்களுக்கும் நாம் முடிவுகளைக் காண வேண்டும். கோபம், ஆத்திரம், பொறாமை இவைகளை விட்டொழிக்க வேண்டும். மன அழுத்தம் என்ற சூழ்நிலையில் இருந்து மனம் விடுதலை பெற வேண்டும்.

இயற்கையை ரசித்து இயற்கையாகக் கிடைக்கும் உணவுகளை உண்டு அதனோடு ஒன்றிணைத்து மனித நேயத்தை மதித்து வாழப் பழக வேண்டும். ஆரோக்கியம் வெறும் வாத்தைகளாலோ, மருந்து மாத்திரைகளாலோ பெற்று விடக் கூடியதல்ல. நோய் தீர்க்கும் நல்ல மருந்துகள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் சித்தர்களால் ஆராய்ந்து சொல்லப்பட்டதை உணர்ந்து மூலிகைகளை மதித்து வாழ்ந்தால் நோயின் பிடியிலிருந்து தப்பி நூறு வருடங்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும். சித்த ஆயுர் வேத மருந்துகள் எந்தவித பக்கவிளைகளையும் ஏற்படுத்தாதவையாகும் என்பதையும் நாட்டுப்புற இலக்கிய மூலம் விளக்கி அகமகிழ்வு அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் கொண்ட தொடர் நாடகம் (குறுங்கதை)

றோ. வராகினி தரம் 10
கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி

ஆத்ம சாந்திப் பூஜைகள் நிறைவேற நெஞ்சு கனத்த நினைவுகளுடன், விழி நீர் ஆறாகப்பாய; வாய் திறந்து ஓலமிட்டு. புலம்பல் காற்றிட ஓங்கி ஒலிக்க கோயில் கதவு வழியாக கையில் அர்ச்சனைத் தட்டுடன் வெளியே வருகின்றாள் பவானி. அவளைத் தாங்கியவளாக அயல் வீட்டுப் பரிமளம், நிலானி, கமலம், குறவஞ்சி... பட்டியல் நீளம், பெயர் சொல்லி மாளாது. கணவன் கணேஷ் கண்ணீர் மல்க வெள்ளாடையுடுத்தி பூ நூல் அணிந்து ஆத்மாவுக்கு அர்ப்பணம் செய்து விட்ட எண்ணற்ற கற்பனைகளைத் தொலைத் தவனாக வெறும் சூனியத்துள் மாண்டு போனவனாக, வானத்தை வெறித்தவனாய் வாழ்விலே சலிப்படைந்தவனாக, இனியென்ன வாழ்க்கை என்றவனாக கால்கள் பின்ன; நடையிழந்து, மூச்சுறும் நிலைக்கு மீண்டெழுந்து பலமிழந்து, மூச்சுறும் நிலைக்கு மீண்டெழுந்து நடையாக வந்து கொண்டிருக்கிறான்.

பவானி ஊரிலுள்ள படித்த பெண்களில் ஒருத்தி. பெரிதாகப் படிக்காவிட்டாலும் ஆங்கிலம், சிங்களம், ஓரளவு தெரியும், அழகும் அறிவும், எதையும் நிதானித்து செயற்படுபவள். உயர்கல்வி வாய்ப்பு அவருக்கு கை நழுவிப் போனது. காதல் திருமண வலையில் சிக்க வைத்தது. ஊர் பேர் தெரியாத கணேசனை கை பிடித்தாள். ஊராரின் இம்சை தாங்காது கணவனின் ஊருக்குக் காலியானாள்....

"யானைப் புலவு" பெயருக்கேற்றாற் போல் மாலை மங்கியதும் ஊர் அவலமடையும், குரல்ஒலி, வெடியொலி, மணியொலி, இருள் மயம் ஆளைப் பயமுறுத்தும், யானைகள் சாரி காட்டி அணி நடை பயிலும் இடையிடை மரண ஓலங்கள் செவிடுபடுத்தும், வாழ்வுக்குள் சாவு, குண்டுச்சட்டிகள் குத்துக்கரணம் வீழ்வதும் எழுவதும் பழகிப் போனது, பவானியும் யானைப் புலவின் மகளானாள். சேர்ந்து வந்த சொந்தங்கள் பலமாகின. காலம் சுழன்றது. நாட்கள் விரண்டன. யானைப்புலவு சேனைப்புலவானது. பாட்டாளிகள் கூட்டாளியாயினர். குடிசைகள் மறைந்தன. ஒற்றையடிப் பாதைகள் கொங்கிறீட் கண்டன. வீதியோர நிழற்குடைகள், பாலையடி, அரசடி, பனையடி தச்சன் தோப்பு எல்லாம் சாய்க்கப்பட்டன. மின்சார விநியோகம் ஊரெல்லாம். மிளிர்ந்தன. நல்லதே நடந்தது. காடுமேடு, களனி, எல்லைகள் கடந்தும் வசந்தம் வீசியது. இருளுக்குள் உறங்கிய விழிகள், மின்னில் மிளிர்ந்தன. ஊருக்குள் நகரமே நகரத் தொடங்கியது. சில்லறையாய்ச் சேர்த்த உண்டியல் பணமெல்லாம் நடமாடும் பண்டக சாலையாலும் ஓசியில் லீசிங்கிலும் கரையத் தொடங்கியது. கைபிடித்து, கால் தொட்டு, காசின்றி தேவையெல்லாம் வீட்டு வாசலில் தேவையறிந்து உதவி செய்து உயிர் பறிக்கும் என யார் அறிவார்.

கட்டுப்பணத்தில் கணேஷ் கட்டார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்தான். காசு வரும் வழி தெரியாது வந்தது. T.V, குளிர்சாதனப்பெட்டி தேவையெல்லாம் குவிர்ந்தன. பவானி T.Vயில் தஞ்சமானாள். ஓர் பிள்ளை, ஆண்பிள்ளை; தனிப்பிள்ளை, அவளுக்கே ஒன்று பெயர், கபில், வல்லவன்; நல்லவன், துடிப்புள்ளவன், தாய் சொற் கேட்பவன், தரம் 04ல் படிப்பவன். படிப்பில் சுட்டி, சிரிக்கின்ற போது பலர் வருவர். ஊர் கூடியது, உறவாடியது.

லீசிங்கில் ஓர் T.V மிகப் பெரிது. காலை தொடக்கம் சாமம் வரை தொடர் நாடகங்கள் குழுவாகப் பார்ப்பதுவே பவானியின் முதற்கடமை. தொடரைப் பார்ப்பது, விமர்சிப்பது, அழுவது என தொடர்ந்து, சமையல் செய்வது, சிற்றுண்டி செய்வது, தேனீர் கொடுப்பது வரை பட்டியலிடப் பட்டது. ரமணி, ராணி, ருக்மணி, பிரகலா இன்னும் பல பேர் அடக்கம்.

அன்று மதியம் இழவுக்கு நாட்குறித்த வேளை, அம்மாவென ஓடிவந்தான் கபில் பீங்கானில் போட்டிருக்கு போய்ச் சாப்பிடு; சாப்பிட்டு உடன் கிளம்பு ரியூசனுக்கு என்றவள் களைத்தே போனாள். "சீரியல்" குழுவினரின் கலகலப்பு சலசலப்பு. ரீவிஇன் தொண தொணப்பு, கபில் பின்வாசல் புறமாக சென்று கிணற்றடியில் கால் வைத்தான். களைப்புத் தீர நீர் குடிக்க அந்தோ... கிணற்றுக்குள்ளே கபில்....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நீதிமன்ற பதவனியும் நியாயாதிக்க செயற்பாடுகளும்

**சசிகரன் நளாயினி**
பட்டதாரிப் பயிலுனர்.

"நீதியின் கருவியே சட்டம்" என்றும்; சட்டத்தின் பயன் நீதி என்றும் ஆதிகாலங்களில் இருந்து சமூகங்களால் நம்பப்படுவதுடன் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதனாலேயே சட்ட ஆட்சியைக் கொண்டுள்ள நாடுகளில் நீதிமன்றங்களின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. நீதிமன்றங்கள் பிணக்குகளை பக்கச்சார் பற்றறு சட்டத்திற்கிணங்க தீர்மானிக்க வேண்டும். அவ்வவாறு செயற்படுவதற்கு நீதிமன்றங்கள் தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் சமனிலைக் கட்டுப் பாட்டுடன் கண்காணிப்பின் கீழ் செயற்பட வேண்டும் என மொண்டஸகியூவின் வலுவேறாக்கக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. நீதித்துறையினுடைய சுதந்திரமானது எமது அரசியல் அமைப்பில் வெளிப்படையாக உறுப்புரை 111 இ(1)ன் ஊடாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதுள்ள நீதிமன்றங்கள், மேல்நிலை நீதிமன்றங்கள், கீழ் நிலை நீதிமன்றங்கள் என இருவகையாக வகைப்படுத்தலாம். அறிவியல் அமைப்புச் சட்டத்தினாலும் நீதிமுறைச் சட்டத்தினாலும் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களின் அமைப்புக்களை (Structure of the courts) நோக்கின்

(I) உயர் நீதிமன்றம் (Supreme court)

(II) மேன்முறையீட்டு நீதிமன்றம் (Court of appeal)

(III) மேல் நீதிமன்றம் (High court)

மாகாண மேல் நீதிமன்றம் (Provincial High court)

IV) மாவட்ட நீதி மன்றம் (District court)

V) நீதவான் நீதிமன்றம் (Magistrat's court)

VI) ஆரம்ப நீதிமன்றம் ( Primary court)

**ஆரம்ப நீதிமன்றம்** ( Primary court)

நீதிமன்ற கட்டமைப்பில் இவ் நீதி மன்றமே மிகவும் கீழ்நிலை நீதிமன்றமாகும். இதன் நியாயாதிக்கங்கள் பொதுவாக நீதவான் நீதிமன்றத்தினாலேயே பிரயோகிக் கப்படுகின்றன. இங்கு சிறிய குற்றங்களை விசாரிக்கலாம். அக் குற்றங்களுக்காக தண்டனை 250 ரூபாவுக்கு உட்பட்டதும் அல்லது மூன்று மாதத்திற்குட்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கலாம். குடியியல் நியாயாதிக்கங்களாக 1500 ரூபாவிற்கு குறைவான கடன், நட்டஈடு மற்றும் உரிமைக் கோரிக்கைகளை விசாரிக்கலாம். பிரிவு 66இன் கீழான வழக்குகளில் காணி ஒன்றின் அனுமதி சீர்குலையக் கூடிய சந்தர்ப்பங்களில் அவ் வழக்கை மாவட்ட நீதிமன்றம் விசாரணை செய்த நிரந்தர தீர்ப்பினை வழங்கும் வரை ஒரு தற்காலிக முடிவை எடுக்கும் அதிகாரமுண்டு. ஆரம்ப நீதிமன்ற தீர்ப்பில் திருப்தியடையாதவர் அம் மாகாணத்தில் உள்ள மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதவான் நீதிமன்றம்** (Magistrat's court)

இவ் நீதிமன்றத்தில் அதிகளவான வழக்குகள் பொலிசாரினால் நடத்தப் படுவதனால் இது பொலீஸ் நீதிமன்றம் எனவும் அழைக்கப்படுகிறது. நீதவான் நீதிமன்றத்துடன் தொடர்புள்ள சட்டக் கோவைகளாவன தண்டனைச் சட்டக்கோவை (Penal code) மற்றும் நீதியற் சட்டம் (Judicature Act) ஆகும். இவ் நீதிமன்றானது நீதியியற் சட்டத்தினால் உருவாக்கப்பட்டுள்ளதுடன் சுருக்கமுறையான விசாரனையே இடம் பெறும். அதாவது பாரதூரமான குற்றங்களை மேல் நீதி மன்றத்துக்கு எடுத்துக் கொள்வதற்கு போதியளவு. சான்றுகள் உள்ளனவா என்றும் மேல் நீதி மன்றம் விசாரிக்கத் தகுதியானதா என்றும் முகத் தோற்றளவில் விசாரனைணசெய்து அவ்வாறு காணப்படுமாயின் மேல் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

பொலீசாரினால் நடவடிக்கை எடுக்கப் படாவிடின் தனிநபரும் வழக்கு தாக்கல் செய்ய முடியும் மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் வன இலாகா அதிகாரி, விவசாய திணைக்கள அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர் மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் குற்றச்சாட்டுப் பத்திரம் (Charge sheet) மூலம் வழக்கு தாக்கல் செய்யலாம்.

இவ் நீதிமன்றில்ல் 2 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் 1500ரூபாவுக்கு மேற்படாத தண்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை விசாரிக்கும் தத்துவம் உடையது. நீதவான் தேடுதல் ஆணைகளை வழங்கு வதுடன். திடீர் இறப்புக்கள் மற்றும் மரணத்தின் காரணம் அறியப்படாமல் கண்டுபிடிக்கப்படும் உடல்கள் தொடர் பாகவும் விசாரணைகள் மேற்கொள்வார். பிடியாணை பிணை வழங்கப்படும். ஆனால் மரணதண்டனையால் அல்லது ஆயுள் தண்டையால் தண்டிக்கப்படும் குற்றங்களுக்கு நீதவான் பிணை வழங்க முடியாது. மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரித்தல் மற்றும் தொழில் நியாயசபை, கடன் இணக்க சபை, காதி நீதி மன்றம், முதியோர் பாதுகாப்பு அதிகாரசபை, நட்டஈடு ஆணையாளர், தொழில் ஆணையாளரின் கட்டளைகள் or முடிவுகளை அமுல்படுத்தல்.

**மாவட்ட நீதிமன்றம்** (District court)

ஆரம்ப குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றமாகும். இங்கு கொண்டுவரப்படும் வழக்குகளில் பெரும்பான்மையானவை காணி தொடர்பான வழக்குகள் மற்றும் பிரிவிடல் வழக்குகள், வாடகை குடியிருப்பாளரை வெளியேற்றல், உரித்தை பிரகடனம் செய்தல், பாதை உரிமை மற்றும் காணி மீதான ஏனைய உரித்து தொடர்பானவையாகவே காணப்படுகின்றன. மாவட்ட நீதிமன்றானது மரணசாதனை வழக்கு, நம்பிக்கைப் பொறுப்பு, இறைவரி, கடன் மீளப் பெறல், கவனமின்மையால் ஏற்படுத்தப்பட்ட நட்டம் மான நஸ்டம் போன்ற விடயங்களில் நியாயாதிக்கத் தினைக் கொண்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றம் குடும்பம் தொடர்பான பல்வேறு விடயங்களை விசாரித்து தீர்ப்பதினால் இது குடும்ப நீதிமன்றம் (Family court) எனவும் அழைக்கப்படுகின்றது. விவாகரத்து, திருமணவலிதுடமை, திருமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதிமீறல், பிள்ளைகளின் கட்டுக் காவல், பராயமடையாதோர் அல்லது சித்தசுவாதீனமற்றோர், சொத்து பராமரிப்பு, சட்பூர்வ பிள்ளைகள் அல்லது சட்டபூர்வமற்ற பிள்ளைகள் என பிரகடனம் செய்தல் மற்றும் திருமணபதிவு சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்ளல், மேலும் கட்டாணை மற்றும் நிரந்தர தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியும். மேன்முறையீடு தொடர்பாடல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

**மேல் நீதிமன்றம்** (High court)

எல்லாக் கடுமையான குற்றவியற் குற்றங்களுடனும் தொடர்பான ஆரம்ப நியாயாதியக்கத்தைக் கொண்டுள்ளது. இங்கு வழக்கு தொடரும். பத்திரம் குற்றப்பகர்வு (Indictment sheet) எனப்படும். இப் பத்திரம் மூலம் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும். அத்தடன் சில விடயங்களில் இலஞ்ச ஊழல் ஆணையாளர். பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் வழக்கு தொடர்வர். இங்கு மூன்று வழிகளில் வழக்கு விசாரிக்கப்படும். தனியொரு நீதிபதி விசாரணை செய்வார், அல்லது யூரர் விசாரனை இடம் பெறும் அல்லது நீதாய விளக்கம் (Trial - At - Bar) நடைபெறும். குற்றம் சாட்டப்பட்டவரின் விருப்பத்திற்கு அமையவே யூரர் விசாரணை முடிவு செய்யப்படும். இத்தகைய யூரர் சபையின் அறங்கூறுனர் எண்ணிக்கை 07. அத்துடன் நீதிபதி ஒருவரும் அவ்விசாரணையில் காணப்படுவர். இவ் நீதிமன்றம் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற விடயங்களை விளக்கித் தீர்க்க நியாயாதிக்கமுடைய மன்றாகும். பின்வரும் விடயங்கள் தொடர்பில் நியாயாதிக்கம் உடையது.

- இலங்கையின் முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில்.
- இலங்கையின் ஆள்புல மேற்பரப்பில் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில்.
- இலங்கையின் வான்வெளியில் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில்.
- ஆழ்கடலில் புரியப்பட்டதான தவறொன்றுக்கு நாடுகளின் சட்டத்தால கடற்கொள்ளை எனக் கருதக்கூடிய குற்றம்.

இலங்கையின் பதிவு செய்யப்பட்டதான ஏதேனும் விமானம் அல்லது கப்பலில் ஒருவரால் அல்லது அவை தொடர்பில் புரியப்பட்ட குற்றம்.

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒவ்வொரு மாகாணத்திற்கும் கூறப்பட்ட நியாயாதிக்கத்துடன் மாகாண மேல் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று மேல் நீதிமன்றம் வர்த்தக மேல் நீதிமன்றாக ஆக்கப்பட்டு கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ் விசேட நீதிமன்றமானது மாவட்ட நீதிமன்றத்தின் சுமைகளைக் குறைப்பதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

**மேன்முறையீட்டு** நீதிமன்றம் (Court of Appeal)

மேன்முறையீட்டு நீதிமன்றமானது இறுதியான முறையீட்டு நீதிமன்றாகும். இவ் நீதிமன்றமானது அனைத்து மேன்முறையீடுகள், மீளாய்வு, எழுத்தாணை நியாயாதியக்கங்களைக் கொண்டுள்ளது.

**உயர் நீதிமன்றம்** (Supreme court)

உயர்நீதிமன்றுக்கு பிரத்தியோக நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத்துறை, நிர்வாக துறையின் செயலினால் ஏற்படும் அடிப்படை உரிமை மீறல்கள், அரசியல் அமைப்புக்களை பொருள் கோடல் செய்தல் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புடன் முரண்படும் சட்டமூலங்கள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஏதாவது சட்ட நடைமுறைகள் அல்லது பொதுஜன வாக்கெடுப்புடன் செல்லுபடி தனிமை, பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறுபவர்கள் தொடர்பில் விசாரணை செய்து தண்டனை வழங்குவதாகும். சட்டத்தரணிகளை இணைத்துக் கொள்வது அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அகற்றுவதும் இதன் செயற்பாட்டில் ஒன்றாகும்.

நீதிமன்றங்களானது மக்களுக்கு இறுதியான பாதுகாப்பு இடமாகவும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மீறல்களைத் தடுக்கவும் சமூக ஒழுங்கை நிலைநாட்டவும் உயர்ந்த நிலையில் இருக்கும். நம்பிக்கைக்குரிய அமைப்பாக இருக்கிறது. அரசுகளை நடைமுறைப்படுத்துவனவாகவும் அரசினால் மக்களையும் பாதுகாப்பதற்கும் என சுதந்திரமாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நீதித்துறை எப்போதும் சுதந்திரமாக செயற்பட வேண்டும். அப்போது தான் சமூகங்களில் சட்டமும் நீதியும் பக்கம் சாராமல் நடுநிலையாக தொழிற்பட முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முன்னோர் வாழ்வியலில் நல்லாட்சி (நாடகம்)

**திருமதி ப. வைரமுத்து**
ஓய்வுநிலை அதிபர் - தரம் II
ஆதாரம்: பெரியபுராணம்

**காட்சி -1**

**இடம்:** அரண்மனை அநபாயச் சோழன் வழிவந்த மனுநீதி கண்டசோழன் அரண்மனை.


**உறுப்பினர்கள்:** மனுநீதி கண்ட சோழன், அவனது பட்டத்து அரசி, மந்திரிகள், பிரதானிகள்

**அரசன் :-** முதலமைச்சரே, குடிமக்கள் நிறைவாக குறையேது மின்றி மகிழ்வோடு உள்ளார்களா?

**அமைச்சர்1 :-** ஆம் மன்னா, தங்கள் ஆட்சியில் நிறைவைத் தவிர குறையேதும் உள்ளதா? மனுதர்மத்தின் படி நாட்டைப் பரிபாலித்து தங்களது பெயரையே மனுநீதி கண்ட சோழன் எனப் பெயர் பெற்றவர் அல்லவா தாங்கள்?

**அமைச்சர்2:-** தங்கள் மகன் வீதி விடங்கன் சகல அரச கலைகளிலும் தேர்ச்சி பெற்று இளவரசராகும் தகுதி பெற்ற சிங்கக் குட்டியை ஒத்தவர் அல்லவா. குடி மக்களுக்கு அவரும் இனியவராகவே உள்ளார். தங்களது இயல்புகளை உடைய இளவரசரை ஈன்றெடுத்த தாங்களும் தேவியாரும் இவுலகம் உள்ளவரை போற்றப் படுவார்கள் பிரபு.

**அரசன் :-** யான் அவனை மகனாகப் பெற்றது யான் செய் புண்ணியத்தின் பயன் எனவே எண்ணுகின்றேன். அவனும் குடிமக்களைத் தன் கண்களைப் போல் காத்திடுவான்



என்பதை நான் அறிவேன். அல்லாமலும் பணிவு, உண்மை, இறைபக்தி வீரம் யாவற்றிலும் அவன் சிறந்து விளங்குவதைக் கண்டு யாம் பெருமிதம் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபையில் ஒருவர் :-** மன்னா, குடிமக்கள் தங்கள் குறைகளைக் கூறித் தீர்வு பெறும்படியாக, எந்நேரத்திலும் அவர்கள் தம்மைக் காணும்படியாகக் காட்சிக்கு எளியவராக, தாங்கள் ஒழுகுவதையிட்டு யாம் பெருமை கொள்கிறோம் மன்னா.

**சபையில் இன்னொருவர் :-** மக்கள் குறையேதுமின்றி வாழ்கிறார்கள் ஆதலால் தங்களின் வாயிலில் கட்டப்பட்டிருக்கும் குறைகேள் ஆராய்ச்சி மணிகூடப் பாவனையின்றிக் கிடக்கிறது பிரபு.



**காட்சி 2**

**இடம்:** அரசலாந்தெரு

**உறுப்பினர்கள் :** வீதி விடங்கள், அவனது தோழர்கள், சேனைகள் மங்கள வாத்தியம் இசைப்போர், துதிப்பாடல் பாடுவோர் பெண்கள் (வீதி விடங்கள் அரசலாந்தெருவில் மாடவீதி வழியாகத் தேரோட்டிச் செல்கிறான். சேனைகள் அவனைச் சூழ்ந்து வர, மங்கல வாத்தியங்கள் இயம்ப, துதிப்பாடல்கள் பாடிப் பெண்கள் சூழ்ந்து வர அத்தெரு ஆரவாரம் மிக்கதாக விளங்குகின்றது.) அதனூடே எவரும் அறியாதவாறு ஓர் அழகிய இளம் பசுங்கன்று எதிர்பாராதவிதமாக தெருவினூடே ஓடிவந்து இளவரசன் ஓட்டி வந்த தேர்ச்சக்கரத்தினூடே புகுந்து இறக்கிறது. தாய்ப்பசு அது கண்டு கதறித் துடிதுடித்து நடுக்குற்று துன்பப்படுகிறது.

**வீதி விடங்கன் :-** ஆ, ஒரு பெரும் அபாயம் நேர்ந்து விட்டதே. நான் என்ன கொடிய செயலை இவ் இளம் பசுக்கன்றுக்கு இளைத்து விட்டேன். எனது தந்தையின் பெருமையை அழியச் செய்யவா? யான் அவருக்கு மகனாகப் பிறந்தேன்? இது காறும் நான் ஒரு நல்லவன் என்ற எனது உள்ளுணர்வின் பெருமை அழிந்து போனதே. (தேரிலிருந்து விழுகிறான்)

**தோழன்1 :-** இளவரசே, நடந்த சம்பவத்திற்கு ஏதாவது பரிகாரம்வழி தேடுவோம்.

**வீதி விடங்கள் :-** (பசுவின் துயர்கண்டு சகிக்க மாட்டாதவனாக இறந்த பசுக் கன்றைப் பார்த்து உயிர் பதைத்து விம்முகிறான்) வளர்ந்து சிறந்து விளங்கும் இவ்வுலகைக் காக்கும் மாபெரும் மன்னராகிய மனுநீதிச் சோழன் எனும் என் தந்தைக்கு பழியைச் சுமத்தவோ நான் மகனாகப் பிறந்தேன்.

**தோழன் :-** இளவரசே, இது அறியாமற் செய்த குற்றமாகும். வேதநூல் உணர்ந்த அந்தணர் கூறும் பிராயச் சித்தம் செய்வதே இதற்குத் தீர்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோழன்2 :-** ஆம், இளவரசே அவ்வாறு பிராயச்சித்தம் செய்வதே முறையாகும்.

**இளவரசன் :-** எனது தந்தை எனும் பெரியோன் இதை அறிவதற்கு முன் அந்தணர் கூறும் பிராயச்சித்தம் செய்து வந்துற்ற இப் பழியை நீக்குவேன். (இளவரசன் பிராயச்சித்தம் செய்யும் வழி தேடிச் செல்லல்)

**காட்சி 3**
**இடம்:** அரண்மனை

**உறுப்பினர்கள்:** அரசன், அமைச்சர்கள், பிரதானிகள் (கன்னற இழந்த தாய்ப்பசு துன்பம் தாங்க ஒண்ணாது அரண்மனை வாயிலில் மக்களின் குறைகேட்பதற்காக கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை தனது கொம்பினால் ஆட்டி அடிக்கின்றது.)

**அரசன் :-** (திடுக்குற்று) ஆ, ஆராய்ச்சி மணிச் சத்தம் (அரசன் அரியாசனத்திலிருந்து குதித்து ஓடி அரண்மனை வாயிலை அடைதல்.)

**அரசன் :-** இதுவரை மணியடித்து முறையிடக் குறையுடையோர் யாரும் இல்லாதிருந்தனரே. இன்று யாருக்கு என்ன குறை நேர்ந்தது.

**வாயில் காவலன் :-** இந்தப் பசு எங்கிருந்தோ ஓடி வந்து, தூங்கிய இம் மணியை கொம்பினால் அசைத்து அடித்தது மன்னா..

**அரசன் :-** (பசுவின் துயர் கண்டு மனம் வருந்தி) அமைச்சரே, இப் பசு இங்கு வந்து முறையிடும்படியாக அதற்கு நேர்ந்த குற்றம் குறை என்ன?

**அமைச்சர் :-** சோழ மன்னவனே, தங்கள் தவப்புதல்வன வீதி விடங்கன் தன் மணித் தேரில் ஏறி தேர்ப்படைகள் புடைசூழ அரசுலாந்தெருவில் போகும் போது இப்பசுவின் இளங்கன்று தானாகவே ஓடிவந்து தேர்க்காலினூடே புகுந்து இறந்தது. அதனால் மனம் தளர்ந்த இப்பசு இங்கு வந்து நீதி மணியை அடித்தது பிரபு.

**அரசன் :-** (அக் கொடிய செய்தியைக் கேட்டு விஷம் தலைக்கேறினாற் போல் அறிவிழந்து) என் ஆட்சி நன்று, நன்று பிற உயிரையெல்லாம் என் உயிரைப் போல் காத்து உலகை ஒரே நீதியுடன் பரிபாலிக்கும் எனது ஆட்சி நன்று, நன்று. இத் தாய்ப் பசுவின் துன்பத்தை யான் எவ்வாறு நீக்குவேன்?

**அமைச்சன்1 :-** மன்னர் பெருமானே, மனம் தளர வேண்டாம். பசுவதை செய்தவர்க்கு பரிகாரம் உண்டு. வேதம் உணர்ந்த அந்தணர் சொல்லும் விதிமுறையில் பிராயச் சித்தம் செய்வதே முறையாகும். அதுவே வழக்கமுமாகும்.

**அரசன் :-** வழக்கமென்று நீர் கூறும் பிராயச்சித்தம், கன்றை இழந்து பரிதவிக்கும் பசுவின் துயரை நீக்குமா? சாஸ்திர வழி சொல்லும் இப் பிராயச் சித்தம் எனும் போலித்தனத்துக்கு நான் சம்மதிப்பேனாகில் தருமம் தான் சலியாதோ? மாநிலம் காக்கும் மன்னவன் ஆனவன்தன்னாலும்தன்பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வர்களினாலும் கொடிய மிருகங்களினாலும் ஏனைய உயிர்களினாலும் வரும் துன்பங்கள் களைந்து தன் உயிர் போல் மன் உயிர்களையும் காப்பவன் அல்லனோ?

**அரசன் :-** யான் என் புதல்வனை இழந்து விடுவேன் எனக் கருதி பிராயச்சித்தப் பரிகாரத்தைக் கூறுகிறீர், இவ்வாறு கூறுவது மந்திரிகளின் வழக்கம் தான். இன்று என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வன் செய்த பாதகத்திற்கு வெறும் பிராயச் சித்தம் செய்யச் சம்மதித்து விட்டு நாளை அந்நியன் ஒருவன் ஒரு உயிர் கொல்வானாயிருந்தால் அவனுக்கு எவ்வாறு கொலைத்தண்டனை விதிக்க இயலும். மனுதர்மத்தின்படி அரசாள வேண்டிய நான் என்னால் மனுதர்மம் அழிவுற்றது என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவேன் அல்லனோ? இவ்வாறு குறுக்கு வழி கூறுவது மந்திரிகள் இயல்பே.

**அமைச்சர்1 :-** அரசே, இத்தகைய நிகழ்ச்சி இதற்கு முன்பும் நடந்திருக்கின்றது. இதற்காகத் தங்கள் அருமை மகனை இழக்க முயல்வது மரபல்ல. தொன் நிலங் காவலரே, வேத விதிப்படி பரிகாரம் செய்வதே தொன்று தொட்டு வரும் பழமையான நெறியாகும்.

**அரசன் :-** (கோபித்து), அமைச்சரே, பழுதான நீதியைக் கூறாதீர். நேர்மையான உண்மை நிலையைச் சிந்திக்காமல் கூறுகிறீர். இதற்குமுன் இவ்வாறான நிகழ்ச்சி எங்கே நடைபெற்றது? இவ்வுலகில் எப்பசு இத்தகைய பெரும் துயரால் பெருமூச்சுவிட்டுக் கதறி நீதி மணியை அடித்தது? ஆகையால் என் அருமை மகனைத் துணிந்து கொல்வதே முறையாகும். தேவர்கள் போற்றும் இத்திருவாரூரில் பிறந்த ஓர் உயிரை என்மைந்தன் கொன்று விட்டான்.

**அரசன் :-** கன்றினை இழந்து பரிதவிக்கும் இப் பசுவின் துயரை அகற்ற முடியாத நான் இத் தாய்ப்பசுவைப் போலவே என் மகனையும் இழந்து துயரப்பட வேண்டும். அதுவே தருமமுமாகும். (அமைச்சர்கள் மனம் வருந்தி மன்னனின் உறுதிப்பாட்டை நினைந்து யாதும் பேசாதிருக்கின்றனர்)

**அரசன் :-** காவலனே, எனது மகனை அழைத்து வருவீராக. அமைச்சரே, பசுவின் கன்று இறந்த அதே வீதியில் வீதி விடங்கனைக் கிடத்தி அவன் மீது தேரைச் செலுத்திக் கொல்லக் கடவீர். (அச் செயலைச் செய்ய மனமில்லாத அமைச்சர் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார்)

**அரசன் :-** மகனே, வீதிவிடங்கா நீ செய்த பாதகச் செயலுக்குத் தண்டனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

**வீதி விடங்கன் :-** ஆம் தந்தையே, நீதி நெறிப்படி அரசாண்டு வந்த மனுகுல தர்மம் என்னால் அழிந்து போகக் கூடாது. தொன்மையான இப்பூஉலகை ஆளும் அரசரே தங்கள் சித்தம் என் பாக்கியம். (அரசனாகிய மனுநீதி கண்ட சோழன் தன் அருமை மகன் மீது தேரைச் செலுத்திக் கொல்கிறான்)


(இறைவன் காட்சி கொடுத்து, பரந்து பட்டு உயர்ந்து வளர்ச்சி பெறும் இப்பூ உலகில் நீதி நெறி காப்பாற்றப்பட வேண்டிய முக்கியத்தை உணர்த்தவே இவ்வாறு நடைபெற்றது என பசுவின் கன்று மனு நீதி கண்ட சோழனின் மகன், அமைச்சர் யாவரையும் உயிர் பெறச் செய்தல்)
இவ்வாறான நல்லாட்சியில் எம் முன்னோர்கள் வாழ்ந்தார்கள். மொழி, இன, மத, சாதி பேதமின்றி மனிதன் வாழ இனியும் ஒரு காலம் வருமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் காட்டும் நட்பு

ராஜா செல்வநாதன்





மெய்யான நட்பு என்பது மிகவும் பரிசுத்தமானது, பவித்திரமானது. நட்பு என்ற சொல்லுக்கு கேண்மை, தோழமை, சிநேகிதம் என்றெல்லாம் மறுபெயர்கள் உண்டு.

தரையில் மனித இனம் தோன்றிய காலம் முதல் இற்றை வரை நட்பு என்கிற உறவுக்கு தனிச் சிறப்பு உண்டு. ஏட்டில் பலவாறு புகழப்படும் நட்பு, மூழ்காத Ship ஏ Frindship தான் என்று பாட்டிலும் புகழப்படுகின்றது.

அடிப்படையில் இருவரின் குணாதிசயங்கள் ஒத்துப்போகாத இடத்து அந்நட்பு நீடித்து நிலைப்பது அரிது. எமது தொழில் வளர்ச்சி, பாதுகாப்பு இவற்றுக்கும் கல்வி உயர்ச்சிக்கும் அன்னை, தந்தை, உடன் பிறப்பு போல, அறிவுரை கூறி வழிகாட்டும் ஆசிரியர் போல, கைமாறு கருதாது என்றும் உதவுகின்ற நண்பர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதேவேளையில், நண்பர் என்ற பெயரில் கூடிப்பழகிவிட்டு பின் குழிபறிக்கும் குணமுடைய குள்ளநரிகளும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

மெய்யான நட்புப் பற்றியும், பொய்மை யான நட்புக் குறித்தும் பொய்யாமொழி தருகின்ற கருத்துக் கருவூலங்களை இங்கு காண்போம்.

தன்னந்தனியாக ஒருவன் தன் பகையோடு போரிட்டவாறு நிற்கும் போது, அந்த சமயத்தில் அவனுக்கு உதவியாக இராது. அவ்விடத்தை விட்டு விலகி ஓடும் அறிவு கெட்ட அவனது குதிரையைப் போன்ற நண்பரின் உறவினைப் பார்க்கிலும் நமக்கு தனிமையே மேலானது என இக் குறள் கூறுகின்றது.

**“அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லாமா அன்னார் தமரின் தனிமை தலை”**

(அமரகம்-போர்க்களம், கல்லாமா- அறிவி லியான குதிரை, தலை - மேலானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் காணுமிடத்து, ஒருவரைத் தனியே அழைத்துக் கூறுவதற்கும், பலர் மத்தியில் பழிப்பதற்குமிடையே பாரிய வேறுபாடுண்டு.

ஆளிடைத் தொடர்பு (Interpersonal Commnuication) சம்பந்தமான இந்த விடயத்தில் அக்கறை காட்டாததால், பொறுப்பான பதவிகளிலமர்ந்து முகாமைத்துவம் புரிவோர்கூட, தம் கீழ் பணிபுரிவோரின் வெறுப்பையே சம்பாதித்துக்கொள்வதனைக் கண்கூடாக நாம் காண்கின்றோம்.

அதுபோல, எவருமில்லாத போது அன்பாகப் பழகிவிட்டு, அனைவரும் அமர்ந்திருக்கக்கூடிய ஒரு அவையிலே, பழித்துரைக்கும் பான்மை கொண்டவரின் கேண்மையைச் சிறிதளவு கூட அணுகாமல் கைவிட்டு விடுதல் வேண்டுமென்கிறது இக்குறள்.

**"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் அனைக்கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு"**

(குறுகுதல் - விட்டுவிடுதல், மனைக்கெழீஇ - மனையில் அன்புடன் பழகி, மன்றில் பழிப்பார் - சபையில் இழித்துப்பேசுவார்)

உதவிகேட்டு தன்னிடம் நாடி வரும் அன்பருக்கு அவ்வுதவியை ஆற்றக்கூடியதான நிலையில் அமர்ந்திருந்தும் கூட, அதனை ஆற்றாது, தட்டிக்கழிக்கின்ற வெறும் பாசாங்குக்கார நட்பினை ஒன்றும் சொல்லாமலே அப்படியே கைவிட்டுவிட வேண்டும் என்கிறது வள்ளுவம்.

**"ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை சொல்சூடார் சோர விடல்"**

(ஒல்லும் கருமம் - இயலக்கூடிய காரியம், உடற்றுபவர் கேண்மை - நடித்து வருபவர் நட்பு)

பானையிலே சோறிருந்தால் சொந்தம் கொண்டாடுகின்ற பூனையைப் போலவும், அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போலவும், பயன் கிடைக்கும் போது மட்டும் நட்புறவு செய்து, ஒன்றும் கிடைக்காத போது, எட்டடி விலகிச் செல்லும் போக் குடையவரின் நட்பினைப் பெறுவதால் எமக்குக் கிடைக்கும் பயன் என்ன என்று கேட்கிறது இக்குறள்.

**'உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என்"**

(உறின் நட்டு - பயன் கிடைத்தால் நட்புக்கொண்டு, அறின்ஒரூஉம் - அது கிடைக்காத போது விலகுகின்ற. இங்கு 'ஒப்பிலார்' என்பது புகழ்ந்து பின் தாழ்த்தும் பொரு ளில் வந்துள்ளது.)

உடலால் வில் போல வளைந்து, முகஸ்துதி பேசி, குழைந்து பேசி, மனத்தால் கொடியவனானவனின் நட்பையிட்டு நாம் அஞ்சி நடந்தல் வேண்டும். அதனை,

**'முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா வஞ்சரை அஞ்சப் படும்'**

(இனிய, இன்னா - இவை எதிர்ப்பொருள் தரும் பதங்கள்)

படிப்பு வேறு, பண்பு வேறாக நாம் பலரை எம் வாழ்நாளில் பார்க்கின்றோம். நயம்பட நல்ல நூல்கள் பல கற்றாலும் கூட, பயன் தரும் நற்குணப் பண்புகள் அவரிடம் இல்லாதிருப்பது, திருந்தியமனம் அவருக் கில்லை என்பதைக் காட்டு கிறது.

**'பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லார் ஆகுதல் மாணார்க்கு அரிது'**

என்கிறது குறள்.

எம்முடன் அதிக நட் புக் கொண்டிருப்பது போல எக்கச் சக்கமாக நடிப்பார்கள். ஆனாலும், தம் உள்ளத்தினுள்ளே எம்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி இகழ்வாகவும், தாழ்வாகவும் நினைப்பார்கள். அத்தகையவருடைய நிலையை அறிந்து, அத்தகைய கெட்ட நட்பினைக் கைவிடவேண்டும். இவ்வாறு வள்ளுவர் வாய்மொழியாக மலர்வது குறள்.

**'மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லல் பாற்று'**
(நகச்செய்து - சிரித்து, நட்பினுள் சாப் புல்லல் - அந்நட்புக்கெட விலகுதல்)

கூடா நட்புப்பற்றி கூறிப்போந்த வள்ளுவர், நற்பாங்கான நட்புப் பற்றியும் நன்கு இங்கு நவில்கிறார்.

இவர் இந்த விதத்திலெல்லாம் எமக்கு உதவி புரிந்துள்ளார், அன்புகாட்டியுள்ளார் என்றெல்லாம் ஒரு உண்மை நட்பினைப்பற்றிப் புனைந்து பேசுவது கூட அதற்கு இழுக்குத் தருகின்ற குறைபாடான விடயமாகும் என்கின்றார் வள்ளுவர்.

**'இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்என்னும் நட்பு'**
(புல் - சிறுமை, இனையர் - இத்தகையவர்)

அடுத்து, பலரும் மேற்கோள் காட்டுவதும், நட்புக்கு இலக்கணம் கூறுவதுமான குறள் ஆகும்.

**'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு'**
(உடுக்கை - உடை, இடுக்கண் - துன்பம்)

ஒருவரின் ஆடை அவரையறியாமல் நழுவுகின்றபோது அவரது கை உடனே விரைந்துசென்று அவரது சங்கடத்தைத் தீர்த்து வைக்கின்றது. அதுபோல துன்பம் வரும்வேளையில், விரைந்து சென்று தானாகவே உதவுபவன் உண்மையான நண்பன். அருமையான உவமையுடன் அழகாக உரைக்கின்றார் வள்ளுவர்.

அறிவுடையவர்களை நண்பர்களாகக் கொண்டோமெனில் அது வளர்பிறை போல வளர்ந்து செல்லும் தன்மையுடையது என்றும், அறிவில்லாதவர்களின் நட்பு தேய்பிறைபோலத் தேய்ந்து போகும் என்றும் காட்டும் குறள் இதுவாகும்.

**'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு'**
(நிறைநீர நீரவர் - அறிவு நிரம்பிய தன்மையுடையவர், கேண்மை - நட்பு)

உற்றநேரத்தில் ஊன்றுகோலாய் நின்று உதவுபவன் உண்மையான நண்பன். நாம், பாடுபடும் தொழிலுக்கு பாதுகாப்பாக இருந்து, நம்மை வீழ்ந்துபடாமல் காக்கின்றவன் அவனே. இதனை,
**'செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல**
**வினைக்குஅரிய யாவுள காப்பு'**
என்கின்றார் வள்ளுவர்.
(செயற்குஅரிய யாவுள நட்பின் - மெய்ந்நட்பு ஒன்றைப்போல செய்தற்கு பயனுடையது என்ன உண்டு.)

**'முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு'**

வெளியே புன்னகை பூத்து வெறுமனே பழகுவது நட்பல்ல. இதயத்தில் மாறாமல் என்றும் அன்புடன் இருப்பதே நட்பு என்கிறது இக்குறளோவியம்.

மேலும் ஆராயாமல் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் நட்பு தவறு என்றும், அதுவே வாழ்நாளில் எமது வீழ்நாள் வரையும் கேடுதருவதாயும் அமைவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை**
**கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்'**
(கடைமுறை - கடைசியில், தான்சாம் - சாகும் போதும்)

நட்புக்கு இலக்கணமாய் அமைந்தோரை நாம், காவியங்களிலும், வரலாறுகளிலும் காணமுடிகிறது.


கண்ணனும், குசேலனும் தம் இளமைக் காலத்தில் கொண்டிருந்த நட்பானது, இறுதிக் காலத்திலும் எண்ணரிய அற்புதங்களை நிகழ்த்துகின்றது. கங்கைக்கரை ஓடக்காரனாக இருந்த குகனும், இராமனும் கொண்டிருந்த நட்பு, கானகம் சென்ற இராமனுக்கு அவனது கஸ்டங்கள் குறையக் காரணியாக அமைகிறது.

பாரதத்தில் துஷ்டன் என்று துரியோதனன் பலவாறாகக் கூறப்பட்டாலும், சில உயர்ந்த குணஇயல்புகளுக்கு அவன் உறைவிடமாகவும் இருக்கின்றான்.

ஊர், பேர் தெரியாத அநாதை என்றும், தேரோட்டியின் வளர்ப்பு மகன் என்றும், பெரியவர்கள் நிறைந்த அவையின் முன்னே துரோணர் என்கின்ற வில்வித்தை ஆச்சாரியார் இழித்துரைத்து கர்ணனைக் கேவலப்படுத்தியபோது, அந்த ஷத்திரிய குலத்துக்கு சமனான கர்ணனை அறிவித்ததுமன்றி, அங்கதம் என்ற நாட்டுக்கே அதிபதியாக்கினான் துரியோதனன். அவ்வாறு பிரகடனம் செய்ததனாலேயே கர்ணன் வில்வித்தை பயிலவும், பின்பு ஒரு காவியநாயகனாக மிளிரவும் முடிந்தது.

தன் செஞ்சோற்றுக் கடனுக்காக மட்டுமன்றி தான் செங்கோல் ஏந்தவும் காரணமான ஆளுமை மிக்க தன் நண்பனின் உண்மை நட்புக்காக, தேவர்களினது வஞ்சகமான செயல்களால், வரங்களும் பறிபோன நிலையில் கடைசிவரை எதிரிகள் தன் தம்பிமார்கள் என்று தெரிந்த நிலையிலும் கூட, கனத்த இதயத்துடன், கர்ணன் என்ற மாவீரன் களமாடி உயிர் துறந்தான். அதனால் பாரதத்திலும் அவன் பகலவன் போலவே பிரகாசிக்கின்றான்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Palm

# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வ.து

# KILINOCHCHI PALM DEVELOPMENT CO-OPERATAIVE SOCIETY (LTD).




ஏ9 வீதி,கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
A9 ROAD, KARADIPPOKKU JUNCTION, KILINOCHCHI.
REGISTER NO. : PA-50 (08.03.1972)
**T.P : 021 228 3632 / 021 492 4218 / 021 492 4217**
e.mail : kilinochchipalamcoop50@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikana Printes - Jaffna